


யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
வணிக மாணவர் மன்றம்.

# வணிக சுரபி

இதழ் -4 2004

இதழாசிரியர்கள்

செல்வன்.ம. கன்னதாசன் , ஸ்ரீ. ரமேஸ்


வணிக மாணவ மன்றம்

*யா / மானிப்பாய் இந்துக்கல்லூரி*

*மானிப்பாய்.*

# கல்லூரிக் கீதம்

வாழ்க நம் நாடு வாழ்க நம் பள்ளி
வாழிய வாழியவே



அருந்தமிழ் மொழியும் ஆங்கிலக்கலையும்
ஆரிய மொழியுடன் வளரும்
விருந்தெனப் போற்றும்
விஞ்ஞானமும் இங்கே
வியனுற வளர்ந்தினி தோங்கும்

மானிப்பாய் இந்துக்கல்லூரி வாழ
மாணவர் ஆவன செய்வோம்
கனவிலும் மறந்திட கருதோம்
வானமளந்த தமிழ்மொழி போல
வாழிய வளமுடனென்றும்
கலையே பெறவே உழைப்போம்
நிலையிது பெற உழைப்போம்



# அதிபரின் ஆசிச் செய்தி

வணிக இதழ் வளம் பெறுக................

எமது கல்லூரி வணிக மன்ற மாணவர்களது நன்முயற்சியால் ஒரு சஞ்சிகை பிரசுரிக்கப்படுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தங்கள் திறன்களை வெளியிடும் ஒரு சந்தர்ப்பமே இதுவாகும்.

இவ்வணிக மலரை வெளிவிடுவதில் உழைத்த ஆசிரியர்களையும், மாணவர்களையும் வாழ்த்துகிறேன். மேலும் ஒவ்வொரு வருடமும் வணிக மலரை வெளிவர வேண்டுமென ஆண்டவனை பிரார்த்திக்கின்றேன்.

**கனகசுந்தரம் ஜெகநாதன்**
**அதிபர்**




# பிரதி அதிபரின் வாழ்த்துரை



மனித இனத்தின் புனித சின்னங்களாகிய நாகரீகம் பண்பாடு கலாசாரம் என்பவற்றை நன்கு பாதுகாத்து வளர்த்து வருவன கல்லூரிகள். வாழும் மக்களை மனநிறைவுடனும் இன உணர்வுடனும் காணவிரும்பிய உத்தமர்கள் காலத்துக்கு காலம் இடத்துக்கு இடம் தோன்றி இவ்வகையான கல்லூரிகளைச் ஸ்தாபித்தும் வளர்த்தும் வந்துள்ளனர். வணிக மலர் வெளியீட்டு விழா எடுத்து மகிழும் மானி இந்து மாதாவும் இவ்வாறான நல்லெண்ணத்துடன் மனித மாணிக்கங்களினால் நிறுவப்பட்ட ஒரு கல்வி ஸ்தாபனம் என்பது யாவரும் அறிந்ததொன்றே.

இந்துக்கல்லூரியின் வணிக மன்றத்தினரின் நன் முயற்சியினால் "வணிக சுரபி" நான்காவது மலர் மலர்கிறது. நுண்மாண் நுளைபுலம் மிக்கோரின் கட்டுரைகளையும் மாணவர்களின் ஆக்கங்களையும் தாங்கி சான்றோர் வாழ்த்த மலர்கின்றது. இம்மலர்வால் இக்கலைக்கூடம் அறிவுப் பட்டொளி வீசி திக்கெல்லாம் புகழ் பரப்ப எல்லாம் வல்ல திருவருளை இறைஞ்சி வாழ்த்துகிறேன்.



***வே. தம்பாபிள்ளை***
பிரதி அதிபர்
மானிப்பாய் இந்துக் கல்லூரி





# வலயக்கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி


பெருமை சேர் மானி இந்துவின் வணிக மன்றம் பெருமையுடன் வெளியீடு செய்யும் வணிக சுரபியை வாழ்த்துவதில் நிறைவடைகிறேன். மானி இந்துவின் பொற்காலமதை திரும்பிப் பார்க்கிறேன். ஆங்கிலமும் தழிழும் சரளமாகப் பேசப்படும் எழுதப்பட்டும் வந்த காலமது. தீர்க்க தரிசனம் மிக்க கல்விமான்களாக மாணவர்களை உருவாக்கிய காலமது. பல்கலைக்கழகங்களில் அனைத்துப் பீடங்களிலும் மானி இந்துவின் மைந்தர்கள் முத்திரை பதிந்த காலமது. இடப் பெயர்வால் இருளடைந்து இன்று மீண்டும் புதுப்பொலிவுடன் மானி இந்துவின் மைந்தர்கள் பல் துறையிலும் மிளிரும் நிலையில் வணிக சுரபி ஒரு மைல்க்கல். வணிக மன்றத்தினரின் வணிக சுரபி வணிக மாணவர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. ஆசிரியர் வழிகாட்டலில் மாணவர் ஆக்கங்கள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படுகின்றன. யாழ்மண்ணில் பின்தங்கிய நிலையை போக்கடிக்க ஆசிரியர்களும், மாணவர்களும் ஒன்றிணைந்து விரைந்து செயற்பட வேண்டியுள்ளது. அத்தகய உத்வேகத்துடன் நாலாவது மலரான வணிக சுரபி அறிவுத்தேடலின் உன்னத படைப்பாக வெளிவருகின்றது. இம்மலரை வெளியீடு செய்ய ஆக்கமும், ஊக்கமும் அழித்த மானி இந்துவின் அதிபர் திரு.க.ஜெகநாதன், மானி மண்ணின் பெருமைமிகு உப அதிபர் திரு. வே.தம்பாப்பிள்ளை, நன்னெறியில் மாணவரை வளர்த்தெடுக்கும் பகுதித்தலைவர் திரு.வ. ஸ்ரீகாந்தன், சிரேஷ்ட ஆசிரியர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன். மீண்டும் புதுப்பொழிவுடன் இயங்கும் 2005 வணிக மாணவர்கள் ஏனைய மாணவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்து மானி இந்துவிற்குப் பெருமை சேர்க்க வாழ்த்துகின்றேன்.



*திருமதி . றெஜினா இருதயநாதன்.*
*வலயக்கல்விப்பணிப்பாளர்*
*வலிகாமம்.*

# முன்னாள் அதிபரின் ஆசியுரை

"வணிக சுரபி" மலர் வெளிவருவதை இதயபூர்வமாக வாழ்த்தி வரவேற்கின்றேன் மாணவர்கள் தங்கள் தனித்துவமான செயற்பாட்டை இம்மலர் வெளியிடாக தருகின்றார்கள்.வணிகக் கற்கை நெறியென்பது ஒரு சமூக தர்மமாக வளர வேண்டும். ஏனெனில் வைஷ்ணவ தர்மம் என்பது எமது இந்து தர்ம மரபுக்குரியது. பொருளுட்பத்தியும் பொருட்பகிர்வும் தான் சமூக செந்நெறிவழி இயங்கக் காரணமாகிறது. இவ்வகையில் சுய சிந்தனையுடன் கல்விகற்று ஒரு புதிய சமுதாயத்தைத் தரும் தலைமுறையாக மாணவர்களை நான் எதிர்பார்க்கின்றேன். இருண்ட பாதாள உலகை நோக்கி அழைத்துச் செல்லும் கொடிய சூழ்நிலைகளுக்கிடையே நல்ல சிந்தனை நன்றியுணர்வு நல்லதை அடையாளம் காணும் ஒரு புதிய தலைமுறையின் வெளியீடாக இம்மலர் வெளிவருவதையிட்டு என் இதயபூர்வமான வாழ்த்துக்களை என்றும் மகிழ்வுடன் வழங்கிநிற்கின்றேன்.



*முன்னாள் அதிபர்*
*குமாரசாமி. சண்முகநாதன்*

# முன்னாள் அதிபரின் ஆசியுரை

மானிப்பாய் இந்துக்கல்லூரி வணிக மாணவர் மன்ற வெளியீடு நான்காவது வணிக சுரபி மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன். நான் அதிபராக இருந்த காலத்தில் முதலாவது வணிக சுரபி மலர் வெளியிடப்பட்டது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி வணிகத்துறையில் வளர்ச்சி அடைவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன் 1910 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 2010 ஆம் ஆண்டு நூற்றாண்டு விழாவைக் காண இருக்கின்றது. ஆகையால் அதற்கான முன்னேற்பாடுகளை உடனடியாகவே அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தற்போதய அதிபர். திரு. க. ஜெகநாதன் அவர்களை வேண்டிக்கொள்கிறேன். தற்போதய அதிபர் மிகவும் அமைதியாகவும் சகலரையும் அரவணைத்து நடத்தக்கூடிய ஆற்றல் உடையவர்.

வணிக சுரபி மலர் சிறப்பாக வெளிவர மருதடி விநாயகரை வேண்டிக்கொள்கிறேன்.



*செ. கேசவராயன்*
*இளைப்பாறிய அதிபர்*
*மானிப்பாய் இந்துக்கல்லூரி*
*மானிப்பாய்*

# மன்ற செயற்குழு

| | | |
|---|---|---|
| காப்பாளர் | :- | திரு. க. ஜெகநாதன் |
| பொறுப்பாசிரியர் | :- | திரு. வி. யோகேஸ்வரன் |
| தலைவர் | :- | செல்வன். ம. ஜோயின்சன் |
| செயளாளர் | :- | செல்வன். நா. ஜொஜீபன் |
| உபதலைவர் | :- | செல்வன். சி. றஜீவன் |
| உபசெயளாளர் | :- | செல்வன். நா. பிரகாஸ் |
| பொருளாளர் | :- | செல்வன். த. தவபாலன் |
| இணை இதழாசிரியர்கள் | :- | செல்வன். ம. கண்ணதாசன் |
| | | செல்வன். ஸ்ரீ. ரமேஸ் |

## விளம்பரக் குழு

செல்வன். பு. இந்திரகாசன்
செல்வன். க. துஸ்யந்தன்
செல்வன். சு. ஈசன்
செல்வன். சி. ராஜ்வதனன்
செல்வன். பே. அஜந்தன்
செல்வன். க. ஜெயதீபன்
செல்வன். த. சண்முகப்பிரியன்
செல்வன். த. நிர்மலதாஸ்
செல்வன். கி. நிர்மல்
செல்வன். கி. கல்கிராச்





# வணிக மாணவ மன்றச்செயற்குழு

**இடமிருந்து வலமாக இருப்பவர்கள்:**

வ.ஸ்ரீகாந்தன்(பகுதித்தலைவர்). ம.கண்ணதாசன் (இதழாசிரியர்). வே.தம்பாப்பிள்ளை (உப அதிபர்). ச.தவபாலன் (பொருளாளர்). க.ஜெகநாதன் (அதிபர்) ம.ஜோயின்சன் (தலைவர்). வ.ஜோகேஸ்வரன் (பொறுப்பாசிரியர்). நா.ஜொஜீபன் (செயலாளர்). ச.தேவராஜா (ஆசிரியர்). ஹ.ரமேஸ் (இதழாசிரியர்). ம.கிருஸ்ணராஜா (ஆசிரியர்)

**இடமிருந்து வலமாக நிற்பவர்கள்: 3ம் நபரிலிருந்து 14ம் நபர்வரை(3-14)**

S.சுஜீவன். ஜெ.நிஜந்தன். கி.கல்கிராஜ். செ.சுரேஸ்குமார். க.துஸ்யந்தன். ச.அமல்ராஜ். கி.நிர்மல். சு.ஈசன். நா.பிரகாஸ் (உப செயலாளர்). நா.வல்லீசன். க.ஜெயதிபன். P.வினோதன். சி.ராஜ்வதனன். த.நிர்மலதாஸ்

**சமூகமளிக்காதோர்:**

சி.றஜீவன் (உபதலைவர்). பே.அஜந்தன். சி.சிவறஞ்சன். பு.இந்திரகாசன். த.சண்முகப்பிரியன்.



# பொறுப்பாசிரியர் வாழ்த்துச் செய்தி

யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரியின் வணிக மாணவ மன்ற பொறுப்பாசிரியர் என்ற வகையில் இந்த வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். தற்காலத் தில் வேகமாக வளர்ந்துவரும் ஒரு துறையாக வணிகம் மாறிவருவதைக் காணமுடிகிறது. இவ் வளர்ச்சிக்கு முகம் கொடுக்கும் வகையில் தமிழ் மொழி மூலமான அறிவைப் பெற போதுமான நூல்கள் வெளிவரவில்லை. இன்றைய வணிகக் கற்கை நெறியோ கணக்கீடு, முகாமைத்துவம், தகவல் தொழில் நுட்பம் என தனது திறன்களை அகலப் பரப்பி வருவதனால் அத்தகைய அறிவைப் பெறுவதற்கான நூல்கள் அரிதாகவே உள்ளன. இக்குறைபாட்டை நிவர்த்தி செய்து மாணவர் அறிவுப்பசியை போக்குடன் வெளிவரு வதே வணிக சுரபி என்னும் சஞ்சிகையாகும்.

இச்சஞ்சிகை வெளிவருவதற்கு வணிக மாணவர்களின் அர்ப்பணிப்பும், தியாக உணர்வும் விடாமுயற்சியும் காரணமாக அமைந்துள்ளது. அத்துடன் மாணவர்களின் நிதானமும் பொறுமையும் தன்னடக்கமும் இச்சஞ்சிகை தவழுவதற்கு வழிசமைத்த இவ் வேளையில் அவர்களையும் இச் சந்தர்ப்பத்தில் பாராட்டப்படுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இச்சஞ்சிகைக்கான கட்டுரைகள் பல்கலைக்கழக விரிவுரை யாளரிடமும் மாணவர்களிடமும் திரட்டப்பட்டுள்ளன. மாணவர்கள் கட்டுரை எழுதுவதி லும் கட்டுரை சேர்ப்பதிலும் காட்டிய அக்கறை அவர்களது ஆளுமைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும் தரமான கட்டுரைகளைத் தாங்கி வரும் இச்சஞ்சிகை பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமன்றி பொது மக்களுக்கும் விசேடமாக தொழில திபர்களுக்கும் பயனளிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இம்மலரை ஆக்குவதில் அரும்பாடுபட்ட எல்லா உள்ளங்களுக்கும் பாராட்டினைத் தெரிவிப்பது மட்டுமன்றி எதிர்காலத்தில் எந்தவித தடையுமின்றி வருடாவருடம் இச்சஞ்சிகை வெளியிட வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

**நன்றி,**

**பொறுப்பாசிரியர்,**
**வீ. யோகேஸ்வரன்.**



## தலைவரின் உள்ளத்திலிருந்து.......

மானிப்பாய் இந்துக் கல்லூரியிலே வணிக சுரபி என்னும் சஞ்சிகை வணிக மன்றத்தினால் வெளியிடப்படு வதை இட்டு நான் பூரிப்படைகிறேன். இவ் வணிக சுரபி எம் நிர்வாகத்தின் கீழ் தனது நான்காவது இதழை வெளியிடுவது இறைவனது கிருபையே ஆகும்.

**"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்**

**தோன்றலில் தோன்றாமை நன்று"**

என்கின்ற வாக்கிக்கிணங்க இந்நூலை வெளியிட்டதன் மூலம் வள்ளுவரின் வாக்கை நிரூபித்து விட்டோம். என்ற உணர்வு என் இதயத்தில் அடிநாதமாக ஒலித்துக்கொண்டிருக்கின்றது.

இந்நூல் இக்குறுகிய காலத்துக்குள் வளர்ந்து வர்த்தக உலகுடன் போட்டி போட ஆயத்த நிலைக்கு நிற்பதற்கு அடி அத்திவாரமாக நின்ற அனைத்து இதயங்களுக்கும் என் சிரம் சாய்த்து நன்றி கூறுகின்றேன். தலைமைப் பொறுப்பு என்பதை என்ன என்று புரியாது கடந்த காலங்களை அவமே கழித்துவந்த என் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனை வணிக சுரபி வெளியீட்டு திட்டமாகும். பாடப்புத்த கத்தை மட்டும் கற்று வெறும் புத்தகப் பூச்சியாக பாடசாலையை விட்டுவெளியேறாது சமூக உணர்வையும் சமூக கடமைகளையும் என் நெஞ்சில் விதைத்தது என் வணிக சுரபியே.

இந் நூலை வெளியிடுவதற்கு சகல உதவிகளையும் வழங்கிய அனைத்து உள்ளங்களே! நெஞ்சிருக்கும் வரை நினைவுகள் மறையாது. என்னுயிர் இருக்கும் வரை உங்கள் சேவையை மறவேன். வணிக சுரபியே நீ பல்லாண்டு காலம் இவ்வுலகில் பலசாதனைபுரிய வேண்டும். அதைப் பார்த்து நான் பூரிப்படைய வேண்டும். வாழ்க உன்பணி.

### நன்றி

**மானிப்பாய் இந்துக்கல்லூரி**
**வணிக மாணவர் மன்றம்**

**தலைவர்**
**மரியராஜா ஜோயின்சன்**



# இதழாசிரியர்களின் இதய மலரிலிருந்து



**ரமேஸ்** **கண்ணதாசன்**

சமூக தேவைகளில் ஒன்று வணிகம் அதற்கு உயிரூட்டும் விதத்தில் மானி. இந்துவின் வணிக மாணவர்களாகிய நாம் சுரபி என்னும் வணிகத்துறை மலரின் நான்காவது படைப்பை வெளிக்கொணர்வதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியும் இதயத் திருப்தியையும், அடைகிறோம். எமது அயராத உழைப்பினால் அழுத்தத்தின் மத்தியில் விளம்பரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட நிதியுதவியுடன் இம் மலரினை உச்ச இயலளவுடன் ஆக்கி உங்கள் இதயங்களில் விதைக்கின்றோம்.

இம் மலரானது ஐந்து வருடங்களின் பின் வெளிவருகின்றது. எனினும் வணிக சுரபி ஒவ்வொரு வருடமும் மலரவேண்டும் என்று பணிவுடன் வேண்டுகிறோம். நாம் இருவரும் எமது திறமைகளை இணைத்து இணை இதழாசிரியர்களாக எமது சுரபியை தரம்மிக்கதாக அன்பு உள்ளங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

எமக்கு சகல விதத்திலும் உடல் உளசார்பிலும், பொருளாதார ரீதியிலும், உதவிகளை வழங்கிய அனைவருக்கும் நன்றி. வணிக சுரபியே நீ என்றும் அமுதசுரபியாக சுரக்க மருதடியானை வேண்டி நிற்கின்றோம்.

**"முயற்சியெனும் உளிதட்டுங்கள்**
**திறமையெனும் சிற்பம் செதுக்குங்கள்"**

**ஶ்ரீதரன் ரமேஸ்** **மகேந்திரன் கண்ணதாசன்**

**இதழாசிரியர்கள்**
**வணிக மாணவர் மன்றம்**
**யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி.**



## செயலாளரின் சிந்தனையிலிருந்து........

மானிப்பாய் இந்துவின் நான்காவது மலராக வணிக சுரபியை வெளியிடுவதனையிட்டு வணிகமன்றத்தின் செயலாளராகிய நான் மிகவும் பெருமையடைகிறேன். மாணவர் களிடையே மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்து வதன் மூலம் அவர்களின் திறன்களை வளர்ப்பதற்கு இவ்வாறான சஞ்சிகைகள் பெரிதும் உதவிபுரிகின்றனர். தற் காலத்தை நாம் சிந்திப்போமாயின், வணிகத்துறையில் மக்களிடையே மிகவும் நெருக்க மான தொடர்பு மிகவும் வேகமாக வளர்ச்சியடைந்து செல்கின்றது. அந்தவகையிலே மாணவர்களின் திறமைகளைப் வெளிப்படுத்த மாணவர்களே சஞ்சிகைகளை வெளியிடுவது ஒரு மகிழ்ச்சிமிக்க விடயமாகும். இதனைவிட எமது கல்லூரி கல்வியிலும், விளையாட்டி லும் சாதனைகளை நிலைநாட்டி வருவதும். ஒரு சிறப்புமிக்க அம்சமாகும். சிறிது கால இடைவெளியின் பின்பு இந்நூல் வெளிவருவதும் மிக்க மகிழ்ச்சிக்குரியதாகும். எனினும் நாம் வெளியீடு செய்யும் இவ் வணிகசுரபி எல்லோர் மத்தியிலும், சிறந்த நன்மதிப்பைப் பெறும் என நான் நம்புகிறேன். அந்த வகையில் இவ் வணிகசுரபியை மாணவர்களின் கையில் தவழ்வதற்கும். சகல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த அதிபர், உபஅதிபர், ஆசிரியர் எமக்கு உதவியளித்த எமது துறை மாணவருக்கும், எமது துறை ஆசிரியருக்கும். எமக்குத்துணை புரிந்த விளம்பரதாரர்களுக்கும் மற்றும் ஆதரவளித்த எமது அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும், எனது கல்லூரி சமூகத்திற்கும், உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வணிகசுரபியை தொடர்ந்தும் வெளியீடு செய்ய வேண்டும் என சுதுமலை புவனேஸ்வரி அம்மனை வேண்டுகிறேன்.

**“காலமே உனது உயிராகும் அதை நீ வீணாக்குவது**
**உன்னை நீ கொலை செய்வதற்கு ஒப்பாகும்.”**

# நன்றி

**வணிக மாணவர் மன்றம்.** — **செயலாளர்**

**யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி** — **நாகலிங்கம் ஜொஜீபன்**

**மானிப்பாய்.**



# பொருளாளரின்

## மனதிலிருந்து ........

எமது கல்லூரியில் என்றும் தனக்கென இடம் பிடித்த வணிக மாணவ மன்றத்தின் வெளியீடான வணிக சுரபியை வருக வருக என வரவேற்கிறேன். இது எமது திறமையின் சிகரம்.

வணிகக் கற்கைநெறி இன்று பிரபல்யம் அடைந்து வருகின்றது. இத்துறையில் கால் பதிக்கும். சகல மாணவர்களுக்கும். நல்ல எதிர்காலம் உண்டு என்பதனால் இந்நிலைமை தோன்றியுள்ளது. இம்மலர் பல ஆக்கங்களைத் தாங்கி தனிச் சிறப்புடன் தரணியில் மலர்கின்றது. இச் செயற்பாட்டிற்கு எமது மன்றத்தில் எது வித நிதியும் ஆரம்பத்தில் இல்லை. என்றாலும் எமது வணிக மன்றத்தின் அயராத செயற்பாட்டால் தேவையான நிதியைப் பெற்று மன நிறைவுடன் இம்மலரினை வெளியிட்டுள்ளோம். இது எம்மையும் எமது கல்லூரியையும், மகிழ்ச்சிப் படுத்துகின்றது.

## நன்றி

**பொருளாளர்**

**S. தவபாலன்**

**வணிக மாணவர் மன்றம்.**

**யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி**

**மானிப்பாய்.**



2005 வணிகப் பிரிவு

## சுரபியின் சுரப்புக்களில் இருந்து......

### I. வணிகத்தின் வழியில்



1. தொழில் நிறுவனங்களில் ஊழியர்களை ஊக்கப்படுத்தல் 1-5
2. இலங்கையின் பங்குச்சந்தை 6-11
3. வலையமைப்பு நாணயம் 12-14
4. நடைமுறை வணிகம் 15-17
5. தொடர்பாடலும் வணிகமும் 18-20


### II. பொருளியலின் தேடலில்


6. வளர்முக நாடுகளின் வறுமையும், இலங்கையில் வறுமை ஒழிப்புத்திட்டங்களும் 21-27
7. அரசாங்க கடன்பிணைகள் 28-30
8. கிராமிய பொருளாதார அபிவிருத்தியில் சமுர்த்தி வங்கிச் சங்கங்களின் பங்கு 31-34
9. வரி 35-42
10. பொருளியல் துளிகள் 43-46
11. வெளிவாரி விளைவுகளும் சந்தை தோல்விகளும் 47-49
12. சர்வதேச வர்த்தகம் தொடர்பான முழுநய, ஒப்பீட்டு நயக் கோட்பாடுகளும் நடைமுறைகளும் 50-55


### III. கணக்கீட்டின் கதிர்களில்


13. எல்லைக்கிரகவியலும், குறுங்கால தீர்மானமெடுத்தலும் 56-58
14. கணக்கீட்டில் வழுக்களைத் திருத்துதல் 59-62
15. வங்கிக்கணக்க இணக்கக்கூற்று 63-68
16. கூலிக்கிரயம் 69-72

# அட்டைப்பட விளக்கம்

உங்கள் முன்தோன்றும் அட்டைப்படத்தை சிந்தனைக்கு விருந்தாய் படைக்கிறோம். இங்கு கடலும் மாலைப்பொழுதும் சித்தரிக்கப்பட்டு கல்லூரியின் வர்ணத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

கல்வி என்னும் கடலில் தனது பயணத்தை தொடரும் மானி இந்துவின் 2005 வணிகக்கப்பலில் இருந்து வணிக சுரபி மலர்கின்றான். கப்பலின் தலைக்கொடியாம் கல்லூரிக்கொடி உயரப்பறக்கின்றது.


கப்பலில் ஒவ்வொரு தளங்களில் இலக்கம் இடப்பட்டு வியாபாரத்தின் வரலாற்று ரீதியான அபிவிருத்திக் கட்டங்கள் நான்கும் படிமுறை வளர்ச்சிப்படி சித்தரிக்கப்படுகின்றது.

இம்லர் நான்காவது ஆகையால்
இலக்கம் 1 பண்டமாற்று வியாபாரத்தையும்
இலக்கம் 2 பண வியாபாரத்தையும்
இலக்கம் 3 கைத்தொழில் புரட்சியையும்
இலக்கம் 4 தகவல் தொழில் நுட்பத்தையும்
வெளிக்காட்டுகின்றது.

இங்கு நான்காவது தளத்தில் மனித கைகளில் உலகம் தாங்கப்படுகின்றது. இதற்கான காரணம் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியால் இன்று உலகம் இயக்கப்பட்டு எந்த விடயத்தினையும் இலகுவாக்கி தனது கைகளில் உலகத்தினை ஏந்துகின்றான். காலப்போக்கில் உலகை கைகளிற்குள் அடக்கி விடுவான் என்பதே ஆகும்.

**புகழ் மாலைகளை என்றும் சூடு**
**சுரபியே**



அன்புடன்
ம.கண்ணதாசன்

# தொழில் நிறுவனங்களில் ஊழியர்களை ஊக்கப்படுத்தல்
# EMPLOYEES MOTIVATION IN BUSINESS ORGANISATIONS.

## 1.0. அறிமுகம்

எந்தவொரு நிறுவனத்திலும் ஊழியர்களை நெறிப்படுத்துவதன் மூலமே அதன் இலக்கை அடைவது சாத்தியமாகின்றது. ஊழியர்களை நெறிப்படுத்துவதில் தலைமைத்துவம், தொடர்பாடல் என்பன எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றனவோ அவ்வளவு முக்கியத்துவத்தை ஊக்கப்படுத்தல் கொண்டிருக்கின்றது. ஊழியர்களின் வினைத்திறன் வாய்ந்த செயற்பாட்டை நிர்ணயிப்பதில் முக்கிய காரணியாக ஊக்கப்படுத்தலே காணப்படுகின்றது. இதன் காரணமாகவே,

P=AxM

என்ற சமன்பாடு நிரூபிக்கப்படுகின்றது. இதில் P செயற்திறன், A ஆற்றலையும், M ஊக்கப்படுத்தலையும் குறிக்கும். இதன்படி ஆற்றலுள்ள ஊழியர்மீது ஊக்கப்படுத்தலைப் பிரயோகித்தால் மட்டுமே செயற்றிறன் அதிகரிப்பு ஏற்படுவதனை உறுதிப்படுத்தலாம்.

எந்தவொரு நிறுவனத்தின் முகாமையாளரும் தனது ஊழியர்களை ஊக்கப்படுத்துபவராக இருத்தல் வேண்டும். ஊழியர்களுக்கு ஊக்கப்படுத்தல் தேவைப்படுகின்றது என்பதைப் பின்வரும் காரணிகள் எடுத்துக்காட்டும்.

01. ஊழியர் வேலையில் அக்கறையின்றிக் காணப்படுதல்.

02. வேலையில் சலிப்புத் தன்மையைக் கொண்டிருத்தல்.

03. வேலையில் அடிக்கடி தவறுகள் ஏற்பட்டு வருதல்.

04. நேரத்தினை பெருமளவிற்கு விரயம் செய்தல்.

05. நிறுவனத்தின் வளங்களை சிக்கனமின்றிப் பாவித்தல்.

06. ஊழியர்கள் வரவீனம் பெருமளவில் காணப்படுதல்.

07. ஊழியர்களது புரள்வு அதிகளவில் காணப்படுதல்.

08. நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதில் அக்கறையின்றிக் காணப்படுதல்.

09. நிறுவனத்தின் வெளியீட்டில் வீழ்ச்சி காணப்படுதல்.

10. நிறுவனத்தில் அர்ப்பணிப்பு குறைவாக இருத்தல்.

## 2.0.ஊழியர்களைத் தூண்டுவதற்கு நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் முறைகள்

01.ஊழியர்களது விருப்பத்தை அதிகரிக்கக் கூடியவாறு பொருத்தமான வேலையை வழங்குதல்.

02. வேலையைச் சரிவர ஆற்றுவதற்கு வசதியாகத் தேவைப்படும் வசதியை வழங்குதல்.

03. ஊழியர்களது அக்கறையை அதிகரிக்கும் வகையில் ஜனநாயகத் தீர்மானமெடுத்தலை அறிமுகப்படுத்தல்.

04. அதிகாரத்தைத் குவித்து வைத்திருக்காது கீழ்மட்டத்தவருக்கும் உதவும் வகையில் அதிகாரக் கையளிப்பை ஏற்படுத்தல்.

05. வேலையில் தோன்றக்கூடிய சலிப்புத் தன்மையை நிவர்த்திக்கும் வகையில் சூழற்சிமுறை வேலையை அறிமுகப்படுத்தல்.

06. நிதிசார்ந்த ஊக்குவிப்புக்களை வழங்குதல்.

07. நிதிசாராத வசதிகளை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

08. வேலை சம்பந்தமான அபிப்பிராயங்களை எடுத்துக்கூறும் வேலைப் பின்னூட்டி என்பதனை நடைமுறைப்படுத்தல்.

09. நிறுவனத்தின் வேலையில் முன்னேறுவதற்கான வாய்ப்புக்களை அதிகரித்தல்.

10. ஊழியர்களிடையே பக்கச்சார்பினைத் தவிர்த்து நடுநிலைக் கொள்கையை கொண்டுவருதல்.

11. ஊழியர்களது வேலையை அங்கீகரிப்பதுடன் அவர்களுக்கு புகழ்ச்சியையும் பரிசுகளையும் வழங்குதல்.

12. முரண்பாடுகளை உத்தம அளவில் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

13. ஊழியர்களுக்கு சிறந்த மேற்பார்வை வழங்குதல்.

14. குழு அடிப்படையில் வேலை செய்வதற்கு வழிசெய்தல்.

நிதி ரீதியாகவும், நிதி ரீதியற்ற வகையிலும் நிறுவனங்களால் பல வகையான ஊக்கப்படுத்தல் வழங்கப்படுகின்றன. குறிப்பாக,


கூலியும் சம்பளமும்
படிகள்
உபகாரப் பணம்
மேலதிகக் கொடுப்பனவு
கடன்கள்

என்பவை நிதி ரீதியான ஊக்கப்படுத்து பவையாகும். அதேநேரம் நிதிசாராத வகையில் கௌரவம், அந்தஸ்து, பொறுப்பு, அங்கீகாரம், உறவுகள், ஜனநாயகத் தீர்மானமெடுத்தல், இலவச மருத்துவ உதவி, இலவச குடியிருப்பு வசதி, இலவச போக்குவரத்து வசதி போன்றவை கிடைப்பதனை உறுதிப்படுத்தலும் ஊழியர்களை ஊக்குவிக்கும்.

## 3.0. ஊக்கப்படுத்தல் தொடர்பான முகாமைத்துவக் கோட்பாடுகள்

### 3.1. மாஸ்லோவின் தேவை பற்றிய படிமுறைக் கோட்பாடு (Maslow's Needs hierarchy theory)

அமெரிக்க சமூகவியலாளரான ஏப்ரகாம் மாஸ்லோ என்பவரால் ஐம்பதுகளின் நடுப்பகுதியில் முன்வைக்கப்பட்ட ஊக்கப்படுத்தல் கோட்பாடே இதுவாகும். இவர் மனிதவர்க்கம் என்றுமே தேவைகளைக் கொண்டுள்ள ஒரு பிராணி என்றும் அவர்கள் கொண்டிருக்கும் தேவையே ஊக்கப்படுத்தலுக்கு அடிப்படைகளில் அமைந்துள்ளது என்பதுமான கருத்தை வெளியிட்டார். இதன்படி ஒரு தேவை தோன்றி திருப்தியை நாடி நிற்கும்பொழுது அதனை நிறைசெய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையே ஊக்கப்படுத்தலாக அமையமுடியும் எனக் கூறப்பட்டது. இதன்படி மனிதவர்க்கம் என்றுமே தேவைகளைக் கொண்டிருக்கும் என்றும் ஒரு தேவை பூர்த்தியானதுடன் இன்னொருதேவை தோன்றி திருப்தியை நாடிநிற்கும் என்பதனால் தேவைபற்றிய பின்வரும் வரிசை அவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.



பிரமிட்ஸ் வடிவத்திலான மேற்காட்டிய படத்தில் மனிதவர்க்கத்துக்கு இருக்கும் தேவைகளும் அவை தேவைப்படுவோரது எண்ணிக்கையும் காட்டப்பட்டுள்ளது. இவற்றைப் பின்வருமாறு விளக்கலாம்.

**உடலியற் தேவை :**

மனிதன் உயிர்வாழ்வதற்கு அடிப்படையிலான உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றையும் பெறுவதற்கான தேவை இதுவாகும். ஒருவருக்குக் கிடைக்கும் சம்பளக் கொடுப்பனவை அடிப்படையாகக் கொண்டு இத் தேவை பூர்த்தியாக்கப்பட முடியும்.

**பாதுகாப்புத் தேவை :**

உடலியற் தேவை பூர்த்தியானவுடன் தோன்றக் கூடிய இத்தேவையில் தொழிலுக்குப் பாதுகாப்பு, உயிருக்குப் பாதுகாப்பு, உடமைக்குப் பாதுகாப்பு என்பன தோன்றும். இது பல்வேறுபட்ட பாதுகாப்புக்களை ஊழியர் வேண்டி நிற்பதனால் தோன்றுகிறது.

**சமூகத் தேவை :**

பாதுகாப்புத் தேவை பூர்த்தியானவுடன் தோன்றுகின்ற இத்தேவை சமூகத்துடன் இணைந்து வாழுதல், ஏனையோர் மீது அன்பு செலுத்தல், உறவுகளைப் பேணுதல் ஆகியவற்றை அடக்கும்.

**கௌரவத் தேவை :**

சமூகத்தேவை பூர்த்தியானவுடன் தோன்றக்கூடிய சொந்த அந்தஸ்தினையும் ஏனையோர் அங்கீகாரத்தையும் உள்ளடக்கும் தேவையாகும். தன்னம்பிக்கை, பலம், சுதந்திரத் தன்மை, புகழ், அந்தஸ்த்து, அங்கீகாரம், சமூக மதிப்பு ஆகியவற்றையும் அடக்கும் தேவையாகும்.

**தன்னலத் தேவை :**

மனித வர்க்கத்துக்குத் தோன்றக் கூடிய கடைசித் தேவை இதுவாகும். ஒருவரது சுயநலத்துடன் சம்பந்தப்பட்ட தேவை இதுவாகும். அரசியலில் ஒருவர் பெற முற்படும் பதவிகள், நிறுவனத்தில் பெற விரும்பும் உயர்மட்ட பதவிகள் என்பவற்றை இது அடக்குவதுடன் இதன் பின்னர் மனித வர்க்கத்துக்கு ஒரு தேவையும் தோன்ற மாட்டாது எனவும், மிகக் குறைந்த எண்ணிக்கையினரே இத் தேவைகளைக் கொண்டிருப்பர் என்றும் கூறப்பட்டது.

**இக் கோட்பாட்டின் விமர்சனங்கள்**

01. தேவை மேற்கூறிய வரிசையில்தான் தோன்றும் என்ற கட்டுப்பாடில்லை.

02. மக்களது வயதிற்கும் தேவைக்கும் தொடர்பு இருப்பது கவனத்தில் கொள்ளப்படவில்லை.

03. கௌரவத் தேவை, தன்னலத் தேவை ஆகியவற்றை வேறுபடுத்த முடியாது.

04. நிறுவனத்திற்குள் மட்டும் இத் தேவைகள் பூர்த்தியாக்கப்பட முடியாது.

## 3.2. கேஸ்பேக்கின் இருகாரணிக் கோட்பாடு (Herzberg's Two factor theory)

மாஸ்லோவின் கோட்பாட்டில் தேவைகள் வரிசையாகத் தோன்ற முடியாது என்ற காரணத்தின் அடிப்படையில் இருகாரணிக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. நிறுவனங்களில் வேலை நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்படாத நிலையில் ஊழியர்கள் அதிருப்தியினை (dissatisfaction) அனுபவித்து வருவர். அதனை நிவர்த்திக்க சுகாதாரக் காரணித் (Hygiene factors) தேவை பூர்த்திசெய்யப்பட வேண்டும். இத்தேவை பூர்த்தியானவுடன் அதிருப்தி நீக்கப்படும். பின்னர் திருப்தியை (satisfaction) வரவழைப்பதற்கு ஊக்கப்படுத்தும் காரணி(motivationfactors) அடிப்படையிலான தேவைகளும் பூர்த்திசெய்யப்படும்.

| சுகாதாரக் காரணி | ஊக்குவிப்புக் காரணி |
| --- | --- |
| கம்பனிக் கொள்கை | அந்தஸ்து |
| கம்பனி நிர்வாகம் | சாதனை |
| ஊழியர் மேற்பார்வை | அங்கீகாரம் |
| வேலை நிபந்தனைகள் | முன்னேற்றத்திற்கான வழி |
| சம்பளக் கொடுப்பனவு | புகழ்ச்சி |
| தொழிற்பாதுகாப்பு | பரிசு |
| மேலதிக நலன்கள் | |

சுகாதாரக் காரணிகளைப் பூர்த்தி செய்து அதிருப்தியை இல்லாமல் செய்து நடுநிலைக்குக் கொண்டுவந்த ஊழியர்களை மீண்டும் திருப்தி நிலைக்கு கொண்டுசெல்ல ஊக்குவிப்புக் காரணித் தேவைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டும்.

## 3.3. மக்கிறகரின் கோட்பாடு (Mcgregor;s Theory)

டக்ளஸ் மைக்கிறகர் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஊழியர் நடத்தையை மையமாகக் கொண்ட கோட்பாடு இதுவாகும். நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களின் நடத்தையை மையமாகக்கொண்டு கோட்பாடு X (Theory X) கோட்பாடு Y (Theory Y) என இருவகையான ஊக்கப்படுத்தல் கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

கோட்பாடு X ஊழியர்மேல் நம்பிக்கையை ஏற்படுத்தாத ஒன்றாகும். இதன்படி,

01. ஊழியர்களின் வேலை செய்வதற்கு விருப்பமில்லாதவர்கள்
02. வழங்கப்படும் பொறுப்புக்களைத் தட்டிக்கழிப்பர்
03. இலக்குகளை அடைவதில் அக்கறையற்றவர்கள்
04. கடுமையான மேற்பார்வை தேவைப்படும்
05. பயத்தினால் மட்டுமே வேலைசெய்ய முன்வருவர்.

என்பதன் அடிப்படையில் கடும் போக்கான தூண்டுதலே ஊழியர்களிடம் வேலைபெற உதவும்.

கோட்பாடு Y ஊழியர்மேல் நம்பிக்கை கொண்ட நவீன காலத்துக்குரிய கோட்பாடாகும். இதன்படி,

01. ஊழியர்கள் வேலை செய்வதற்கு விருப்பமுடையவர்கள்.
02. தொழிலினூடாகவே திருப்தியைக் காண்பர்.
03. பொறுப்புக்களை ஏற்பதற்கு ஆயத்தமாக இருப்பர்.
04. இலக்கை நிறைவேற்றும் விருப்பமுள்ளவர்கள்.
05. இயல்பாகவே நிறுவனத்தின் வளர்ச்சியில் அக்கறை காட்டுபவர்.

என்பதன் அடிப்படையில் தட்டிக்கொடுத்து வேலை வாங்கும் இயல்பு வளர்க்கப்படுவதற்கு ஊழியர்கள் நல்ல முறையில் ஊக்குவிக்கப்பட முடியும்.

## 3.4. சமநிலைக் கோட்பாடு (Equity theory)

1993ம் ஆண்டில் அமெரிக்காவில் வாழ்ந்த ஸ்ரேசி அடெம் என்பவரால் இக்கோட்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது. ஒருவர் ஏனையவர்களுடன் ஒப்பிடப்படும் பொழுது எத்தகைய உள்ளீடுகளைக் கொண்டிருக்கிறார் என்றும் அவருக்கு எத்தகைய வெளியீடுகள் உள்ளன என்றும் இருப்பதே சமநிலைக் கோட்பாடு ஆகும். இங்கு ஊழியர் நிறுவனத்திற்காக அளிப்பதெல்லாம் அவர் சம்பந்தமான உள்ளீடு செய்யப்படும். அதற்காக நிறுவனம் அவருக்கு வழங்குவது வெளியீடு எனக் கொள்ளப்படும். இங்கு உள்ளீட்டையும் வெளியீட்டையும் சமப்படுத்துவது என்பதே சமநிலைக் கோட்பாட்டின் பண்பாகும்.

ஊழியர்கள் சம்பந்தமான பலவற்றை உள்ளீடுகளாகக் கொள்ளமுடியும். அதாவது,

01. கல்வித் தரம்
02. அனுபவம்

03. திறமை
04. முயற்சி
05. புத்திக்கூர்மை

என்பன உள்ளீடுகளாகக் கருதப்படும். இவை ஊழியரால் அளிக்கப்படுபவை ஆகும். மாறாக ஊழியர்களது வெளியீடுகளோ, ஊழியருக்கு வழங்கப்படும் நலன்களின் அடிப்படையில் கொள்ளும். குறிப்பாக

01. அடிப்படைச் சம்பளம்
02. படிகள்
03. உபகரணங்கள்
04. பிற நலன்கள்
05. மேல் அந்தஸ்த்து
06. திருப்திகரமான மேற்பார்வை
07. நல்ல வேலைச் சூழல்

போன்றவை எல்லாம் வெளியீடுகளாக அமையும். இத்தகைய உள்ளீடுகளையும் வெளியீடுகளையும் சமப்படுத்துவதன் ஊடாகவே ஊழியர்களைத் தூண்டலாம் என சமநிலைக் கோட்பாடு கூறுகின்றது.

## 4.0. முடிவுகள்

ஊழியர்களைத் தூண்டுவதென்பது எல்லா நிறுவனங்களிலும் ஒரு பிரதான தொழிற்பாடாக மாறியுள்ளது. தொழில் நிறுவனங்கள் நமது இலக்கினை அடைந்து கொள்வதற்கு ஊழியர்களை ஊக்கப்படுத்துவது தவிர்க்கமுடியாததாகும். நடைமுறையில் ஊக்கப்படுத்தலானது உயர்ந்த தொழிற்திருப்தியை ஊழியர்களிடையே ஏற்படுத்துவதும், அவர்களது வேலையின் அளவிலும் தரத்திலும் அதிகரிப்பைக் கொண்டுவந்து அதனூடே உற்பத்தித்திறனை உயர்வடையச் செய்யும், இது மீண்டும் ஊழியர்களுக்கான வெகுமதிகளையும் அங்கிகாரங்களையும் அதிகரித்து மீண்டும் சுற்றுவட்டத்தில் ஊழியர் தூண்டுதலை ஏற்படுத்தி இறுதியில் உற்பத்தித்திறன் அதிகரிக்க வழிவகுக்கும். இதன் காரணமாகவே ஊழியர் உற்பத்தித்திறனை உயர்த்தவும் அதனூடே நிறுவனத்தின் இலாபத்தை உச்சப்படுத்தவும் ஊழியர்கள் எப்பொழுதுமே ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

## உசாத்துணை நூல்கள்

01.ANDREW SARGENT, HOW TO MOTIVATE PEOPLE JAICO PUBLISHING HOUSE, BOMBOY 1993

02.VITELESS MORRITS, MOTIVATION AND MORALE IN INDUSTRY, W.W.NORTAN a CO., NEW YORK 1953


03.MC GREGOR, D. THE HUMAN SIDE OR ENTERPRISES. MC GREW HILL, NEW YORK 1960

04.LIKERT, R. NEW PATTERN OF MANAGEMENT. MC GREW HILL, NEW YORK 1961

05.VROOM, VH. WORK MOTIVATION. WILEY 1MC NEW YORK 1964

06.HERZBERG, F. MAUSER, B. AND SYNDERAMAN, B. THE MOTIVATION TO WORK, NEW YORK WILEY 1959

07.SAIYA DAIN, M.S.HUMAN RESOURW MANAGE MENT TATA MC GRAW HILL, 1988



ஆக்கம் - க.தேவராஜா,
தலைவர்,வணிகத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

# இலங்கையின் பங்குச்சந்தை
## Share Market of Srilanka

## 1.0அறிமுகம் (Introduction)

நாட்டின் பொருளாதாரப் பலத்தினை எடுத்தியம்புகின்ற காரணிகளில் ஒரு முக்கிய அம்சமாக திகழ்வது பங்கச்சந்தை ஆகும். இது மூலதனச்சந்தையின் பொரும்பகுதியினை தன்னகத்தே கொண்டது ஆகும். பொதுவாகப் பங்குச்சந்தை முதலாம் தரப்பங்குச்சந்தை, இரண்டாம் தரப்பங்குச்சந்தை என இருவகைப்படும். முதலாம் தரப்பங்குச்சந்தையில் மூலதனத்தை திரட்ட முனைகின்ற கம்பனிகள் தமது பங்குகளை பொதுமக்களுக்கு விற்கின்ற நடவடிக்கை(Intial Public Offer) இடம் பெறும். ஆனால் இரண்டாம்தரப்பங்குச்சந்தை என்பது முதலீட்டாளர் தமக்கிடையில் பங்குகளை பரிமாறிக்கொள்கின்ற நடவடிக்கை யாகும்.

பொதுவாக விலை கூறப்பட்ட கம்பனிகளின் கொள்வனவு, விற்பனை என்பன கொழும்பு பங்குச்சந்தையில் இடம்பெறும். இங்கு கொள்வனவாளர்களின் தரகர்களும் விற்பனையாளர்களது ( பங்கு ) தரகர்களும் நேரடியாக சம்பந்தப்படுவர் இலங்கையில் காணப்படுகின்ற ஒரேஒரு பங்குச்சந்தை கொழும்பு பங்குச்சந்தை ஆகும். இதனை கொழும்பு பரிவர்த்தனை நிலையம் (Colombo Stock Exchange) நிர்வகித்து வருகின்றது.

## 2.0 இலங்கையில் பங்குச் சந்தையின் தோற்றமும் வளர்ச்சியும்.

இலங்கையில் பங்குச்சந்தையானது ஒரு தசாப்தத்திற்கு மேலான காலப்பகுதியைக் கொண்டுள்ளது. இங்கு 1896ம் ஆண்டிலேயே பங்குச்சந்தை அமைப்புத் தோற்றம் பெற்று வளர்ந்து வந்துள்ளது. இங்கு ஆரம்பத்தில் தோட்ட துறையின் நிதியீட்ட தேவையினை நிறைவு செய்ய பயன்படுத்தப்பட்டது. இது 1984ம் ஆண்டு ஜூன் வரையும் கொழும்பு பங்கு தரகர் சங்கத்தினால் (Colombo Stock Brokers Association) கோல் ஓவர் (Callover) முறைப்படி பங்கு வியாபாரம் நடைபெற்றது. இங்கு பொதுமக்கள் நேரடியாக பங்குகளை மாற்றம் செய்வதற்கோ, பங்குச்சந்தை நிலைவரத்தைப் பார்வையிடுவதற்கோ அனுமதிக்கப்பட வில்லை. பங்கு தரகர்கள் மாத்திரம் இவ்வியாபாரத்தில் ஈடுபட்டனர். (பொதுமக்கள் சார்பில்)

1984 யூலை 2ம் திகதியில் இருந்து பங்குச் சந்தை முதலீட்டுத்தளம் (Trading Floor) பொதுமக்களிற்காக (முதலீட்டாளர்களுக்கு) திறந்து விடப்பட்டது. இங்கு திறந்தகத்தல் (Open out cry) முறைமூலம் பங்கு விற்பனை கொள்வனவுகள் இடம்பெற்றது. இது ஒரு ஏல வியாபாரத்திற்கு ஒத்திருந்தது. அதனைத் தொடர்ந்து 1984 செப்டம்பரில் புதிய இன்னோர் தளம் உருவாக்கப்பட்டு டிசம்பரில் இவ்விரண்டு தளங்களும் ஒன்றிணைக்கப் பட்டு உத்தர வாதத்தின் மூலம் வரையறுக்கப் பட்ட கொழும்பு பினையங்கள் பரிவர்த்தனைக் கம்பனி Colombo Securities exchange (Gte ltd) எனும் நிறுவனம் உருவாக்கப்பட்டது. இதுவே 1984 டிசம்பரில் இருந்து பங்கு வியாபாரத்தளம், தரகர்களது நடவடிக்கை, பங்கு வியாபாரம் என்பனவற்றை முகாமை செய்து கட்டுப்படுத்தி வந்துள்ளது.

தொடர்ந்து 1990ம் ஆண்டு மார்ச் மாதம் கொழும்பு பிணையங்கள் பரிவர்த்தனை (உத்தரவாத) கம்பனி கொழும்பு பங்குப்

பரிவர்த்தனை நிலையம் (Colombo Stock exchange) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இதுவே இன்றுவரை பங்குச் சந்தை வியாபாரத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அதனைத் தொடர்ந்து 1991 டிசம்பரில் பங்குச் சந்தைக்கு வலுவூட்டும் நிகழ்வாக மத்திய வைப்புத்திட்டமுறை (Central Depository system) உருவாக்கப்பட்டது. அத்துடன் 1997இல் கொழும்பு பங்குச் சந்தை பங்கு கை மாற்றல் தன்னியக்க வியாபார முறைக்கு மாற்றப்பட்டது. (Automatic trading system) எனவே கொழும்பு பங்குச்சந்தையானது 1896ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து பல்வேறு பரிநாம வளர்ச்சிகளுடன் இன்று புதுப்பொலிவுடன் திகழ்கிறது என்பது வெளிப்படையானவை.

## 3.0 கொழும்புப்பங்குச் சந்தையில் பங்குபற்றும் தரப்பினர் (Participant of colombo Share market)

பின்வரும் நிறுவனங்களும் தனிப்பட்டவர்களும் கொழும்பு பங்குச்சந்தையில் அங்கம் வகிக்கின்றனர்.

- கொழும்பு பங்குப்பரிவர்த்தனை நிலையம் (colombo Stock Exchange)
- பங்குதாரர்கள் அல்லது பங்குதரகர் நிறுவனங்கள் ( Share Brokers Share Brokers Institution)
- பட்டியலிட்ட கம்பனிகள் (listed or Quoted companies)
- முதலீட்டாளர்கள் (Investers)
- இலங்கைப்பிணையங்கள் பரிமாற்று ஆணைக்குழு (Securities and Exchange Commission of Srilanka)
- மத்திய வைப்புத்திட்ட முறமைக் கம்பனி (Central Diposition System)

## 3.1 கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம் (colombo Stock Exchange)

கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம் பங்கு வியாபாரத்தினை நடாத்துவதும் அதனை முகாமைசெய்வதனையுமே முக்கிய பணிகளாக கொண்டுள்ளது. அதனை நிறைவேற்றும் முகமாக பின்வரும் பணிகளினை மேற்கொள்கிறது.

### கம்பனிகளைப் பட்டியல் படுத்தல்

ஓர் கம்பனியினை கொழும்பு பங்குப்பரிவர்த்தனை நிலையம் தனது பட்டியலில் சேர்த்துக்கொள்வதாயின் அக்கம்பனிகள் பின்வரும் விடயங்களினை பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

a. 1982 ம் ஆண்டு 17ம் இலக்க கம்பனிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனியாக இருத்தல் வேண்டும்

b. 1987ம் ஆண்டு 36ம் இலக்க பிணையங்கள் சபைசட்டத்திற்கு அமைவாக இருத்தல் (1991க்கு முன்) அல்லது 1991ம் ஆண்டு 26ம் இலக்க பிணையங்கள் சபைத்திருத்த சட்டத்திற்கு இயைபாக இருத்தல் வேண்டும்.

c. ஆகக் குறைந்தது 75 மில்லியன் ரூபா பங்கு மூலதனமாக கொண்டிருத்தல் வேண்டும் அவற்றில் 25 வீதமான பங்குகள் பொதுமக்களின் கைகளில் இருத்தல் வேண்டும் அத்துடன் 300க்கு குறையாத பங்கு தாரர்களினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

d. பட்டியலிடலுக்கு விண்ணப்பிக்கும் கம்பனி, பங்குபரிவர்த்தனை நிலைய அனுமதி பெற முன்னர் பங்கு விற்பனைக்கான விளம்பரங்கள், முன் விபரணம் எதனையும் வெளியிடக்கூடாது.

e. சாதாரண பங்கு தவிர்ந்த ஏனைய பிணைகள், தொகுதிக்கடன்கள், பங்குகள் முறிகள் என்பன (உரிமைமுதல் தவிர்ந்த ஏனைய நிதிமூலங்கள்) வழங்கப்பட்ட சாதாரண பங்கு முதலின் 50 வீதத்திற்கு மேற்படக்கூடாது.

f. ஆதனமுதலீட்டுக்கம்பனிகள், ஆதன அபிவிருத்திக் கம்பனிகள் பட்டியலிட விண்ணப்பிக்கமாயின் விண்ணப்பம் வாங்கிய திகதிக்கு 9 மாத காலத்திற்கு முன்னர் சுதந்திரமான தகுதிபெற்ற ஆதன மதிப்பீட்டாளர்களை கொண்டு தமது சொந்த ஆதனங்களினையும் கம்பனி தொகுதியினது. ஆதனங்களினையும் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

கொழும்புபிணையங்கள் பரிவர்த்தனை நிலையத்தில் சாதாரண பங்குகள், (Ordinary Shares ) முன்னுரிமைப்பங்குகள், (Preference Shares) பங்கு ஆணைப்பத்திரம், (Sharewarrants) வாக்குரிமையற்ற பங்குகள்,(Non Voting Shares) கம்பனித்தொகுதிக்கடன்கள் (Corporate Debentures) என்பன பட்டியலிட முடியும்.

## 3.2 பங்குத் தரகர்கள் (Share Brokers)

பங்குச்சந்தை ஒன்றில் வாடிக்கையாளர் சார்பாக பங்கு கொள்வனவு, விற்பனைகளில் ஈடுபடுகின்ற தரப்பினர்களே பங்கு தரகர்கள் எனலாம். இவர்கள் தனிநபர்கள் அல்லது நிறுவனங்களாகவோ காணப்படலாம். ஆயினும் பங்குச்சந்தையில் கொள்வனவு, விற்பனை பங்குதரகர்களினால்மட்டுமே மேற்கொள்ளப் படுகிறது. இதற்காக பிணையங்கள் பரிவர்த்தன ஆணைக்குழுவிடமிருந்து அனுமதிப பத்திரத்தினை பெற்றிருத்தல் வேண்டும். இப்பங்குத்தரகர்கள் குறிப்பிட்ட துறையில் நிபுணத்துவமும், ஆராய்ச்சி செய்யும் ஆற்றலும் கொண்டிருப்பதால் அவர்களது உதவியுடன் பங்குகளை கொள்வனவு, விற்பனை செய்வது சிறந்தது. இவர்கள் சந்தை நிலவரத்திற்கு ஏற்ப எதிர்வு கூறல்களினை வாடிக்கையாளர்கள் சார்பாக மேற்கொள்வர் ( எதிர்பாராத நிகழ்வுகளால் மாற்றம் அடைவதும் உண்டு)

ஓர் பங்குத்தரகர் நிறுவனம் அல்லது தனிநபர்கள் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்தாலன்றி அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளமுடியாது.

1. தனிநபர்களாயின் இலங்கை பிரஜாவுரிமை உடையவராகவோ நிறுவனங்களாயின் 1982ம் ஆண்டு 17ம் இலக்க இலங்கை கம்பனிகள் சட்டத்திற்கு கீழ் பதிவு செய்யப்பட்டும் இருத்தல் வேண்டும்.

2. இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை நிலையத்தின் அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

3. கம்பனி ஆயின் அதன் இயக்குனரும் தனிநபராயின் குறிப்பிட்ட நபரும் சிறந்த நிதி நிலமையினை கொண்டிருத்தல் வேண்டும்.

4. கம்பனிகளாயின் அதில் ஒரு நிர்வாகியாவது பிணையங்கள் பரிவர்த்தனை நிலையத்திடமிருந்த தனது இயலுமையை நிரூபிக்கும் சான்றிதழ் பெறவேண்டும். தனிநபரும் அவ்வாறே.

5. கம்பனிகளோ, தனிநபர்களோ இலங்கை நிதியமைச்சரினால் தீர்மானிக்கப்படும் ஓர் வைப்புத் தொகையை பிணையங்கள் பரிவர்த்தனை நிலையத்தில் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேலே கூறப்பட்ட விடயங்களில் திருப்தி நிலை காணப்பட்டால் இலங்கை பிணையங்கள் பரிமாற்று ஆணைக்குழுவினால் (Securities and Exchange Commission of Sri lanka) ஒரு வருடத்திற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும், பின்னர் அவ்அனுமதிப் பத்திரம் மீள் விண்ணப்பத்தின் பெயரில் மீண்டும் மீண்டும் ஒவ்வோர் ஆண்டுகளிற்குப் புதுப்பித்து தமது பணியை தொடரமுடியும். (வாடிக்கையாளர் நன்மை கருதி)

## 3.3 பட்டியலிட்ட கம்பனிகள் (Listed Companies)

இவை இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை நிலையத்தினால் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளாகும். இன்றுவரை 16 துறைகளைச் சேர்ந்த ( உப துறைகள் 25) 231 கம்பனிகள் (2002 Hand Book) பட்டியலிடப் பட்டுள்ளன. இவை அடுத்துவரும் ஆண்டுகளில் கறையலாம் அல்லது கூடலாம் நிலையானவை அல்ல ( 1999-225 கம்பனிகள் 2000- கம்பனிகள் 2001- 242 கம்பனிகள் 2002- 231 கம்பனிகளும் உள்ளன.)

## 3.4 முதலீட்டாளர்கள் ( Investers)

இங்கு பங்குகளை கொள்வனவு செய்ய முனைவோரும், பங்குகளை விற்பனை செய்ய முனைவோரும் காணப்படுவர். எனவே தான் காளைகளும், கரடிகளும் முட்டிமோதுகின்ற இடம் பங்குச்சந்தை என்றும் கூறுவர். இங்கு காளைகள் என்போர் பங்குகளின் விலைகள் உயரலாம் என எதிர்பார்த்து (மூலதன இலாபத்தை எதிர்பார்த்து) பங்குகளை கொள்வனவு செய்பவர்கள். கரடிகள் என்பொர் எதிர்காலத்தில் பங்கு விலைவீழ்ச்சியடைவதால் ஏற்படும் மூலதன நட்டத்தை தவிர்த்துக்கொள்ளும் நோக்கில் பங்குகளை விற்பனை செய்வோரையும் குறிக்கும். அத்துடன் பங்குச்சந்தை முதலீட்டாளர்கள் என்ற வகையில் தனிநபர்கள் (Individual) அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்கள் (Unitrusts), வெளிநாட்டு நிதியங்கள் (Foreign Funds), உள்நாட்டு நிறுவனங்கள், பிராந்திய நிதியங்கள் (Rigional funds 58), நாட்டு நிதியங்கள் (Country Funds 1) என்பன காணப்படுகின்றன.

## 3.5 இலங்கைப்பிணையங்கள் பரிமாற்று ஆணைக்குழு (Securities and Exchanve Commission of Srilanka)

இலங்கைப்பங்குச் சந்தையை ஒழுங்கு படுத்துதல், கட்டுப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பளித்தல், முறையானதும், தரம்வாய்ந்ததுமான பிணையங்கள் சந்தையினை தொழிற்படுத்தவும் என இலங்கை அரசாங்கத்தினால் 1987 ம் ஆண்டு 36ம் இலக்க பிணையங்கள் ஆணைக்குழு சபைசட்டத்திற்கு அமைவாக பிணையங்கள் கவுன்சில் ( Securities council) உருவாக்கப்பட்டு பின்னர் 1991 ம் ஆண்டு 26ம் இலக்கப்பிணையங்கள் பரிமாற்று ஆணைக்குழு எனப்பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதுவே இன்றுவரை காணப்படுகின்ற மிகவும் அதிகாரம் மிக்க பங்குச்சந்தையின் அமைப்பாகும். இங்கு மத்திய வங்கி ஆளுனர் நாயகத்தால் நியமனம் பெறும் பிரதி ஆளுனர், சட்டம், நிதி, வர்த்தகம், நிர்வாகம் ஆகிய துறைசார்ந்த அனுபவங்களும் திறமையும் உடையவர்கள் என நிதியமைச்சினால் நியமனம் பெறும் அறுவர், திறைசேரிப் பிரதிச்செயலாளர், கம்பனிப்பதிவாளர் நாயகம், இலங்கைப்பட்டய கணக்காளர் நிறுவனத்தலைவர் எனப்பத்துப் பேர் கொண்ட நிர்வாகக்கட்டமைப்பினைக் கொண்டுள்ளது.

## இலங்கைபிணையங்கள் பரிமாற்று ஆணைக்குழுவின் பணிகள்

1. பிணையங்கள் நியாயமானதாகவும், முறைமைசார்ந்ததாகவும், வளங்கள் கூடியதும், வியாபாரம் செய்யக்கூடியதுமான சந்தை வாய்ப்பொன்றை உருவாக்கலும் பேணலும்
2. முதலீட்டாளர் நலன்களைப் பாதுகாத்தல்
3. தரகர்கள் தாம் பொறுப்பேற்ற ஒப்பந்தங்களை நிறைவேற்றத் தவறுவதால் உருவாகும் நிதி

நட்டங்கள் தொடர்பாக முதலீட்டாளர்களை பாதுகாப்பதற்கு நட்டஈட்டு நிதியம் ஒன்றை செயற்படுத்தல்

4. பிணையங்கள் சந்தையை முறைப்படுத்தலும் அதனை தரம் வாய்ந்ததாகப் பேணுவதாகவும் உறுதியளித்தல்

மேற்கூறிய பணிகளை நிறைவேற்ற பின்வரும் அதிகாரங்களையும் பணிகளையும் கொண்டுள்ளது.

1. பங்கு பரிவர்த்தனை நிலையம், பங்குத்தரகர், பங்கு வர்த்தகர், நம்பிக்கை அலகு கம்பனிகள் என்பவற்றிற்கு தொழில் சார் அனுமதிப்பத்திரம் வழங்கலும் அவற்றை தடைசெய்தலும்

2. பொதுமக்களின் நலன்களைக் கருதி பங்கச்சந்தையின் நிர்வாகத்தையும், முகாமைத்துவத்தையும் ஆணைக்குழு கையேற்றுகொள்ளமுடியும்.

3. பிணையங்கள் சந்தையை மேம்படுத்தல் தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்கல், அத்துடன் அரசின் பிணையங்கள் சந்தை பற்றிய கொள்கைகள் நிகழ்ச்சி நிரல்களையும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

4. பங்குத்தரகர், பங்குவர்த்தகர்களால் முதலீட்டாளர் பாதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் நட்டஈட்டினை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல்.

5. பங்குசந்தை தரகர்களையும் நம்பிக்கை அலகுக் கம்பனிகயையும் அடிக்கடி கண்காணித்தலும் தத்தமது செயற்பாடுகள் பற்றிய அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு பணித்தலும்.

## 3.6 மத்திய வைப்புத்திட்ட முறைமை கம்பனி

(Central Depository System (PVT) limited )

கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தின் 100வீதம் மூலதனப் பங்களிப்புடன் (உபகம்பனியாக) பங்குச்சந்தை தீர்வக நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பதிவு செய்தல் ஆகிய பணிகளை நிறைவேற்ற 1991ல் உருவாக்கப்பட்ட கம்பனியே இதுவாகும். இதன் அங்கத்தவர்களாக 15 தரகர் நிறுவனங்களும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கை பொறுப்பு வங்கியாளர்களாகச் சேவையாற்றக்கூடிய 11 வணிக வங்கிகளும் உள்ளன.

## 4.0 மத்திய வைப்புத்திட்ட நடைமுறைகள்

1. வாடிக்கையாளர்களை பதிவு செய்தல் அல்லது வாடிக்கையாளர் சார்பாக கணக்குகள் ஆரம்பித்தல் (Registration of clients)

கொழும்பு பங்குபரிவர்த்தனை நிலையத்தின் ஊடாக பங்குகளை பரிமாறிக் கொள்பவர்கள் கட்டாயமாக தமது அடையாள அட்டை அல்லது வெளிநாட்டு பயணிகள் அனுமதிச்சீட்டுப் பிரதியினை அனுப்பி அதன் இலக்கத்தை உடைய பிணைக்கணக்கு ( Securities Account ) ஒன்றினை ஆரம்பித்துக் கொள்ளல் வேண்டும்.(CDS)

## 2. பங்குகள் வைப்பிடல் (Deposit of shares)

பங்குகள் விற்பனை செய்ய முயல்பவர்கள் முதலில் அப்பங்குகளை மத்திய வைப்புத்திட்டத்தில் வைப்பிலிட வேண்டும். அப்போது அப்பங்குகள் குறித்த வாடிக்கையாளன் கணக்கில் (Securities Account ) செலவு வைக்கப்பட்டு கணனி மூலம் வைப்பு அறிக்கை தனியார் செய்யப்பட்டு பின்னர் விற்பனை இடம்பெறும்

## 3. பங்கு மீளப்பெறுதல். (With drawal of shares)

பங்குதாரர் தாம் வைப்பிலிடப்பட்ட பங்குகள் விற்பனை செய்யப்படாத பட்சத்தில் அதனை மீளப்பெற முடியும் அப்போது மத்திய வைப்புத்திட்ட கம்பனியால் பிணைகள் கணக்கில்வரவு வைக்கப்படும்.

## 4. பங்குகள் கைமாற்றல் (Transfer of shares)

இங்கு பங்கு விற்பனை கொள்வனவு என்பன பங்கு பற்றுனர் ஊடாக (C.D.S) இனால் பிணைகள் கணக்குகளினூடாக பரிமாறிக் கொள்ள முடியும்.

## 5. தீர்வக நடவடிக்கைகள் (Clearing)

மத்தியவைப்புத் திட்டத்தினூடாக தற்போது மிகவும் துரித கதியில் இயங்கும் கணனி மூலமான தன்னியக்க தீர்ப்பனவு முறைமை (Autometic clearingsystem) நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது,

## 6. கொடுக்கல் வாங்கல்களை நிறைவு செய்தல் (Settlement)

இக் கொடுக்கல் வாங்கல் நிறைவுசெய்தல் ஆனது நம்பிக்கைப் பொறுப்பு வங்கிகளின் மூலம் இடம் பெறும். இங்கு கொள்வனவானது வியாபார தினத்திலிருந்து 5 நாட்களுக்குள்ளும், விற்பனை யாயின் வியாபாரத்தினத்திலிருந்து 6 நாட்களுக்குள்ளும் நிறைவு செய்யப்படும். இதனை விட தயவுநாட்கள் (Grace Priod) எனும் மேலதிக நாட்களும் வழங்குவதுண்டு அக்காலப் பகுதிக்கு 0.1 வீதம் வட்டி அறவிடப்படும்.

## 7. பதிவு செய்தல் (Registration)

கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தின் ஊடாக பங்கு பரிமாற்றத்தை மேற்கொள்ளும் பட்டியலிட்ட கம்பனிகள் அனைத்தினது பதிவுகளினையும் மத்திய வைப்புத்திட்ட முறை எனப்படும்.

## 8. தவணையிட்ட பங்கு வழங்கல் செயற்பாடுகளில் ஈடுபடல் ( Handiling of new and Subse quent issue)


உரிமை வழங்கல்களின் உபசார வழங்கல்களில் போது அவற்றை பங்குப்பத்திரம் இன்றி பெற்று அவரவர் கணக்குகளில் வரவு வைத்துக் கொள்வதோடு கம்பனியின் செயலாளர் அல்லது பதிவாளருக்குத் தகவல் அனுப்புகின்றது.

**உசாத்துணை நூல்கள்**

1. the Securities market in Srilanka, Lalith p. Samarakoon securities and Exchange Commission of Srilanka Publication
2. பங்குச்சந்தை முதலீடுகளும் செயற்பாடுகளும், எம், வை, எம், சித்திக்
3. Annuat Report 2002, colombo Stock Exchange
4. Fact book 2002, colombo Stock Exchange

ஆக்கம் - உப செயளாலர்
N. பிரகாஸ்
A/L 2005 Com






# வலையமைப்பு நாணயம்

(இலத்திரணியல் வர்த்தகத்துடன் ஆரம்பமாகிய புதிய இலத்திரனியல்நாணயம்)

## 1.0 அறிமுகம்

எந்த ஒரு இடத்தில் இருந்து பிரவேசிக்கத்தக்க சந்தை ஒன்று அதனை பயன்படுத்துபவர்களை எந்த ஒரு இடத்திற்கும் எடுத்துச் செல்லக்கூடியதாக உள்ளதும் நினைத்துப் பார்க்கப்பட முடியாத அளவு பல்வேறு உற்பத்திகள் மற்றும் சேவைப்பரமொன்றுக்கு பிரவேசிக்க முடியுமாய் உள்ளதுமான இலத்திரனியல் வர்த்தகம் இந்நூற்றாண்டில் புதிய உலக பொருளாதாரத்தில் முதுகெலும்பாக மாறியுள்ளது. தற்போதைய தோற்றத்தில் இலத்திரனியல் வர்த்தகத்தை ஏற்படுத்துவதில் இணையம் பெருமளவு பங்களிப்பு செய்துள்ளதோடு வலையமைப்பு நாணயம் (Network money)அல்லது சைபர் நாணயம் (Cyber money)என விபரிக்கப்படுகின்ற இணைய இலத்திரனியல் நாணயங்களின் அட்டைகளை அடிப்படையாகக் கொண்ட அத்தோடு அல்லது மென்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட இலத்திரனியல் நாணயங்கள் அடங்குகின்றன.

## 2.0 இலத்திரனியல் வர்த்தகம்

| இலத்திரனியல் கொடுப்பனவு முறை | | |
|---|---|---|
| பொருள் ஒன்று ஒப்படைக்கப்படும் சந்தர்ப்ப காலம் | | |
| மிதத்தல் (Flout) | தள்ளிவைத்தல் (Deferral) | வரவு (Credit) |
| முதலில் செலுத்தவும் | உடனடியாக செலுத்தவும் | பின்பு செலுத்தவும் |
| வலையமைப்பு நாணயம் | நேரடி செலவு வைத்தல் இலத்திரனியல் காசோலை செயற்பாடு | வரவு அட்டை/ கிறடிட் செலவு அதிகாரத்தை கையளித்தல் |

இலத்திரனியல் வர்த்தகம் தொடர்பாக உலக வர்த்தக அமைப்பின் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தில் இலத்திரனியல் மார்க்கமாக பொருட்களினதும் சேவைகளினதும் உற்பத்தி விநியோகம், விற்பனை ஆகியவற்றை விற்பனை செய்தல் அல்லது விநியோகித்தல் இதன் மூலம் கருதப்படுகின்றதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வர்த்தக கொடுக்கல் வாங்கல்களை பிரதானமாக மூன்று கட்டங்களாக பிரிக்கலாம். விளம்பரங்களுக்கும் தேடலுக்குமான கட்டம், அழைப்பு கட்டளை அனுப்புதலும் செலுத்தலுக்குமான கட்டம் ஒப்படைக்கின்ற கட்டம் என்பனவாகும் இவற்றில் எந்த ஒன்றையும் இலத்திரனியல்(எலக்ரோனிக்) மார்க்கமாக செய்யக்கூடியதாய் உள்ளதால் இது ''இலத்திரனியல் வர்த்தகம்'' என்ற எண்ணக்கருவில் அடங்குகின்றது. இது வெளிவாரித் தொழில் முயற்சி தொடர்புகள் மற்றும் கம்பனிகளுக்கிடையிலான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற முறைமைகளில் பரிமான வளர்ச்சி ஒன்று உருவாவதை மேம்படுத்துகிறது. இலத்திரனியல் வர்த்தகத்தை பிரதானமாக மூன்று துறைகளாக பிரிக்கலாம். அதாவது தொழில் முயற்சியிலிருந்து இன்னொரு தொழில் முயற்சியுடன் தொழில் முயற்சியிலிருந்து வாடிக்கையாளருடன் தொழில் முயற்சியிலிருந்து அரசாங்கத்துடன் நடைபெறுகின்ற இலத்திரனியல் வர்த்தகம் என்றவாறாகும். இலத்திரனியல் வர்த்தகம் பொருளாதார செயற்பாடுகள் மற்றும் துறைகளின் மீது முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. கொடுக்கல் வாங்கல்களை

நிறைவேற்றுகின்ற வேகம் இலத்திரனியல் வர்த்தகத்தில் பெருமளவு துரிதமாகிறது தொடர்பாடலிலும் தகவல் ஆவணப் பரிமாற்றத்திலும் எடுக்கின்ற காலம் மிகக் குறைவாக இருப்பதனால் சந்தையின் வினைத்திறன் அதிகரிக்கிறது.

இலத்திரனியல் வர்த்தகத்தக விஸ் தரிப்பைத்தொடர்ந்து இலத்திரனியல் நாணயப்பாவனையாளர்களும் தலைதூக்கத் தொடங்கியுள்ளனர். பொதுவாக பார்க்குமிடத்து இரண்டு வித இலத்திரனியல் நாணய வகையில் ஒன்றிலிருந்து ஒன்றாகப் பிரிந்து அடையாளம் காணக் கூடிய விதத்தில் உள்ளன. ஐரோப்பிய மத்திய வங்கியால்(EDB) அட்டைகளை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள்(Card-based products) எனக் குறிப்பிடப்படுகின்றதும் வாடிக்கையாளர்கள் ஏற்கனவே பணம் செலுத்தியுள்ளதுமான உண்மையான செலவினச்சக்தி அடங்கியுள்ள பிளாஸ்ரிக் அட்டைகள் என வரைவிலக்கணம் கூறப்படுகின்ற ஏற்கனவே செலுத்தப்பட்ட அட்டைகளில் உள்ள நாணய பிறப்பாக்கிகளாகும். அடுத்த வகை யாதெனில் இணையம் போன்ற தொலைத்தொடர்பு வலைப்பின்னல் ஊடாக இலத்திரனியல் சேகரித்து வைக்கப்பட்டுள்ள நாணயங்களை ஊடனுப்புகின்ற மென் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளாகும். முக்கியமாக கருதுகின்ற போது அட்டைகளை அடிப்படையாகக் கொண்ட நாணயங்கள் ஆரம்பத்தில் மரபு ரீதியான நேரடிச் சந்தைகளின் பயன்பாட்டிற்காக திட்டமிட்டிருந்த போதிலும் இணையத்தின் மூலம் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கும் அட்டைகளை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை பயன்படுத்த முடியுமாயுள்ளது. இலத்திரனியல் நாணயம் இரண்டையும் இலத்திரனியல் வர்த்தகத்திற்கு பயன்படுத்தலாம். ஆதலால் இணையத்திலுள்ள இலத்திரனியல் நாணயத்தை (இலக்ரோனிக் நாணயம்) வலையமைப்பு நாணயம்(Net Money) அல்லது ஸைபர் நாணயம் என கூறலாம்.

## 3.0 வலையமைப்பு நாணயம் (Net Money)

வலையமைப்பு நாணயத்தை இணையம் போன்றதொரு தொலைத்தொடர்பு வலையமைப்பின் ஊடாக ஊடனுப்பி வைக்கப்படுகின்ற இலத்திரனியல் நாணயம் என வரைவிலக்கணம் கூறலாம்.

வலையமைப்பு நாணயம் அல்லது இணைய நாணயம் "முதலில் செலுத்துகின்ற" வகையைச் சார்ந்த கொடுப்பனவு கருவி ஒன்றாகும். இலத்திரனியல் நாணயக் கூறுகள் பெற்றுக்கொள்ளப்படுகின்ற நேரத்திலிருந்து (உதாரணமாக உண்மையாக கொள்வனவு செய்கின்ற நேரத்திற்கு முன்) கொடுப்பனவு செய்பவருக்கு மாற்றீடாக வட்டி கிடைப்பதோடு அவர் அதற்குப் பதிலாக தனது நிதியங்களை முதலீடு செய்கின்ற சந்தர்ப்பத்தை கைவிடுகிறார். ஏனைய கொடுப்பனவுக் கருவிகளை போலன்றி முன் கூட்டியே செலுத்தப்பட்ட எடுத்து செல்லல் கருவி (bearer instrument)என்ற ரீதியில் வலையமைப்பு நாணயத்தை பயன்படுத்துகின்ற போது இணையத்தின் ஊடாக வைப்புப் பணக் கூறுகளின் தோற்றத்தில் செலவினச் சக்தியில் மாற்றமொன்று உருவாகிறது. பணம் செலுத்துதலில் போன்று இவ்வாறான கொடுக்கல் வாங்கலிலும் காணாமற் போகக் கூடிய, களவாடப்படக் கூடிய, போலிகளை சமர்ப்பிக்கக் கூடிய இடர்கள் காணப்படுகின்றன. இதைத் தவிர விசேட நடைமுறை அல்லது சட்டரீதியான இடர்களான இடர்களும் வங்கி வலையமைப்பு நாணயத் தொழில் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. வலையமைப்பு நாணயம் (இணைய நாணயம்) நாணயக் கொள்கைக்கு மேலதிக சவாலொன்றை விடுகிறது. அனைத்தையும் விட வலையமைப்பு நாணயத்தை

நாட்டின் எல்லை தாண்டிப் பிரயோகிக்கவும், வெளியிடுவதற்கும் முடியுமாயுள்ள ஆற்றல் அதற்கான காரணமாகும். குறிப்பாக மென்பொருளை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தியின் காரணமாக வதிவற்ற ஒருவரால் வெளியிடப்படும் நாணயம் உள்ளகக் கொள்வனவுக்காக வதிவுடையோரால் பயன்படுத்தப்படும் அவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்குமெனின் அத்துடன் அவை வெளிநாடுகளில் அதிகரித்துச் செல்கின்ற நாணயக் கையிருப்புக்களுடன் (Holdings) ஒரே நேரத்தில் நடைபெறுமெனில் வெளிநாட்டு நாணயத் தொகைக்கும் உள்நாட்டு கொடுக்கல் வாங்கலின் அளவுக்கும் இடையிலான தொடர்பை குறைவாக எடுத்துக் காட்டலாம். இதன் பெறுபேறாக எதிர்கால பணவிக்க போக்குகளை பொறுத்தவரை நிதியத் திரட்சிக்கு(Monetary Aggregates) இவற்றின் உற்பத்திச் சக்தியில் ஓரளவை இழக்க வேண்டி நேரிடும். இதைத் தவிர வலையமைப்பு நாணயச் சுற்றோட்டம் நிதிக்கொள்கையிலிருந்து விடுபட கூடிய (விடுதலை) ஆற்றலையும் ஒருவராலும் மறுக்க முடியாது.

**உசாத்துணை நூல்**

இலங்கை மத்திய வங்கி தகவல் திணைக்களத்தின் (குறிப்பேடு) புத்தகம்



**ஆக்கம்**

**ம. ஜோயின்சன்**

**A/L 2005 Com**

| சிறப்புப்பெயர்களும் | பிரதேசங்களும் |
|---|---|
| 1. தெற்கே உள்ள பிரித்தானியா | நியூசிலாந்து |
| 2. பொற்கோவில் நகரம் | அமிர்த சரஸ்( இந்தியா) |
| 3. பொன்வாயில் நகரம் | சான் பிரான்சிஸ்கோ |
| 4. ஏழு குன்றுகளின் நகரம் | ரோம் |
| 5. இருண்ட கண்டம் | ஆபிரிக்கா |
| 6. நைலின் கொடை | எகிப்து |
| 7. இந்து சமுத்திர முத்து | இலங்கை |
| 8. சூரியன் உதிக்கும் நாடு | யப்பான். |

# நடைமுறை வணிகம்

## கடன் குறியீடு

பங்கு வெளியீடு ஒன்றை மேற்கொள்பவர்களின் கடன்களை தீர்த்து வைக்கக்கூடிய ஆற்றல் குறித்த அபிப்பிராயமே கடன் குறியீடு எனப்படும்.

வைப்புக்களை ஏற்கும் அனைத்து நிறுவனங்களிற்கும் கொடுகடன் தரமிடல் பின்பற்றப்படுவதன் மூலம் அவற்றின் திரவத்தன்மை உறுதிப்படுத்தப்படுகின்றது.

### இலங்கையில் பின்பற்றப்படும் கடன் குறியீடுகள்

❖SLAAA- மிகக்கூடிய நம்பகத்தன்மை மிகக்குறைந்த இடர்

❖SLDDD- மிகக்குறைந்த நம்பகத்தன்மை மிகக்கூடிய இடர்

❖SLCCC- திருப்பி செலுத்தும் கணிசமான இடர்

❖SLBBB- திருப்திகரமான கொடுகடன் தரம்

இலங்கையில் கொடுகடன் தரமிடுதலை D.C.R லங்கா கிரடிற் ரேடிங் கம்பனி மேற்கொள்ளுகிறது.

### தன்னியக்க கணணித்திரை வியாபாரம்

பங்குச்சந்தை ஒன்றில் கொள்வன வாளர்களின் கட்டளைகளும் விற்பனை யாளர்களின்அளிப்பும் கணணித் திரையில் கொடுக்கப்பட்டு சில நிமிடங் களில் இணக்கம் ஏற்பட்டு குறிப்பிட்ட கட்டளைக்கு எவராவது பங்குகளை விற்க உடன்படும் போது இவ்விணக்கம் ஏற்படுகிறது. இதுவே தன்னியக்க கணனிதிரை வியாபாரம் எனப்படும்.

### நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை

உள்நாட்டு வர்த்தக திணைக்களம், நியாய வியாபாரஆணைக்குழு, விலைக்கட்டுப்பாட்டு திணைக்களம், என்பவற்றின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்படும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம் விலைக்கட்டுப் பாட்டுச்சட்டம் என்பன நீக்கப்பட்டும் அதிகளவு அதிகாரமும் சுகந்திரமும் கொண்ட அமைப்பாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை நிறுவப்பட் டுள்ளது.

## நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டமைப்பு

நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை சட்டத்தின் கீழ் நிறுவப்படும் மேற்படி அமைப்பில் 10 இற்கு குறையாத உறுப்பினர்கள் காணப்படுவர் உறுப்பினர்கள் சட்டம், வர்த்தகம், பொருளாதாரம்,நிர்வாகம், கணக்கீடு, அறிவியல்,சுகாதாரம் ஆகிய துறைகளில் நிபுணத்துவம் மிக்கவர்களாக காணப்படுவர்.

## நுகர்வோர் அலுவல்கள் பேரவை

நுகர்வோர் அதிகார சபை சட்டத்தின் கீழ் நிறுவப்படும் இவ் அமைப்பில் சட்டம், நிறுவன முகாமை, நுகர்வோர் அலுவல்கள் அனுபவம் கொண்ட பொருளியலாளர் மூவர் காணப்படுவர். போட்டோ, எதிர்ப்பு நடவடிக்கைகளில் முறையீடுகளை விசாரணை செய்து தீர்ப்பளித்தல் வேண்டும்.

## சலாகை குறியீடு(Bar Code)

**சலாகை குறிமீடு மூலம் வெளிப்படும் தகவல்கள்**

1. உற்பத்தி நாடு
2. உற்பத்தியாளர் விபரம்
3. பொருள் வகை பற்றிய விபரம்

**சலாகை முறையினால் ஏற்படும் அனுகூலம்**

1. கணனி மூலம் கொள்வனவு, விற்பனை மேற்கொள்ள முடியும்.
2. களவுகள், மோசடிகள், தவறுகள் தவிர்க்கப்படல்
3. உற்பத்தியாளன் உற்பத்தி பொருள் பற்றிய விபரங்களை அறிய முடியும்.
4. கணக்கு பதிதல் இலகுபடுத்தப்படல்
5. இருப்பு கட்டுப்பாட்டினை ஏற்படுத்துதல்.

## கணனி வலைப்பின்னல் (Computer Net Work)

கணனிகள் தகவல் பரிமாற்றத்திற்காக தொடர்பூடகங்களால் இணைக்கப்படுதல் கணனி வலைப்பின்னல் எனப்படும்.

**வலைப் பின்னலின் வகைகள்**

1. அகன்ற வலைப்பின்னல்
2. நகர வலைப்பின்னல்
3. குறுகிய வலைப்பின்னல்

**பங்குச்சந்தையில் காணப்படும் பெயர் பலகைகள்**

1. பிரதான பெயர் பலகை
2. இரண்டாம் தரப் பெயர் பலகை
3. O.T.C பலகை (பங்குச்சந்தையில் பட்டியல் படுத்தப்படாத கம்பனிகளுக்குரிய வியாபார தளம்)

## I. S. O தரக்குறியீடு

குறிப்பிட்ட நிறுவனம் ஒன்றில் பொருள் சேவை சர்வதேச தரத்தினை கொண்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்தி சர்வதேச கட்டளை அமைப்பின் ஏற்பாட்டில் வழங்கப்படுகிறது.

I. S. O என்ற கிரேக்கச் சொல்லின் அர்த்தம் "சமம்" (Equal) ஆகும். சர்வதேச ரீதியாக பொருளின் தரத்தினை சமப்படுத்தும் இம் முயற்சி நுகர்வோரின் தேவைகளினை திருப்தியினை உச்சப்படுத்துகிறது.

**I. S. O தரக் குறியீட்டின் பிரிவுகள்**

- I. S. O - 9000 - இந் நியமம் அடிப்படை நியமங்களை வழங்குவதூடாக ஏனைய நான்கு நியமங்களிற்கான வழிகாட்டியாக (Guide) விளங்குகிறது.
- I. S. O - 9001 - இந் நியமனம் ஆராய்ச்சி, வடிவமைப்பு, நிர்மானம், நிறுவுதல், ஏற்றுமதி போன்ற சேவை உற்பத்திகளையும் மேற்கொள்ளும் கம்பனிகளிற்கான பரந்த நியமமாகும்.
- I. S. O - 9002 - உற்பத்திப் பொருட்களை தயாரிக்கின்ற மற்றும் நிறுவுகின்ற கம்பனிகள் இந் நியமம் குறிப்பாக செயன்முறை கைத்தொழில்களுடன் (உணவு, இரசாயனம்) தொடர்புடையது.
- I. S. O- 9004 - இந்நியமம் I. S. O 1, 2, 3 என்பவற்றில் வரையறுக்கப்பட்ட தரமுகாமை முறையை விருத்தி செய்து அமுல்படுத்து வதற்கான பொதுவான வழிகாட்டலினைக் கொண்டதாகும்.
- I. S. O - 14001 - சூழல் பாதுகாப்புடன் தொடர்புடையது.

**I. S. Oதரக்குறியீட்டுடன் தொடர்புடைய கொள்கைகள்**

- திட்டம் (Plan)
- ஆவணப்படுத்தல் (Doument)
- தொடர்புபடுத்தல் (Communicate)
- அறிக்கையிடல் (Monitor)
- சீராக்கல் (Modity)

**I. S. O இற்கான தரமுகாமை வலியுறுத்தும் முக்கிய தேவைப்பாடுகள்**

- உற்பத்தி வடிவமைப்பு
- ஆவணப்படுத்தல் நடைமுறை
- உள்ளீடு கொள்வனவு செய்யும் கட்டங்கள்
- பதப்படுத்தல் கட்டுப்பாடு
- பரிசோதனை மற்றும் பரீட்சிப்பு
- கையாளல், களஞ்சியப்படுத்தல்
- பொதியில் அடைத்தல்
- போக்குவரத்து விநியோகம்
- திறனை முகாமை நடைமுறை
- விற்பனைக்குப் பின்னரான சேவை

**வேலைக்குறிப்புரை**

**(Jopspeeificetion)**

குறிப்பிட்ட ஒரு வேலையினை செய்வதற்கு ஊழியர் ஒருவருக்கு இருக்க வேண்டிய தகமையினைவிரிவுபடுத்துவது வேலைக் குறிப்புரை ஆகும். இதற்குள் கல்வித் தகமை தொழில் அனுபவம், வயது என்பன அடக்கப்படும்.

**வேலை சுழற்சி**

நிறுவனம் ஒன்றில் வேலையில் ஈடுபடும் ஊழியரை தொடர்ந்து ஒரே பணியில் ஈடுபடுத்தாமல் காலத்திற்குக் காலம் வெவ்வேறுபட்ட பணியில் ஈடுபடுத்துதல் வேலைச் சுழற்சி ஆகும்.

**மின்வர்த்தகம்**

சர்வதேச ரீதியாக ஏற்படுத்தப்பட்டுள்ள இன்ரநெற் வலைப்பின்னல் ஊடாக பொருட்கள் சேவைகள் தகவல்கள் என்பவற்றை விற்பனை செய்யும் நடவடிக்கை இலத்திரனியல் வர்த்தகம் எனப்படும்

**மின்வர்த்தகத்தின் அனுகூலங்கள்**

- நுகர்வோன் தனது இருப்பிடத்தில் இருந்தவாறு உலகின் எப்பகுதியில் இருந்தும் பொருட்கள், சேவைகளின் தகவல்கனைப் பறெ முடியும்.
- பரந்தளவான பரப்பில் தெரிவு சுதந்திரத்தினை மேற்கொள்ளமுடியும்.
- உற்பத்தியாளன் ஒருவன் தனது உற்பத்திப்பொருளினை சர்வதேச ரீதியாக சந்தைப் படுத்தும் வாய்ப்பு கிடைத்தல்.
- விரும்பிய நேரத்தில் கொள்வனவு, விற்பனையில் ஈடுபட முடியும்.

**பிரதிகூலங்கள்**

- சாதாரணதர மக்கள் இம்முறையில் தமது தேவைகளினை நிறைவு செய்ய முடியாது இருத்தல்
- கடனட்டை மூலம் மோசடிகள் இடம்பெறுதல்
- மனித உறவுமுறை உடைத்தெறியப்படல்
- நுகர்வோர் ஏமாற்றப்படும் வாய்ப்புகள் காணப்படுதல்

**சுங்கக் கூட்டு (Customunion)**


குறிப்பிட்ட அங்கத்துவ நாடுகள் தமக்கிடையிலான வர்த்தக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் போது அதற்கெதிரான சகல வர்த்தக நடவடிக்கை களினையும் அகற்றும் வகையில் ஏற்படுத்திக் கொள்ளும் கூட்டு

Eg : ஆசிய பசுபிக் வலயச்சந்தை, SAFTA

ஐரோப்பிய ஒன்றியம்

**பொதுச்சந்தை**

வர்த்தக பண்டங்கள் மாத்திரமன்றி சேவைகள், முதலீடுகள், உற்பத்திக்காரணிகள் போன்றன எவ்வித கட்டுப்பாடுமின்றி அங்கத்துவ நாடுகளினிடையே பரிமாற்றப்படும் சந்தையைக் குறிக்கும்.



**ஆக்கம் -**
**K.ஜெயதீபன்**
**A/L 2005 Com**

# தொடர் பாடலும் வணிகமும்
# Communicatin and Business

## 1.0 அறிமுகம்

இன்றைய உலக தகவல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியினால் தகவல் சாதனங்களின் தலைமையில் குறுகிய ஒரு கிராமமாக மாறிவருகின்றது. இத்தொடர்பியல் சாதனம் மூலம் இன்று வணிகத்துறை பாரிய வளர்ச்சி கண்டுள்ளது. இதில் இணையத்தின் பங்களிப்பு அச்சாணி போன்று தொழிற்படுகின்றது.

பல்வேறு வித்தியாசமான கணனி வலைகளின் உலகலாவிய வலைப்பின்னல் அமைப்பு இணையம் என வரையறை செய்யலாம். (Internet is a world wide net work of hetrogeneous net work) இந்த அமைப்பிலே உலக மெங்கும் பரந்துள்ள சகல துறைகளிலும் உள்ள கணனிகள் IP (Internet Protocal) எனப்படுகின்ற வரையறுக்கப்பட்ட பொது ஒழுங்கு முறையினால் தொடர்பு கொள்ளக் கூடிய விதமாக இணைக்கப்பட்டுள்ள இவ் இணையத்தினை உருவாக்கத் தேவையானவை கணனி or மொடமுடனான கணனி மொடம்

## தொலைபேசி இணைப்பு

இணையத்தின் ஆரம்ப காலமாக 1969 காலப்பகுதியை கருதமுடியும். இணையத்தின் மூலம் பலவகையான சேவைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாய் இருக்கின்றது. ஆரம்பத்தில் File Transfer (FTP) Remote Login (Telnet) என்பனவும் பின்னர் E-Mail ம், WWW ம் இணையத்தின் பிரதான சேவைகளாக விளங்குகின்றன. அவற்றின் விரிவான விளக்கத்தினை நாம் நோக்கலாம்

## 2.0 இலத்திரன் அஞ்சல் /

## மின்னஞ்சல்
## Electronic Mail

இது கணணிகளுக்கூடாக நடைபெறும் ஓர் அஞ்சல் சேவையாகும். ஒரு கணணியில் மின்னஞ்சல் பதிவுள்ள ஒருவர் இணையத்தில் இணைக்கப்பட்டுள்ள இன்னொரு மின்னஞ்சல் பதிவுள்ளவரோடு தொடர்புகொள்ளும் முறையாகும்.

## கோவைகளின் பரிமாற்றம்
## (FTP) File TransFer Protocal

இணையத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள தகவல் கோவைகளை பரிமாற்றிக் கொள்ளும் ஒரு முறையாகும் இதில் பெருமளவில் ஆராட்சிகட்டுரைகள் பரிமாற்றம் செய்யப்படுகின்றன.

## வையக விரிவு வலை/உலக வெய்தளம்
## World Wide Web (WWW)

இவ் இணையத்துடன் ஒருவர் பரஸ்பர தொடர்புகொள்வதற்கு இடைமுகத்தை வளங்குகின்றது. இணையத்தின் பல ஊடகங்களின் ஆற்றல் உலக வெய்தளச் செயற்பாட்டில் பொதிந்துள்ளது. இங்கு வெய்பகுதி தகவல் சேவை என்பது ( Wide Area Information Services )வலைப்பின்னல் ஊடாக தகவல் பரிமாற்றத்திற்கு உதவும் ஒரு முறை.

## இணைய பக்ஸ்
## Internet Fax

இணையத்தின் மூலம் இலத்திரன் தபாலைப் பயன்படுத்தி தகவல்கள் பிரதிகளாகப் பெற்றுக்கொள்ளப்படும் ஒரு முறையாகும்.

## இணையத்தொலைபேசி InternetPhone

இணையத்தின் உதவியுடன் தொலைபேசியில் சர்வதேச ரீதியாக உரையாடக் கூடிய முறையாகும். இதன் மூலம் குறைந்த செலவில் உரையாடலை மேற்கொள்ளலாம்.

## குரல் தபால் Voice Mail

அனுப்பப்பட்ட வாய் மொழி மூலமான தகவல்களை சேமித்து அதன் தன்மை மாறாது பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு முறையாகும்.

வணிகத்திற்கான இணையத்தின் செயற்பாடுகள்

இலத்திரனியல் பணம் E- Money

வணிக வங்கியில் சேமிப்புக்கணக்கு வைத்திருக்கும் ஒருவருக்கு அவ்வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட மின்னியல் காசுப்பை (Electronic Money Purse) வழங்கப்படுகிறது. இது அங்கீகரிக்கப்பட்ட வணிக நிறுவனங்களுக்கிடையில் கணணி மூலம் வலைப்பின்னல் உட்படுத்தப்பட்டே நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## 3.0 இலத்திரனியல் வங்கியல் E- Banking

இலத்திரனியல் கணணி வலைப் பின்னல் ஊடாக வங்கிசேவைகள் மேற்கொள்ளப்படுவதை அல்லது கணணி மயப்படுத்தப்பட்ட வங்கிச்சேவையை இலத்திரன் வங்கியியல் என அழைப்பர். இதனூடாக

- மின்னியல் நிதிமாற்றம் Electronic Fond Transfer
- ரெலி வங்கிச்சேவை Tele Banking
- கிளைகளுக்கிடையிலான வலைப் பின்னல் Inter Branch Net Work
- வணிகங்களுக்கிடையிலான கொடுப்பனவு முறை Inter Bank Payment System
- தன்னியக்க ரெலர் இயந்திரம் Automated Teller Mechine (A.T.M)

இச்செயற்பாடு என்பது வணிக வங்கியொன்றில் கணக்குவைத்திருக்கும் ஒருவர் வங்கிக்கு நேரடியாகச் செல்லாமல் வங்கிக்கருமம் தவிர்ந்த ஏனைய நேரங்களிலும் வங்கிச்சேவையை பெற்றுக்கொள்ளக்கூடிய இயந்திரமாகும். இதனை பல்வேறு வங்கிகள் பல்வேறு பெயரில் அழைக்கின்றன.

- HSBC - ETC
- சம்பத் வங்கி SET
- செலான் வங்கி - SMART
- H.N.B -Cash line Card
- இலங்கை வங்கி - Cey Bank Cash Point
- மக்கள் வங்கி - PET
- இலங்கை வர்த்தக வங்கி - CAT
- சாட்டட் வங்கி -Money Line Card
- தேசிய சேமிப்பு வங்கி - NET

## 4.0 இலத்திரனியல் வணிகம் E- Business

கணணி வலைப்பின்னல் அதாவது இணையத்தினூடாகவும் இலத்திரனியல் சாதனம் போன்றவற்றின் உதவியுடன் பொருட்கள் சேவைகள் பரிமாற்றப் படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதனை இலத்திரனியல் வர்த்தகம் என்பர். இதனூடாக

- வணிகச்செயற்பாடுகள் விரிவுபடுத்தப்படல்
- பரந்த சந்தைத்தெரிவுகள் அதிகம்
- குறைந்த செலவுகள்
- ஆவணப்பயன்பாடுகள் நீக்கப்படுதல்

போன்ற நன்மைகளை அடையலாம்.

இன்ரநெற் சுட்டெண்

## Internet Index

இணையத்தின் குறிப்பாக WWW தளத்தில் காணப்படும் தகவல் அவற்றின் விடையங்களிற்கு ஏற்ப பெரும்பிரிவுகளையும் பல உப பிரிவுகளாகவும் மேலும் உட்பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பது இன்ரநெற் சுட்டெண் ஆகும்.

வழங்கல் இணைப்புத்தொடர் முகாமைத்துவம்

## Supply Chain Management

பொருட்களின் விலைப்பட்டியலை கணணி அடிப்படையில் கட்டுப்படுத்துவது ஆகும். மூலப்பொருள் மற்றும் முடிவுப்பொருட்கள் இரண்டிற்கும் இது பயன்படுகிறது.

**தொடர்பாடல் வளர்ச்சியில் தடம்பதித்த ஆண்டும் சாதனமும்.**

| | |
|---|---|
| 1876 | தொலைபேசி கண்டுபிடிப்பு |
| 1888 – 1895 | வானொலி |
| 1928 | கறுப்பு வெள்ளைத்தொலைக்காட்சி |
| 1946 | வர்ணத்தொலைக்காட்சி |
| 1952 | செயற்கைக்கோள் |
| 1957 | பொத்தான் தொலைபேசி |
| 1961 | செல்லிடத் தொலைபேசி |
| 1968 | டிஜிட்டல் கம்பியூட்டர் |
| 1969 | உலகலாவிய தகவல் தளம் உருவாக்கல் |

## 5.0 முடிவுரை

இன்று வணிகம் தகவல் சாதனங்களின் இணைப்பினால் முன்னேற்றம் அடைகிறது. ஒவ்வொரு வணிகமும் தொடர்பியல் சாதனத்தில் தங்கியுள்ளது. நாமும் அதன் மூலம் பயன்பெற வேண்டும்.

தகவல் சக்கரத்தில் சுழல்கிறது உலகு
தனியாட்சி புரிகிறது தகவல் தொழில்நுட்பம்
இணையாட்சி புரிய வேண்டும் நாம்
இணையக் கல்வியை பயிலவேண்டும் நாமெல்லாம்



ஆக்கம்:
ம. கண்ணதாசன்
A/L 2005 com

| கண்டங்களின் பரப்பளவு | பரப்பளவு |
|---|---|
| ஆசியா | 43938000 |
| ஆபிரிக்கா | 29800000 |
| வட அமெரிக்கா | 24320000 |
| தென்னமெரிக்கா | 17598000 |
| ஐரோப்பா | 9700000 |
| அவுஸ்திரேலியா | 7614500 |
| அந்தாட்டிக்கா | 14239000 |






வணிக சுரபி வலம் வர
அனுசரணை நல்கிய
எங்கள்
விளம்பரதாரர்களை
நீங்களும்
ஆதரியுங்கள்.



யாழ்ப்பாண மக்களுக்கு
புதியதோர் அறிமுகம்!

12 X 36 அளவுகளில்

யாழ்ப்பாணத்து மண்ணில்
இப்பொழுது தான்
முதன்முறையாக
அறிமுகஞ்செய்யப்படுகிறது



இதன் மூலம்
நெகட்டிவ்வில்
இருக்கும் தூசி,
கறைகளை அகற்றி
மிக மிகத் தெளிவாகப்
பளிச் சென்ற
படங்களைப் பெற்றுக்
கொள்ளலாம்.

# MOORTHY

**STUDIO & COLOUR LAB**

# மூர்த்தி வீடியோ

## அன் எலக்ரோனிக்ஸ்



*JAFFNA ROAD,*
*MANIPAY.*
**T.P 021 222 2884**

Congratulations for
Vanihasurabi

# JASMIR TRADERS

**CERAMICS S LON, PVC
PAINT GLAN**



T.P - 0777 395909
0777 721708

*No, 40 K .K .S Road
Chunnam*


Best wishes from

# V.K RAJARATNAM

for vanihasurabi



Radios, Casseties, TV, Video
Decles




T.P - 222 2056
95, Stanley Road
Jaffna

வணிக சுரபிக்கு எமது
நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

# யுனிக்

**புத்தகசாலை**

இதோ எங்கள் கல்விச் செல்வங்களே உங்கள் தேவையை நிறைவு செய்ய மானிப்பாய்ச் சந்தி, சங்கரப்பிள்ளை வீதியில் 02. 06. 2004 இல் இருந்தே உதயமாகிவிட்டது இங்கே பாடசாலை பாடசாலை உபகரணங்கள் அப்பியாசக் கொப்பிகள் வாழ்த்து மடல்கள் பயிற்சிப் புத்தகங்கள் மாணவர் செல்வங்களிற்கான அன்பளிப்புப் கொருட்கள் கிரிக்கட் படங்கள் ஆகியன விற்பனையாகின்றன.



*ஆலடிச்சந்தி,
சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.*


Congratulations for Vanihasurabi

# VITHUJAN

**ELECTRONICS**



Vanfortinrl
Jaffna to Colombo to
Jaffna and all
Sri Lanka tour



*T.P - 077111348*

*Jaffna Road
U- Junction
Manipay*

மானி இந்துவின் வணிக சுரபியே
நீ வாழ்க!

***Dialog G.S.M*** இன் மானிப்பாய் பிரதேசத்தில்
அங்கீகரிக்கப்பட்ட முகவர்.

# The Phone Shop

எம்மிடம் **Nokia , Siement , Motorola , Erision** அனைத்து வகையான கையடக்கத் தொலைபேசிகளையும் **Kit Card** , **Sim Card** , கையடக்கத் தொலைபேசிகளுக்குரிய பற்றி, சாச்சர், கலர் , கேஸ் மெலற் மற்றும் புதிய பழைய **ACD** , **VCD** , **mp3 Song** என்பனவற்றையும் ஒரிடத்தில் பெற்றுக்கொள்ளவும்.

kit



*The phone shop,*
*Manipay.*
*T.P 077- 3058399*

மக்கள் வங்கிச் கட்டடம்,
ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.

வணிக சுரபிக்கு எமது மனமுவந்த வாழ்த்துக்கள்

**அன்றும் என்றும் நாடும் இடம்**





# குலம்

## கிறீம் கவுஸ்

**ஐஸ்கிறீம் தயாரிப்புக்களின் ராஜ கிரீடம்.**

*ஆலடிச் சந்தி,*
*மானிப்பாய்.*

வணிக சுரபியின் சுரப்புக்கள்
தொடர்ந்து வருக



## அசோகா
## நகை அகம்

அசல் 22 கரட் தங்க நகைகளை
தரம்மாறாது பெற்றுக் கொள்ளலாம்.

**இல: 111, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

---

புத்தக சாலைகள் எங்கும் நீ
வரவேண்டும் சுரபியே

## பூபாலசிங்கம்
## புத்தகசாலை





சகல விதமான புத்தகங்கள்
பாடசாலை உபகரணங்களையும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.


இல: 4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
**T.P - 021 222 6693**

---

வணிக சுரபியின் சுரப்புக்கள்
தொடர்ந்து வருக

## ஸ்ரீ லக்சுமி ஜுவல்லறி

**தங்க நகை களஞ்சியம்**



S.N. ரமேஸ்
220, - A கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P - 0777038772

---

வணிக சுரபி தரமாக
மிளிரட்டும்

**வாடிக்கையாளரே:**

தரமான உள்ளீட்டுப்பொருட்கள், உபகரணங்கள், பேப்பர் வகைகள், ஆய்வு கூட உபகரணங்கள் நுணுக்குக்காட்டி, பரிசோதனை உபகரணங்கள் அனைத்துப் பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

## ஆல் சிலோன்



## டிஸ்ரிபியூட்டர்

**212, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**
T.P 021 222 5542

வணிக சுரபிக்கு
எங்கள் வாழ்த்துக்கள்

## கீதா ஆபரண மாளிகை

தரமான
நகைகளின் சாம்ராச்சியம்

12, நவீன சந்தை,
கண்டி வீதி, சாவகச்சேரி.

---

*Best wishes From*

## KAIAMUGAN Kardware

*For*
*Vaniga Surabi*
T.p - 021 222 2833

HEAD OFFICE
147, 149 Stanlay Road,
Jaffna.

---

வணிக சுரபி என்றும் வாழ்க!

## வீ.எம்.கே. ஜுவலர்ஸ்

தங்கப்பவுண் நகை
வியாபாரம்

105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

---

*Congretuletions!*
*Vaniga Surabi*

## SIVANAS

*Tailoring and Textiles*
01, Power House Road.
77, Kasthuriyar Road.
Jaffna.
T.P - 021 222 2967

# வளர்முக நாடுகளின் வறுமையும் இலங்கையில் வறுமை ஒழிப்புத் திட்டங்களும்
# (Poverty of the Developing countries and Poverty Alleviation programmes in Sri Lanka)

## வறுமையின் வரைவிலக்கணம்.

அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகளில் வறுமை, அதன் பரிணாமம், தாக்கம் என்பன குறித்து இது வரையில் சரியானதொரு முடிவு காணப்படவில்லை. வறுமை என்கின்ற அடிப்படை எண்ணக்கரு உணர்வுடன் தொடர்புபட்ட ஒரு விடயமாக விளங்குகின்றது. எனினும் பொதுவாக மனிதன் தனது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாத நிலையே வறுமை எனலாம் "ஒருவர் ஒரு ஒழுங்காண செம்மையான நெறியான வாழ்க்கையினைக் கொண்டு நடாத்த முடியாத நிலையில் இருத்தலே வறுமை" என 1990களில் வறுமைக்கு வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டது "People affected by poverty are unable to lead decent life" என்று சுட்டிக் காட்டப்படுவதும் இந்நிலையே ஆகும். கடந்த காலங்களில் வறுமையானது பொருளாதார போதாமையின் பிரச்சினையாகவே நோக்கப்பட்டது. ஆனால் தற்போது இதன் கருத்து கல்வி மற்றும் சுகாதாரத்தில் குறைந்தளவான பெறுபேறுகள் உட்பட்ட பொருட்களின் இழப்பு, மனித இழப்பு, பாதிக்கப்படும் தன்மை, குரலுக்குமதிப்பின்மை, அதிகாரமின்மை மற்றும் இழப்புகளுக் குட்படுதல் என்பவற்றையும் உள்ளடக்கும் விதத்தில் வரிவாக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. எனவே இன்று வறுமையானது பொருளாதாரக் கருத்துக்களக்கு அப்பால் அரசியலினதும் மனித உரிமைகளினதும் ஆதிக்கத்துக்குள்ளும் நீடிக்கின்ற பரிணாமங்களைக் கொண்டு ஆராயப்படுகின்றது.

## வறுமையின் வகைகள்.

வறுமையின் இரு வடிவங்களாக

1. முழு வறுமை(Absolute Poverty)
2. சார்பளவு வறுமை (Relitive Poverty)

என்பன காணப்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் படி முழு வறுமை என்பது ஒரு நபர் நாளென்றிற்கு 2500 கலோரி 75g புரதம் உட்கொள்ளக் கூடியளவிற்கு போதுமான வருமானத்தைக் கொண்டிராத நிலையே ஆகும். ஆனால் சார்புவறுமை எனப்படுவது ஒரு சமூகத்தில் நிலவுகின்ற சராசரியான அந்தஸ்தினை பேணுவதற்கேற்ற வருவாயை பெறமுடியாத நிலையே ஆகும். அதாவது தனியெருவர் தனது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு போதுமான வருவாயைக் கொண்டிருந்த போதும் சமுதாயத்திலுள்ள ஏனையவருடன் ஒப்பிடும் போதும் இவ் வருமான மட்டம் குறைவாகக் காணப்படுவதர்கும். இச்சார்பு நறுமை எல்லா சமூகத்தவரிடையேயும் காணப்படுவதோடு மட்டுமல்லாமல் இதனை ஒரு போதும் தணிக்க முடியாது.


## வறுமை உருவாகவதற்கான காரணங்கள்

வளர்முக நாடுகளில் வறுமை ஏற்படுவதற்கு பல காரணங்கள் துணை போகின்றன பொதுவாக வறுமை என்பது மனிதனின் அடிப்படைத் தோவைகளை பூாத்தி செய்ய முடியாத நிலைஆகும். வறுமைபற்றி ஆய்வு செய்த றெபெட் செம்பாஸ்ரா் தடைகளை எதிர்த்து நிற்கும் சக்தியின்மையே வறுமைநிலைகளுக்கு முக்கிய காரணம் என்றார்.

மேலும் உற்பத்தி காரணிகளின் சமமற்ற பரம்பல், வேலையின்மை, உற்பத்திக்கான துணைச் சேவைகள் இன்மை, வரட்சி, வெள்ளப்பொருக்கு, புவிநடுக்கம் போன்ற அசாதாரண சூழ்நிலைகள் சமூகத்தில் காணப்படும் மூடநம்பிக்கைகள் கலாச்சார விழுமியங்கள், தகவல் பற்றாக்குறை, குடும்பத்தினரின், சூதாட்டம், போதைவஸ்து பாவனை, இடம்பெயர்வுகள், இனப்பிரச்சனைகள், குடும்பத்தினரின் ஒன்றிணைந்த முயற்சியின்மை, விவசாயத்தில் தொடாந்து தங்கியிரத்தல், வறுமையிலிருந்து மீளுவதற்கு அக்கறையின்மை போன்ற பல காரணிகள் மக்களிடையே வறுமை தோற்றம் பெறக் காரணமாக அமைகின்றன. மேலும் மூன்றாம் உலக நாடுகளைப்பொறுத்த வரையில் அங்கு இன்னமும் வறுமை நிலை இருப்பதற்குரிய காரணங்களில் அந்நாடுகள் வறுமையின் நச்சுச்சூழல் வட்டத்தில் (The Vicious circle of Poverty) சிக்குண்டிருப்பது என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

படத்தில் காட்டியவாறு நிரம்பல் பக்க கேள்விப்பக்க முறை மூலமாக மேற்கூறிய கருத்தை தெளிவுபடுத்தலாம். நிரம்பல்பக்கமாகப் பார்க்கும் போது வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளில் குறைந்த அளவான வருமானம் → குறைந்த இயலளவான → சேமிப்பு மூலதனப்பறிறாக்குறை → உற்பத்தித்திறனில் வீழ்ச்சி → குறைந்தளவான வருமானம் என ஒரு சுழற்சி முறையில் சுற்றுவட்டமாக இயங்குவதைக் காணலாம் மறுபக்கமாக கேள்விப் பக்கமாக நோக்கும் போது குறைந்த வருமானம் → குறைந்தளவான கொள்வனவு சக்தி → குறைவான முதலீட்டு தூண்டுதல் → குறைந்தளவான முதலீடு → குறைவான உற்பத்தித்திறன் → குறைந்த வருமானம் என இயங்குவதைக்காணலாம். இவ்வாறு இருபக்க அணுகுமுறை அடிப்படையில் குறைந்த வருமானம் அடையப்பட்டு வறுமை நிலைக்கு இட்டுச் செல்வதை அவதானிக்கலாம்.

## வறுமையின் நச்சுச்சூழல் வட்டம்



## அபிவிருத்தியில் வறுமையின் தாக்கம்

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு நிதி மூலவளங்களுக்கு மேலாக மனித வளம் முக்கியமான பங்கினை வகிக்கின்றது. அபிவிருத்தியின் அத்திவாரமாகத்திகழும் இம்மனித வளத்தை ஒரு நாடு பெற்றுக்கொள்வதற்கு இடையூறாகத் திகழும் அடிப்படைக்காரணி அந்நாட்டில் காணப்படும் வறுமையே ஆகும். வளர்முக நாடுகளது வறுமையானது தாங்க முடியாத அளவிற்கு மனித அந்தஸ்தினையும் ஒழுக்கத்தினையும் பாதிக்கின்றது. போசாக்கின்மை, எழுத்தறிவின்மை, வேலையின்மை, இளமையில் இறத்தல் என்பன இந்நாடுகளின் பெரும்பாலான மக்களை தாக்கியுள்ளன. அபிவிருத்தியானது இந்நிலமைகளை மாற்றமுடியாவிடின் அது தோல்வியிலேயே முடிவடையும் என்ற மக்னமாரா என்ற அறிஞரின் கூற்று சுட்டிக்காட்த்தக்கதாகும்.

அந்த வகையில் இலங்கையும் ஒரு வளர்முக நாடு என்ற வகையில் நாட்டில் வறுமை நிலைத்திருக்கும் வகை அபிவிருத்திப் பாதையில் அரசினால் முன்னெடுத்துச் செல்லும் எந்த ஒரு முயற்சியும் பயனற்ற தொன்றாகவே அமையும். அந்த வகையில் இருள் சூழ்ந்த எதிர்காலத்தில் இருந்து நாட்டை மீட்டு ஒளிர்மயமான எதிர்காலத்திற்கு இட்டுச்செல்லும் வகையில் சமூக பொருளாதார கலாச்சார அபிவிருத்தி களை மேலோங்க செய்வதற்கு வறுமைத்தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

## இலங்கையின் அண்மைக்கால வறுமைப்போக்கு

இலங்கையின் வறுமைப்போக்கினை நோக்கும் போது தாழ்ந்த மட்ட வறுமைக்கோட்டின் அடிப்படையில் இலங்கையின் வறுமை 1985 – 1986 ல் 27 வீதமாகவும் 1990–1991 ல் 22 வீதமாகவும் 1995–1996 ல் 21.1 வீதமாகவும் வீழ்ச்சியடைந்து வந்ததனை காணமுடிகின்றது.

வறுமையின் தீவிரத்தன்மையும் அதேமாதிரியான ஒரு போக்கையே காட்டியுள்ளது. அது 1985–1986ல் 2.3 வீதமாக இருந்து வந்து 1990– 1991 ல் 1.6 வீதமாகவும் 1995 – 1996 ல் 1.4 வீதமாகவும் வீழ்ச்சியடைந்து இருந்தது. அடுத்து இலங்கையில் துறைரீதியான வறுமையை நோக்கும் போது 1995– 1996ம் ஆண்டின் குடிமதிப்பு புள்ளி விபரவியல் திணைக்களத்தின் அளவீட்டின் படி ஒப்பீட்டுரீதியில் மொத்த வறியோரில் பெருந்தோட்டங்களில் 4 வீதத்தினரும் நகர்ப்புறங்களில் 8 வீதத்தினரும் வாழ்கின்ற நிலையில் 88 வீதத்தினர் கிராமப்புறங்களிலேயே (வறுமைக்கோட்டிற்கு கீழே இருப்பவர்கள்) வாழ்கின்றனர் என்பது கண்டறியப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக நோக்கும் போது இலங்கையின் வறுமைக்குறைப்பு உபாய அறிக்கையின் படி அண்மைக்காலங்களில் குடித்தொகையில் கிட்டத்தட்ட 25–39 சத வீதமானவர்கள் வறியவர்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளமையும் இங்க குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் வறுமை ஒழிப்புத்திட்டங்கள்

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து பதவி ஏற்றுதலும் அரசுகள் பல்வேறு பட்ட வறுமைத் தணிப்புத் திட்டங்களை காலத்துக்கு காலம் அறிமுகப் படுத்தி வருகின்றன. மனிதனின் அன்றாட தேவைகளுக்கான பொருட்கள் எவ்வளவு தான் உற்பத்தி செய்யப்பட்டாலும் வறுமையை போக்க முடியாது. மனிதர்கள் வழமுடன் வாழ வேண்டுமாயின் அரசுகள் இரும்புக்கரம் கொண்டு செயற்பட வேண்டும் என பொருளாதார நிபுணரும் பேராசிரியருமான அமர்த்தியாசென் வறுமைத்தணிப்பின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டமை சுட்டிக்காட்டத்தக்கது. மேலும் வறுமைத்தணிப்பு முக்கியத்துவம் உலகலாவிய ரீதியில் உணரப்பட்டு வருவதால் தான் 1997-2006 ஆண்டு காலம் வறுமை ஒழிப்புக்கான சர்வதேச நூற்றாண்டு என ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியுள்ளது. அந்த வகையில் இலங்கையில் அரசாங்கங்கள் பல்வேறு வறுமைஒழிப்புத்திட்டங்களை பல்வேறு பெயர்களில் அமுல்படுத்தி வருகின்றன. அவற்றுள் சில நுகர்வுத்திட்டங்களாகவும் சில திட்டங்கள் உற்பத்தி சார்ந்ந திட்டங்களாகவும் சில நுகர்வும் உற்பத்தியின் இணைந்த திட்டங்களாகவும் காணப்படுகின்றன.

### நுகர்வு சார்ந்த நடவடிக்கைகள்

மக்களின் நுகர்வை அதிகரித்து போசாக்கினை ஏற்படுத்தி ஆரோக்கியமான மனித சமூகத்தை உருவாக்குவதையே நுகர்வு சார்ந்த திட்டங்கள் என அழைக்கப்படுகின்றன. அத்தகைய நுகர்வு நடவடிக்கைகளாக பின்வருவற்றைக் குறிப்பிடலாம்.

- வறியோருக்கான சகாயகொடுப்பனவு
- இலவச சுகாதார மருத்துவ வசதி
- கிராமிய விஸ்தரிப்புத்திட்டம்
- பாடசாலை மாணவருக்கான மதிய போசனத் திட்டம்
- இலவசக்கல்வித்திட்டம்
- உணவு மானியத்திட்டம்
- உணவு முத்திரைத்திட்டம்
- பாடசாலை மாணவருக்கான உணவுப் போசனைத்திட்டம்
- பாடசாலைப்பிள்ளைகள், கர்ப்பிணிகள்,
- மற்றும் தாய்மாருக்கான பாலுணவு வழங்கும் திட்டம்
- பாடசாலை பிஸ்கட் திட்டம்
- திரிபோஷா நிகழ்ச்சித் திட்டம்
- பாடசாலை இலைக்கஞ்சி வழங்கும் திட்டம்

### உற்பத்திசார்ந்த நடவடிக்கைகள்

அதாவது உற்பத்தி சார் நடவடிக்கைகள் ஊடாக உற்பத்தியை ஊக்குவித்து மக்களின் வருமானத்தை உயர்த்தி அதனூடாக வாழ்க்கைத்தரத்தை செழிக்க வைக்க மேறிகொள்ளப்படும் நடவடிக்கையே உற்பத்தி சார்ந்த நடவடிக்கையாகும். அந்த வகையில் உற்பத்தி முயற்சியை மேம்படுத்துவதன் மூலம் வறுமை தணிக்கும் முயற்சிகள் தொடர்ச்சியாகவே மேற்கொள்ளப் பட்டுள்ளன. அவையாவன

- குடியேற்றத்திட்டம்
- நிறுவன உருவாக்கம்
- நிலசீர்திருத்தங்கள்
- வீடமைப்புத்திட்டங்கள்
- நெல்லுக்கான உத்தரவாத விலைத்திட்டம்
- நெல் மற்றும் பயிர்களுக்கான உர மானியத்திட்டம்
- புது நெல்வகை பற்றிய ஆய்வு
- நீர் பாசனத்திட்டங்கள்
- ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி திட்டங்கள்

✣ விவசாயிகளுக்கான கடன் வசதிகள்
✣ அண்மைக்கால சிறப்பு முயற்சிகள் (உற்பத்தியும் நுகர்வும் இணைந்த திட்டங்கள்)

இவ்வாறாக இலங்கையில் உற்பத்தி சார்ந்த நிகழ்சிசித்திட்டமும் நுகர்வு சார்ந்த நிகழ்சிசித்திட்டமும் முழுமையாக வெற்றி பெறாத நிலையில் இவை இரண்டும் இணைந்ததும் குறுகியகாலத்தில் பயனுறுதி கொண்டதுமான திட்டத்தின் அவசியம் உணரப்பட்டது. அந்த வகையில் ஜனசக்தி, சமுர்த்தி ஆகிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

## ஜனசக்தி திட்டம்

1989 ம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த பிரேமதாசாவினால் ஒரு குறுகிய காலப்பகுதிக்குள் நாட்டில் உள்ள ஏழைகளின் சுபீட்சத்தை கருத்தில் கொண்டு முன்வைக்கப்பட்ட ஒரு கொள்கையாக ஜனசக்தி விளங்குகின்றது. இத்திட்டத்தில் தெரிவு செய்யப்படும் தெரிவு செய்யப்படும் குடும்பங்களுக்கு 2500 ரூபா படி வழங்கப்படும். இதில் 1458 ரூபா நுகர்வுக்காகவும் மிகுதி 1042 ரூபா சேமிப்புக்காகவும் வழங்கப்படும். கட்டாய சேமிப்பாக வங்கியில் வங்கியில் இடப்பட்ட பணம் 2 வருட முடிவில் 25000 ரூபாஆக உயர்ந்து காணப்படும் 1991ல் தொடங்கிய முற்சற்று நடவடிக்கைகள் 1992ல் நிறைவெறிய 2ம் சுற்று நடவடிக்கைகள் என்பவற்றால் 223460 குடும்பங்களும் 1992 – 94 காலப்பகுதிக் குரிய மூன்றாவது சுற்றில் 101000 குடும்பங்களுக்கும் 4 வது சுற்றில் 96000 குடும்பங்களும் நன்மையடைந்தது குறிப்பிடத் தக்கது. அதுமட்டுமன்றி தொழில் முயற்சி, பயிற்சிகள், விவசாயம் சார்கைத்தொழிலுக்கான விரிவாக்கல் சேவைகள், நல ஒழுங்கமைப்பு, கடன்வசதி , வீடமைப்பு, போஷாக்கு, ஆரம்ப சுகாதாரம், கல்வி மற்றும் தொடாபுடைய சகல துறைகளுடனும் ஒன்றினைக்கப்படுவதாலும் இத்திட்டம் முக்கியம் பெறுகின்றது. ஆனாலும் முழுமையான செயலாக்கத்திற்கான வாய்ப்பு ஜனசக்தி திட்டத்திற்கு கிடைக்காத போதும் இதற்கு முற்பட்டகாலத்தில் எடுக்கப்பட்ட ஏனைய வறுமைத்தணிப்பு முயற்சிகளைவிட மேலானது என்றே கூறலாம்.

## சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம்

இலங்கையில் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் 1995 இலிருந்து தற்போதய ஜனாதிபதியால் செயற்படுத்தப்பட்டு வரும் மிகப்பெரிய திட்டம் சமுர்த்தித் திட்டமாகும். இச்சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டமானது 1200 000 குடும்பங்களை அடிப்படையாகக் கொண்டு மொத்த சனத்தொகையில் 1/3 பகுதியினரை உள்ளடக்கி ஆரம்பிக்கப்பட்டது. இச்செயல் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாக வறுமையை ஒழித்தல், சேமிப்புப்பழக்கத்தை ஊக்குவித்தல், சுயதொழில்களை ஊக்கு வித்தல், வறியவர் களிடையே சுய நம்பிக்கையை ஊக்குவித்தல், வறியவர்களின் தொழில் முயற்சிகளுக்கு கடன் வசதிகளை வழங்குதல்.

சகல குடும்பங்களினது வருமானங் களை 1500 ரூபாக்கு மேல் உயர்த்துதல், சமூகத்தில் வாய்ப்பற்றவாகளான அங்கவீனர், அனாதைகள், ஆதரவற்ற முதியோர்கள், போதைவஸ்துக்கு அடிமைப்பட்டோர்கள் ஆகியோருக்கு நலன்புரிச் சேவைகளை வழங்கி அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துதல், கர்ப்பிணித்தாய்மார்களின் மந்த போசாக்கின்மையை நீக்குவதோடு பெண்கள்

சமூக அநீதிகளுக்கு உள்ளாவதை தடுத்தல் போன்றவற்றை குறிப்பிடலாம். 2000 ஆண்டின் இறுதியில் சமுர்த்தி வங்கிச்சங்கங்களின் மொத்த சேமிப்புக்கள் ரூபா 1588 மில்லியன் களையும் வழங்கப்பட்ட கடன்களின் பெறுமதி 2745 மில்லியன்களையும் அடைந்தன. 2003ம் ஆண்டின் இறுதியில் 920 சமுர்த்தி வங்கிச்சங்கங்கள் இருந்ததுடன் ஏறத்தாழ 1.5 மில்லியன் கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஏறத்தாழ 24000 ஊக்கிவிப்பாளர் களுக்கும் 1500 முகாமையாளர்களுக்கும் தொழில் வாய்ப்பினை வழங்கியுள்ளது. இவ்வாறாக நோக்கும் போது வறிய மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதில் சமுர்த்தி திட்டமானது நெகிழ்ச்சி தன்மையுடன் காணப்பட்டமையை அவதானிக்க முடிகின்றது.

## வறுமை ஒழிப்பக்கான நுண்பாக நிதிச்செயல் திட்டம்

இத்திட்டமானது இலங்கையில் அண்மைக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமாகும். கிராமிய வறியவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதே இச் செயல் திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இத்திட்டமானது களுத்துறை, அம்பாந் தோட்டை, பதுளை, நுவரேலியா, மாத்தளை, குருநாகல் ஆகிய ஆறு மாவட்டங்களில் அமுல் படுத்தப்பட்டிருக்கின்றது. சர்வதேச ஒத் துழைப்புக்கான யப்பானிய வங்கியால் நிதியிடப்பட்ட நுண்பாக வறுமை ஒழிப்புத்திட்டம் இதுவாகும். இத்திட்டமானது நுண்பாக நிதியிடல் ஊடாக சிறு விவசாயிகள், நிலமற்றோர் போன்ற வறிய மக்களுக்கு சிறுசிறு உற்பத்தி முயற்சிகளுக்கு கடன் வழங்குவதன் ஊடாக வறுமையை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டது. மேலும் இத்திட்டத்தின் தொழிற்பாடுகளாக செலவுச்சிக்கனமானதும் வலுவானதுமான நுண்பாக கொடுகடன் வழங்கும் முறை ஒன்றினை நிறுவுதல், கிராமிய மக்களிடையே சேமிப்புப்பழக்கத்தினையும் சிக்கனத்தையும் புகட்டுதல், வறிய மக்களின் கல்வி அறிவை மேம்படுத்தி தன்னம்பிக் கையைக் கட்டியெழுப்புதல், மற்றவர்கள் மீது தங்கியிருக்கும் மனோபாவத்தை அகற்றுதல் போன்றவற்றை குறிப்பிடலாம். இத்திட்டம் 2006 ஆண்டு வரையான நிதியுடன் மட்டுப்படுத்தப்பட்டாலும் மேலும் 20 ஆண்டுகள் சுழலும் நிதிமூலம் செயற்றடுத்த திட்டமிடப்பட்டிருக்கின்றது.

## இலங்கையின் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் வெற்றியடையாமைக் கான காரணங்கள்.

இவ்வாறாக இலங்கையில் காலத்திற்கு காலம் அறிமுகப்படுத்தப்பட்டு வரும் வறுமைஒழிப்புத்திட்டங்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டிருந்தமையாலும் ஆட்சியிலிருக்கும் அரசாங்க மாற்றத்திற்கேற்ப திட்டங்கள் மாற்றப்படுகின்றமையாலும் இலங்கை இனப்பிரச்சனைகளாலும் வறுமை ஒழிப்புத்திட்டங்கள் பொருளாதார நலன்களை விட அரசியல் நலன்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கியமையாலும் வறுமைத் திட்டங்கள் நீண்டகால அபிவிருத்தித் திட்டங்களை விட குறுங்கால நலன்களை முக்கியப்படுத்திய மையாலும் உண்மையான வறியவர்களை அடையாளம் காண்பதில் தோல்வி அடைந்தமையாலும் எதிர்பார்த்த வெற்றிகளை ஓரளவு அடைய முடியாமல் போய்விட்டது எனக்கூறலாம்.

## முடிவுரை:

இவ்வாறாக ஆரம்பத்திலிருந்து இலங்கை அரசு மேற்கொண்டு வரும் வறுமை ஒழிப்புத்திட்டங்களை நோக்கின் 1978 ற்கு முன்னர் இலக்குநோக்காத வறுமை தணிப்பும் 1978 ற்கு பின்னர் இலக்கு நோக்கிய வறுமைத்தணிப்பு நடவடிக்கைகள் நடை முறைப் படுத்தப்பட்ட மையை காணமுடிகிறது. அண்மைக்காலவறுமை ஒழிப்புத்திட்டங்கள் மக்களது சுய உழைப்பி னூடாக வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி வறுமையிலிருந்து விடுபட ஓரளவிற்கு வழிசமைக்கின்றன. இவ்வேளையில் அதியுயர் பொருளாதார வளர்ச்சியின் ஊடாக பெருமளவு நிலைத்திருக்கக் கூடிய வகையில் வறுமையைக் குறைப்பதற்கான பாரிய சலுகை நிதியிடல் பொதியென்றினை பெற்றுக்கொள் வதற்கான நோக்குடன் வறுமைக்குறைப்பு வளர்ச்சி வசதிக்காக இலங்கை பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தமையும் குறிப்பிடத் தக்கது. மேலும் இலங்கையில் மேற்கொள்ளப் பட்டுவரும் வறுமைஒழிப்புக் கொள்கைகள் வறுமை யைக்குறைத்து பொருளாதார வயர்ச்சி ஏற்படுத்தி அதனூடாகஅபிவிருத்தியடையமுயற்சிக்கப்படுவதும் மறுக்க முடியாது.

## உசாத்துணைநூல்கள்:


1. Economic Development inthe third world by M.P. Todaro
2. Poverty - World Development Report 1990
3. பொருளியல் நோக்கு 1994, பெப்ரவறி, ஏப்ரல், மே. 1996 டிசம்பர், 2002 மார்ச், ஏப்ரல்
4. சுதந்திர இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் – இலங்கை மத்திய வங்கி
5. இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை
6. இலங்கையை மீட்டெடுத்தல்



விஜயகுமாரி இராஜரட்ணம்
(உதவி விரிவுரையாளர்)
பொருளியற்றுறை
யாழ் / பல்கலைக்கழகம




## கடல் சாமந்தி

கடலில் வாழும் விந்தையான உயிரினங்களில் ஒன்று கடல் சாமந்தி பார்ப்பதற்கு ஒரு பூவைப்போல் இருக்கும் வெள்ளை, பச்சை, நீலம், சிவப்பு, ஆகிய பல வர்ணங்களில் கடல் சாமந்திகள் காணப்படுகின்றன் தடித்த மயிர் போன்ற பற்றுக் கொம்புகள் உள்ளன. கடல் சாமந்தியின் வாயில் ஒரு மீன் சிக்கினால் இப்பற்றுக்கொம்புகளில் உள்ள நஞ்சு ஏறி அது மயங்கி விடும் கடல் சாமந்தியின் கருவில் இருந்துபுழுப் போன்ற வார்வாக்கள் வெளிவந்து தனித்தனி கடல் சாமந்திகளாக வளர்கின்றன.

# அரசாங்க கடன் பிணைகள்
## (The Goverment Debt Secuictfes)

அரசாங்கம் தனது நிதி பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக உயர்ந்த வட்டியினை வழங்குகிறது. அரச கடன் பிணைகளை மத்திய வங்கியின் உதவியுடன் வெளியிடுகின்றது. இம் முதலீட்டிற்கான பணத்தை மீளச் செலுத்துவதற்கு அரசாங்க உத்தரவாதம் வழங்குவதால் இவை நட்ட அச்சமற்றதாகக் காணப்படுகின்றது அது மாத்திரமன்றி இம் முதலீடுகள் வரிச் சுமையற்றதாகவும் இலகுவானதாகவும் காணப்படுகின்றது.

இக் கடன் பிணைகளை அரசாங்கம் கம்பனிகள் மற்றும் ஏனைய சட்ட அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் வழங்குகின்றன.

### முதலீடுகள் முதிர்வுகால எல்லையை தீர்மானித்தல்

வட்டி வீதம் வீழ்ச்சியடையும் பட்சத்தில் உங்கள் முதலீடானது ஏற்கனவே தீர்மானித்த கால எல்லை வரை கூடிய வட்டி வீதத்தில் பேணப்படுகின்றது. மாறாக வட்டி வீதமானது அதிகரிக்கும் பட்சத்தில் உங்கள் முதலீடானது குறைந்தளவு வட்டி வீதத்திலேயே பேணப்படும். எனவே குறுகிய காலத்திற்கு முதலிடு செய்து பின்னர் அதனை புதுப்பிப்பதன் மூலம் கூடுதலான வட்டியைப் பெறும் வாய்ப்பினைப் பெறுவீர்கள். எதிர்காலத்தில் வட்டி வீதமானது வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படும் பட்சத்தில் நீண்ட கால முதலீடுகளே பொருத்தமானதாகும். மாறாக வட்டி வீதமானது அதிகரிக்கும் என எதிர்பார்க்கும் பட்சத்தில் குறுகிய கால முதலீடே சிறந்தது. முதிர்வு கால எல்லையின் முன்னர் மீளப் பெறுதல்

முதிர்வு காலத்தின் முன்னர் உங்கள் முதலீட்டை பகுதியாகவோ முழுமையாகவோ மீளப் பெற விரும்பினால் நடைமுறையில் நிலவும் வட்டி வீதத்தில் நீங்கள் அப்பிணைகளை விற்பனை செய்ய முடியும். இதற்கு எவ்வித தண்டப்பணமும் அறவிடப்பட மாட்டாது.

நீங்கள் உங்கள் முதலீட்டை சந்தையில் நிலவும் வட்டி வீத்தில் விற்பனை செய்யும் போது சந்தை வட்டி வீத நிலமைக்கேற்ப மூலதனலாபத்தையோ அல்லது மூலதன நட்டத்தையோ அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படலாம். கடன் பிணைகளின் விலையானது சந்தை வட்டி வீதத்துடன் எதிரான திசையிலேயே அசைகிறது. அதாவது வட்டி வீதமானது வீழ்ச்சியடையும் பட்சத்தில் கொள்வனவு செய்பவர் வட்டி விலையில் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும். இந்நிலையில் விற்பனையாளர்கள் மூலதன இலாபத்தைப் பெற்றுக் கொள்வார் மாறாக வட்டி வீதமானது அதிகரிக்கும் பட்சத்தில் கொள்வனவ செய்பவர் குறைந்த விலையில் கொள்வனவு செய்வார் இந்நிலையில் விற்பனையாளர்கள் மூலதன நட்டத்தை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

## திறைசேரி உண்டியல் ( T. Bill)

திறைசேரி உண்டியல் அரசாங்கத்தின் சார்பாக இலங்கை மத்திய வங்கியினால் முதலாந்தர வியாபாரிகளுக்கு (primary dealers) வாராந்த ஏலத்தில் வழங்கப்படுகிறது. இலங்கை மத்திய வங்கியால் முதலாந்தர வியாபாரிகள் (primary dealers) நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஏலத்தினூடாக வழங்கப்பட்ட உண்டியல்கள் 3,6,12 மாத முதிர்ச்சி கொண்டவை திறை சேரி உண்டியல் கழிவு உபகரணமாக காணப்படுகின்றது. இலங்கை அரசாங்கத்தினால் உத்தரவாத மளிக்கப்பட்ட ஆபத்து இல்லாத (o risk) உபகரணமாகக் காணப்படுகிறது.

## திறைசேரி முறிகள்(T. Bond)

திறைசேரி முறிகள் அரசாங்கத்தின் சார்பாக இலங்கை மத்திய வங்கியினால் முதலாந்தர வியாபாரிகளுக்கு வாராந்த ஏலத்தில் வழங்கப்படுகிறது. 1 தொடக்கம் 20 வருடங்கள் காலத்தை உடைய முறிகள் ஏலத்தில் வழங்கப்படும் முறிகளும் இலங்கை அரசாங்கத்தால் 100 வீதம் உத்தரவாதமளிக்கப்பட்ட ஆபத்து இல்லாத (o risk) உபகரணமாகக் காணப்படுகிறது. இந்த உபகரணம் முடிவுத்திகதியில் முழுப்பெறுமதியைக் குறிக்கும். அத்துடன் கழிவில் அல்லது வட்டத்துடன் கொள்வனவு செய்ய முடியும். இது சந்தை வீதத்தில் தங்கியுள்ளது. திறைசேரி உண்டியலின் விசேடமான பண்பு யாதெனில் ஆறுமாதத்திற்கு ஒரு தடவை வட்டி செலுத்தக் கூடிய ஒரு ஆவணமாக இது கையாளப்படுகிறது.

## மீள்கொள்வனவு உடன்படிக்கை (Repurchase Agreement) REPOS

முதலீட்டுக் காலத்தை தீர்மானிப்பதற்கு நெகிழ்ச்சித் தன்மை கொண்ட முழுமையான பாதுகாப்பான முதலீட்டுச் சாதனமாகவும் நல்ல வருவாயை உடையதுமானதோர் உடன்படிக்கையே மீள் கொள்வனவு உடன்படிக்கையாகும். கீழ் எங்களுடைய திறைசேரி உண்டியல் பிணைகளுக்கு எதிராக நீங்கள் உங்களுடைய பணத்தை எங்களுடன் எந்த காலத்திற்காகவும் ஒரு நாளில் இருந்து 20 வருடங்கள் வரை முதலீடு செய்ய முடியும்.

## மீள்கொள்வனவு உடன் படிக்கையை பின் வாங்கல் (Reverse Repurchase Agreement) (Reverst REPOS)

உங்களுடைய சொந்த திறைசேரி உண்டியல் அல்லது முறிகளை ஈடாக வைத்து எங்களிடம் நிதியினை கடனாக நீங்கள் பெற முடியும். இந்த கடன்களுக்கான வட்டியானது எப்பொழுதும் வழமையான கடன்களுக்கான வட்டியை விட குறைவாக காணப்படும்.

## பத்திரமற்ற திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளின் விநியோகம் (Scripless Securities)

உண்டியல் மற்றும் முறிகளின் அச்சிடப்பட்ட சான்றிதழ் வடிவிலேயே 2004ம் ஆண்டு முதற் காற்பகுதி வரை விநியோகிக்கப்பட்டன. இவற்றை பாதுகாத்து

வைப்பதும் விநியோக மற்றும் முதிர்வு காலத்திற்குள் கொடுக்கல் வாங்கலில் உபயோகிப்பதும் கடினமாக காணப்பட்டது.

எனினும் மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட பத்திரமற்ற பிணைக்கான தீர்வுத் தொகுதி மூலம் திறைசேரி உண்டியல் மற்றும் முறிகள் பத்திரமற்ற வடிவிலேயே விநியோகம் செய்யப்படுகின்றன. இவை இலத்திரனியல் முறையில் அங்கு பாதுகாக்கப்படுகின்றது. இப்பத்திரமற்ற தொகுதியானது. கடன் பிணைகளின் கைமாறலை இலகுவாக்குகின்றது.

திறைசேரி உண்டியல்கலிலும் (T.Bills) முறிகளிலும் (T.Bonds)முதலீடு செய்வதால் ஏற்படும் நன்மைகள்.

1. இலங்கை அரசாங்கத்தால் 100 வீத உத்தரவாதம் அளிக்கப்பட்ட ஆபத்தற்ற முதலீடு ஆகும்.
2. முதலாம் தர வியாபாரிகளினூடாக அல்லது வர்த்தக வங்கிகளினூடாக விரைவாக பணமாக்கக்கூடியவை.
3. தனிப்பட்ட வாடிக்கையாளர் கையில் உள்ளவற்றிற்கு மேலதிக வருமான வரி விதிக்கப்பட மாட்டாது.
4. வங்கி வைப்புக்களை விட உயர்வான வட்டி வீதம் வழங்கப்படும்.
5. எல்லா நிறுவனங்களினாலும் ஈடாக வைப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது.
6. மூலதன வருவாய்களுக்கு வரி விடுதலை காணப்படுகின்றது.
7. திறைசேரி முறைகளில் முதலீடு செய்தவர் ஒழுங்கான கால இடைவெளியில் வட்டி வருமானத்தை பெறமுடியும்.
8. இலகுவாக மாற்றக்கூடியது.
9. ஆகக்குறைந்த முதலீட்டுத்தொகை 10000 ரூபா
10. மத்திய வங்கியால் வைப்பு மேற்கொள்ளப் படுகின்றது. இதனால் ஆபத்து ஏற்பட மாட்டாது.



B. Mugunthan B.B.A (Hons)
Jaffna Branch
Capital Alliance Holding
Company

| சிறப்புப் பெயர்களும் | பிரதேசங்களும் |
|---|---|
| புனித நாடு | பாலஸ்தீனம் |
| உலகத்தின் கூரை | திபெத் |
| சீனாவின் துயரம் | குவாங்கோ நதி |
| ஐரோப்பாவின் நோயாளி | துருக்கி |
| ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் | சுவிற்சலாந்து |

# கிராமிய பொருளாதார அபிவிருத்தியில் சமுர்த்தி வங்கிச்சங்கங்களின் பங்கு

## 1.0 அறிமுகம்

இலங்கையில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் சேமிப்புப்பழக்கவழக்கங்கள் மிகவும் இழிவான மட்டத்திலேயே உள்ளன. இதனால் வறிய மக்களிடையே முதலீடு மற்றும் உற்பத்தி என்பன வீழ்ச்சியடைந்து அதன் மூலம் வருமானமும் குறைந்து அவர்களின் வாழ்க்கைத்தரத்தை பின்னோக்கி தள்ளுவதற்கு ஏதுவாக அமைகிறது. இவர்களை இந்த நிலையில் இருந்து மீட்டெடுக்க சமுர்த்தி வங்கி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் வறிய மக்களின் சேமிப்புக்களை அதிகரிப்பதற்கும் அச்சேமிப்புக்களை மூலமாகக் கொண்டு கடன்களைக் கொடுத்தும் அதை முறையாக மீள் அறவிடு செய்தும் ஒரு பலம் பொருந்திய நிதி நிறுவனமாக சமுர்த்தி வங்கிகள் கிராமிய மட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளில் பசுமைப்புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

## 2.0 குறிக்கோள்கள்

✣வறிய மக்களின் சேமிப்புக்களின் மூலம் சிறந்ததொரு முதலீட்டிற்கான வலுவைப் பெற்றுக்கொள்ளல்

✣அவர்களது அவசர கடன் தேவைகளை பூர்த்தி செய்தல்

✣உற்பத்தி திறனை விருத்தி செய்ய சிறந்த வருமான வழிகளை இனங்காட்டுதல்

✣வறுமையில் இருந்து விடுவித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

✣முறைசார்பற்ற கடன் சந்தையிலிருந்து மக்களை விடுவித்து முறைசார் நிதி சந்தையில் பழக்கத்தை ஏற்படுத்தல்.

✣புதிய வருமான வழிகளை அறிமுகப்படுத்தல் சிறந்த நிதி முகாமைத்துவம் ஒன்றைக் கட்டியெழுப்புதல்

✣வறியவர்களை வலுவான பொருளாதார ஒழுங்கமைப்பிற்கு உட்படுத்துதல் கிராமிய பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துதல்

## 3.0 சிறிய குழுக்கள்

கிராமிய மட்டத்தில் கீழ்மட்ட ஒழுங்கமைப்பாக 5 பேரைக் கொண்ட சிறிய குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக் குழுக்களின் அமைப்பு அவர்களின் வீடுகளுக்கு அண்மையாகவும் அவர்களால் செய்யப்பட வேண்டிய வேலைகளின் தன்மைகள் அல்லது சமூக உதவிகள் போன்றவற்றைப் பற்றியதாகவும் இருத்தல் வேண்டும்.

நிதித்தாபனம் ஒன்றுக்கு குழுக்களின் நடைமுறைகள் ஒரே நோக்கில் அமைந்திருப்பதால் அந்த நிதிநிறுவனத்தை முறையாக கட்டியெழுப்ப முடியும் என்பதனாலேயே இச்சிறிய குழுக்கள் முக்கியம் பெறுகின்றன. வங்காள தேசத்தில் கிறமீன் என்ற வங்கி இவ்வாறான முறையிலேயே வளர்ச்சியடைந்தது எனலாம்.

### இச்சிறிய குழுக்கள்

✣குழுநிதியத்திட்டம் ஒன்றை தாமாகவே ஸ்தாபித்தல்

✣அங்கத்தவர்களுக்கு உடனே செலுத்தும்

சிறிய கடன் உதவியை குழு நிதியத்திலிருந்து பெற்றுக்கொடுத்தல்

❖பண்ட மாற்றுக்களில் ஈடுபடல்

குடும்பங்களுக்கு இடையே வேலையைப் பகிர்வுசெய்து செலவு சிக்கனத்தை ஏற்படுத்தல் வங்கியில் கடன் எடுப்பதற்கு சிபார்சு செய்தல் குழுநிதியில் உள்ள மேலதீக தொகைப்பணத்தை வங்கிச்சங்கத்தில் வைப்புச் செய்து சேமிப்புத் தொகையை அதிகரிக்கச் செய்தல்

ஏழைமக்களிடம் மறைந்து கிடக்கும் திறமைகளை குழுத்திட்டத்தின் மூலம் விருத்தியடையச்செய்தல்

## 4.0 சமுர்த்திச்சங்கங்களின் அறிமுகம்

10 – 15 சிறிய குழுக்களை ஒன்றிணைப்பதன் மூலம் சமுர்த்திச் சங்கங்கள் உருவாக்கப்படுகின்றன. இந்த நடவடிக்கையால் சங்கங்கள் சரியான முறையில் ஏழைக்குடும்பங்களுக்கு பங்களிப்புச்செய்ய முடியும். அதன் தலைவர், உப தலைவர், செயலாளர், உப செயலாளர், பொருளாளர் போன்ற பதவிகளுக்கு சமூகங்களுக்கு விருப்பின் பெயரில் ஒவ்வொரு வருடத்திற்கும் உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

பயனுகரிகளில் பெண்களை இச்சங்கங்களில் ஈடுபடுத்தல் பொருத்தமானதாக அமையும். பெண்களை ஈடுபடுத்துவதன் மூலம் குடும்பங்களின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தி குடும்ப அபிவிருத்தியை மிக இலகுவாக அடைய முடியும் என்பது கடந்தகால அனுபவங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## 5.0 சமுர்த்தி சங்கங்களின் தொழிற்பாடுகள்

சிறிய குழுக்களை ஊக்கப்படுத்துதல்

சங்கக்கூட்டங்களில் சிறிய குழுக்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்

பலவித உதவிச்சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு கிராமிய மட்டத்தில் சங்கங்களை தளங்களாகப் பயன்படுத்துதல் சுகாதார சேவை, விவசாய ஆலோசனை சமூக அபிவிருத்தி, கல்விச்சேவை, விளையாட்டு, கலாச்சாரம் போன்றவை ஆகும்.

சங்கக்கூட்டங்களை முறையாகக் கூட்டி முன்னேற்றத்தை பரிசீலித்தல்

சிறிய குழுக்களிடம் இருந்து கடனுக்காக விண்ணப்பங்களை ஆய்வு செய்து சிபார்சு செய்தல்.

அங்கத்தவர்களின் பலவித திறமைகளை விருத்தி செய்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்தல், தலைமைத்துவ அபிவிருத்தி, பேச்சு, கவியாக்கம் போன்றவையாகும்.

சிரமதானத்தின் மூலம் மேற்கொள்ளக் கூடிய பொது வேலைத்திட்டங்களை இனம் கண்டு மேற்கொள்ளல் அதன் முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்

சங்க அங்கத்தவர்களின் நலன்களுக்காக பொது நிதியங்களை ஏற்படுத்த முடியும்.

சங்கங்களினூடாக சிறுநூல் நிலைய நிகழ்ச்சித்திட்டம், முதியோர் அரவணைப்பு சேவை,போதைவஸ்துக்கு அடிமையானோரை மீட்டல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

சமுர்த்தி வங்கி சங்க உத்தியோகஸ்தர்களுடன் கடன் சம்பந்தமான கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்

சங்கத்தவர்களின் பல விதமான பிரேரணைகளுக் கிணங்க புதிய திறன் வாய்ந்த

தொழிற்பாடுகளை சமுர்த்தி சங்கத்தினூடாக செய்தல்

## 6.0 சமுர்த்தி வங்கிச்சங்கம்

வங்கிச்சங்க நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் சமுர்த்திப் பயனுகரிகள், மற்றும் சமுர்த்தி நிவாரணம் பொறாத, எனினும் வறுமைமட்டத்திலுள்ள குறைந்த வருமானம் பெறுவோர்களது சேமிப்பை விருத்தி செய்வதன் மூலம் அவர்களது முதலீட்டுச்சக்தியை மேம்படுத்த முடியும் அதன் மூலம் உற்பத்தி நடவடிக்கைகளின் அவர்களை ஈடுபடச்செய்தல் வேண்டும். அன்றாடம் அவர்களுக்கு தேவையான சிறிய அளவிலான கடன் தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலம் முறைசார்பற்ற கடன் சந்தையில் கொடுக்கல் வாங்கல்களை வரையறுத்து அவர்களை கடன் பளுவில் இருந்து விடுவிக்கலாம். முறைசார் நிதிச்சந்தையில் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடச் செய்து அவர்களின் சுய சக்தியை அபிவிருத்தி செய்யும் பொருட்டு வங்கிச்சங்கங்கள் இன்று செயற்பட்டு வருகின்றன.

## 6.1 எதிர்பார்ப்புக்கள்

சேமிப்பை விரத்தி செய்து வறிய மக்களின் முதலீட்டுச் சக்தியை மேம்பாடடையச் செய்தல்
அவசர கடன் தேவையை பூர்த்தி செய்தல்
உற்பத்திக்கான முதலீட்டை மேற்கொள்ள தேவையான கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்
வறியவர்களை வலுவான பொருளாதார ஒழுங்கமைப்பிற்கு உட்படுத்தல்
வறுமையில் இருந்து விடுபடுவதற்கான புதிய வருமான வழிகளை அறிமுகப்படுத்தல்
கடன் ஒழுக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் வங்கியை பரீட்சையம் ஆக்குதல்

## 6.2 வங்கி கணக்கு வகைகள்

1. பங்குக்கணக்கு
2. அங்கத்தவர் கணக்கு
3. அங்கத்தவர் அல்லாதோர் கணக்கு
4. சிறுவர் கணக்கு
5. திரியமாதாக்கணக்கு ( பெண்கள் கணக்கு)
6. குழுக்கணக்கு
7. கட்டாயச்சேமிப்புக்கணக்கு

## கடன் வகைகள்

சுய தொழில் கடன்
விவசாய கடன்
பயிர்ச்செய்கை கடன்
மீன்பிடி கடன்
நுகர்வுக்கடன்
சகானக்கடன்

## 7.0 அபிவிருத்தி உபாய முறைகள்

வறுமை ஒழிப்புத்திட்டத்தோடு இணைந்த வகையிலேயே கிராமிய பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடு அமைந்துள்ளது.

சேமிப்பு, மூலதனக்குறிப்பு, முதலீடு அதிகரிப்பு, மனித வள ஆற்றலை உருவாக்குதல், வேலைவாய்ப்பு அதிகரித்தல், வருமான உயர்வு, உட்கட்டுமான வசதிகளை உருவாக்குதல், போக்குவரத்து பாதைகள் விஸ்தரிப்பு, கடன் வசதிகளை அதிகரித்தல், உற்பத்திக்கு சரியயான விலை, தடையின்றி உற்பத்தி எல்லோருக்கும் கிடைக்கச்செய்தல், சிறந்த சந்தைவாய்ப்புக்கள், சிறுமைத்தொழில் முயற்சி, வருமான மீட்கும் கருத்திட்டங்கள், வீட்டு வியாபார நிலையங்கள், விவசாய மீன்

பிடி, வாராந்த சந்தைகள், சுய தொழில் முயற்சிகள், வீட்டுத்தோட்டம், அலங்கார மலர் உற்பத்தி, கலைகலாச்சாரம், வியாபாரம், நடமாடும் விற்பனை நிலையங்கள், சமூக காப்புறுதித்திட்டங்கள், நன்கொடைகள் போன்ற அபிவிருத்தி உரிய முறைகளில் வறிய மக்களை ஈடுபடுத்துவதன் மூலம் ஏழைமக்களின் வருமானம் அதிகரித்து அதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத்தரமும் உயர்வடைந்து கிராமிய பொருளாதார வளர்ச்சிக்கு வழிபிறக்கின்றது.

இத்தகய வறுமை ஒழிப்பு பொருளாதார முன்னேற்றத்துடன் மட்டும் நின்று விடாமல் மனித வாழ்வின் அனைத்து துறைகளின் வளர்ச்சியோடும் இணைந்திருக்கின்றது.

கருத்துத்திட்டம் அமையும் விதம்

குறிப்பிட்ட பிரதேச எல்லைக்குள் காணப்படும் பிரச்சனைகளை அடையாளம் காணல்

பிரச்சனைகளை முன்னுரிமை அடிப்படையில் ஒழுங்கு படுத்தல்

வளங்களை இனம் காணல்

சிறிய குழுக்கள், சங்கங்கள், செயலணிகளின் ஆலோசனை பெறல்

சாத்திய வள அறிக்கையை தயாரித்தல்

நீடித்து நிலைத்திருக்கக்கூடிய பயனுறுதி வாய்ந்த கருத்திட்டத்தை தெரிவு செய்தல்

நிதி பெறும் ஸ்தாபனமாகிய சமுர்த்தி வங்கியில் கடன் பெறல்

திட்டத்தைநடைமுறைப்படுத்தல் - ஆரம்பித்தல்

முன்னேற்றத்தை அவதானித்தல்

மதிப்பிடல்

இவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையான கருத்திட்டங்களால் சமுர்த்தி பயனுகரிகளின் மாதாந்த வருமானம் அதிகரித்து அவர்களின் பொருளாதாரம் செழிப்படைய வாய்ப்பு உண்டாகிறது.


பங்கு பற்றுதல் தொடர்பான அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொண்டு சமுர்த்தி வங்கித்திட்டம் குடும்ப ரீதியாக கிராமிய மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

சகல வகையான தீர்மானங்களை மேற்கொள்ளல் தொடர்பான பொறுப்பு கிராம மட்டத்திலும் பொறுப்பளிக்கப்பட்டுள்து. செயற்படுகின்ற பயனுகரிகளில் பங்குபற்றுதலுடன் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளை திட்டமிடுதலும், நடைமுறைப்படுத்தலும் மேற்கொள்ளப்படுகின்றது.

சமுர்த்தி தேசிய வறுமைஒழிப்புத்திட்டத்தில் வறுமைப்பட்ட வர்களுக்காக நடை முறைப் படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களுக் கிடையே போசாக்கு, சுகாதாரம் உட்பட கிராமத்தின் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்தல் கட்டாயச்சேமிப்பு சமுர்த்தி வங்கியமைப்புக்கள் முக்கியமானதோடு இச்சமுர்த்தி வங்கிகள் இன்று பலம் பொருந்திய ஒரு நிதி நிறுவனமாக கிராமிய பொருளாதார அபிவிருத்தியின் பசுமைப்புரட்சியை ஏற்படுத்தியுள்ளன. நிதிச்சந்தையில் ஸ்திரமான இடத்தை பிடித்துள்ளன.

## உசாத்துணைகள்

வீரகேசரி வார வெளியீடு



ஆக்கம் P. இந்திரகாசன்
A/L 2005 Com

# வரி - Tax

## வரியின் அறிமுகம்

அரசு வருவாயை உழைக்க பண்டம் சேவை வடிவில் பயன் வழங்காது அறவிடும் கட்டாய கட்டணமே வரி ஆகும். நேர்வரி , நேரில் வரி என்னும் வகைப்படுத்தல் பின்வரும் காரணிகளின் அடிப்படையில் இடம் பெறுகின்றன.

1.வரிச்சுமை இறுதியில் யாரால் தாங்கப்படுகின்ற தென்னும் வரிப்பளுவின் தன்மை.

2. வரிச்சுமையை பிறிதொருவர் மீது சுமத்தும் வரிப்பெயர்ச்சித்தன்மை.

## வரியின் வரைவிலக்கணம்

தனிநபரோ அல்லது நிறுவனமோ அல்லது வேறு தரப்பினரோ சட்டப்படி கட்டாயமாக செலுத்தப்பட வேண்டிய ஓர் கட்டாயக் கட்டணமே வரி ஆகும்.

## நேர் வரி

வருமான வரி சொத்து வரிகளை செலுத்துவோனே வரிச்சுமையையும் தாங்க வேண்டியவராகவும் வரி நட்டத்தை பிறிதொருவர் மீது சுமத்த முடியாதவராகவும் காணப்பட அத்தகைய வரிகளே நேர் வரிகளாகும்.

## இலங்கையின் பிரதான நேர் வரிகளாவன.

1. வருமான வரி (G. D. P யில் 2 - 3 வீதம்)
   - A) தனிநபர் வருமான வரி
   - B) கூட்டு நிறுவன வருமான வரி

2. சொத்து வரி (G. D. P யில் 0.7 வீதம்)
   - i) சொத்து மாற்றல் முத்திரை தீர்வை
   - ii)மூலதன மாற்றல் முத்திரை தீர்வை
   - iii) செல்வ வரி

## நேரில் வரி

பண்டங்கள் சேவைகள் மீது வரி விதிக்கப்படுகையில் விற்பனையாளர் வரி நட்டத்தை பண்டங்கள் சேவை விலையினூடாக நுகர்வோன் மீது சாட்டுதல் செய்ய நுகர்வோரே வரிச்சுமையை தாங்கும் வரிகளே நேரில் வரிகளாகும்.

## இலங்கையில் பிரதான நேரில் வரிகளாவன.

1. உள்நாட்டு பண்டம் சேவை மீதான வரிகள்
   - A) B. T. T (G. D. P யில் 10 வீதம்) தற்போது G. S. T
   - B) காலால் வரிகள் (G. D. P யில் 3 வீதம்)
   - C) பாதுகாப்பு தீர்வை (G. D. P யில் 2 வீதம்)
   - D) அனுமதிப்பத்திர வரிகள் (G. D.P யில் 0.2 வீதம்)

2. சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் (G. D.P யில் 3 வீதம்)
   1. ஏற்றுமதி தீர்வை
   2. இறக்குமதி தீர்வை

## நல்ல வரி முறையின் பண்புகள்

1. வரி விதிப்பில் நடு நிலமை காணப்படல்.
2. நீதித்துவம் அல்லது நியாயத்துவம் காணப்படல்.
3. உறுதித்தன்மை காணப்படல்.

4. எளிமைத்தன்மை காணப்படல்.
5. சிக்கனத்தன்மை காணப்படல்.
6. செயல் திறன் காணப்படல்.

## வரி விதிப்பின் நடு நிலமை தன்மை

அரசு வரி விதிக்கும் போது பொது மக்கள் மீது மிகையான வரிச்சுமை சுமத்தப்படுவதை தவிர்த்தலை இது குறிக்கும். ஏனெனில் உயர்வான வரிச்சுமை இடம் பெறுமாயின் அது சந்தை சக்திகளாக கேள்வி நிரம்பலில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தும் அதனால் சந்தை விலை மட்டம் உயர்வாகும் நிலமைகள் தோன்றும்.

இந்த நிலையில் நுகர்வு, உற்பத்தி, முதலீட்டு தீர்மானங்களில் எதிர்பாராத விளைவுகள் தோன்றி நாட்டின் உற்பத்தி பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படுவதுடன் சென்மதி நிலுவை நாணய மாற்றங்களிலும் பாதிப்பு ஏற்படும்.

எனவே இந்த நிலைமையை தவிர்க்க வரிச் சுமை குறைவாக இருக்க வேண்டுமென கூறப்படுகின்றது. இதற்கு பின்வரும் வழிகளை பின்பற்றலாம்.

1. குறித்த பண்டம் மீதான உயர்ந்த வரி வீதத்தை தவிர்த்து சகல பண்டம் மீதும் குறைந்த பொது வரி ஒன்றை விதித்தல்.
2. கேள்வி நெகிழ்ச்சியற்ற மதுபானம் போன்ற பண்டங்கள் மீது வரி விதித்தல்.

## நீதித்தன்மை அல்லது நியாயத்துவம்

வரி விதிப்பு நியாயமாக இடம் பெற வேண்டும் என்பதை இது குறிக்கும் அரசு வரி விதிப்பை மேற் கொள்ளும்போது உயர்ந்த மட்டத்தவர் கூடிய வரிப்பளுவையும் குறைந்த வருமான மட்டத்தவர் குறைந்த வரிப்பளுவையும் சம வருமான மட்டத்திலுள்ளவர்கள் சம வரி பளுவையும் தாங்க வேண்டுமென கூறப்படுகிறது. இதனூடாக நிலைக்குத்தான கிடையான சமத்துவம் பேணப்படும்.

## இலங்கையில் வரி விதிப்பில் நீதித்துவம் பேண

1. வருமான வரி, சொத்து வரி போன்ற நேர் வரி விதிப்பில் விருத்திமுறை பின்பற்றப்படுகின்றது.
2. பண்டம் சேவை மீதான நேரில் வரியில் நீதி பேணுதல்

**வரிவிதிப்பில் செயல் திறன் அல்லது செயல்திறன் வரி**

i. உயர்ந்த வர்க்கத்தால் நுகரப்படும் ஆடம்பரப்பண்டம் மீது உயர்ந்த வரி விதித்தல்
ii. சாதாரண பண்டங்கள் மீது குறைந்த வரி விதித்தல்.

3. அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசியப் பண்டங்களுக்கு வரி விலக்கும் வழங்கப்படுகின்றது.

## வரி விதிப்பில் செயல் திறன் அல்லது செயல் திறன் மிக்க வரி

**அரசு வரி விதிப்பை மேற்கொள்ளும் போது**

1. தனியார் துறையின் செயற்பாட்டில் தோன்றும் உற்பத்தி நுகர்வு சார்ந்த வெளிவாரிகளால் பொருளாதார தீர்மானங்கள் செயல் திறன் அற்றவையாக காணப்படும் போது அவ்வெளிவாரிகளை கட்டுப்படுத்தல்
2. விருத்தி முறை வரியினூடாக வருமான பரம்பலில் காணப்படும் சமனின்மைகளை நீக்குவது
3. பண வீக்கத்தை கட்டுப்படுத்தி சேமிப்பு

முதலீடுகளை வரியினூடாக ஊக்கப்படுத்துதல்.
4.வரியினூடாக அரசுக்குரிய வருவாயை பெற்று கொடுத்தல்
5. வரியினூடாக வளரும் கைத்தொழிலை பாதுகாத்தல் போன்றன வரி விதிப்பில் செயல் திறன் எனப்படும்.

## வரி விதிப்பின் உறுதித்தன்மை

பேரண்ட பொருளாதார இலக்குகளான பொருளாதார உறுதி வளர்ச்சி அபிவிருத்தி நிறை தொழில் சமத்துவம் போன்றவற்றை அடைய வரி விதிப்பு பயன்பட வேண்டும் என்பதே வரி விதிப்பில் உறுதி தன்மையாகும்.

**உதாரணமாக வரி விதிப்பினூடாக**

1. சேமிப்பு முதலீடு பெருக வேண்டும்.
2. பண வீக்கம் குறைதல் வேண்டும்.
3. சென்மதி நிலுவை பிரச்சினை குறைதல்.
4. கைத்தொழில் பாதுகாக்கப்படல்.
5. வர்க்க முரண்பாடு குறைதல்.

**வரி அரசிறை கிடைக்கும் அளவைத் தீர்மானிக்கும் காரணிகள்**

1. வரித்தளம்
2. வரிவீதம்
3. வரி இசைவு

**1) வரித்தளம்**

வரி விதிக்குட்பட்ட அனைத்து விடயங்களினதும் பெறுமதியின் கூட்டுத்தொகை வரித்தளமாகும்.
(இலங்கையில் பெருமளவு வரித்தளம் உடைய வரி B. T. T தற்போது G. S. T )

**2) வரி வீதம்**

விதிக்கப்படும் வரியினது நூற்றுவீத அளவே வரிவீதமாகும்.
( உதாரணம் G. S. T யில் வரி 12.5 ஆகும்.)

**3) வரி இசைவு**

வரி இசைவு என்பது

1. கோவைப்படுத்தலுக்கான இசைவு
2. செலுத்துதலுக்கான இசைவு
3. தெரிவிக்கும் இசைவு

போன்ற வரிச்சட்டத்துக்கான தன்னிச்சையான இசைவுகளை உடையதாகும்.

## கோவைப்படுத்தல் இசைவு என்பது

வரி செலுத்துவதில் நிலுவைகள் சேராதவாறு வரி செலுத்த வேண்டிய உரிய திகதியிலோ அல்லது அதற்கு முன்பே வரி முழுவதையும் தன்னிச்சையாக செலுத்துவதைக் குறிக்கும்.

**செலுத்தும் இசைவு என்பது**

சுய வரி மதிப்பீட்டில் பெரும்பாலும் ஈடுபடும் அரச சம்பளமல்லாத ஊதியம் உழைப்போர் தன்னிச்சையாக வருமான வரி செலுத்துவதைக்குறிக்கும்.

**தெரிவிக்கும் இசைவு**

வரியினை செலுத்துவோர் வரியில் இருந்து தப்புவதற்காக தரவுகளை குறைத்துக்காட்டாது வரி செலுத்த வேண்டிய வருமானங்களையும் தரவுகளையும் தன்னிச்சையாக சரியாக காட்டுவதே தெரிவிக்கும் இசைவாகும்.

**இலங்கையில் வரி இசைவு மிக குறைவாக காணப்படக்காரணம்**

1. வரியின் தன்மைகளை விளங்க முடியாதவாறு சிக்கலான வரி அமைப்பு காணப்படல்
உதாரணம்: G. S. T
2. உயர்வான வரி வீதங்கள் காணப்படல்
3. வரி செலுத்துவோர் வரி பற்றி கொண்டுள்ள அறிவு போதாமை

4. வரியில் நேர்மை நியாயம் போதாமை

5. வரி அறவீட்டாளரின் வினைத்திறன் போதாமை

**வரி இசைவை அதிகரிக்க மேற்கொள்ளப்படும் நடத்தைகள்**

1. வரியின் எண்ணிக்கையை குறைத்தல்
2. வரியின் அமைப்பை இலகுவாக்கல்
3. வரியின் அறவிடலைக் கணணி மயமாக்கல்
4. வரி இசைவு இல்லாதவர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுத்தல்
5. வரி இசைவுடையோரை ஊக்கப்படுத்தல்
6. வரி அறவீட்டாளருக்கு பயிற்சி அளித்தல்
7. வரி பற்றி தொடர்பு சாதனங்களினூடாக மக்களுக்கு விளக்கமளித்தல்

## மொத்த விற்பனை வரி (B. T. T)

இலங்கையில் இவ்வரி விதிப்பு முறை 1964 ல் உருவாக்கப்பட்டது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள் சேவைகளின் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெறும் போது ஒவ்வொருவிற்பனை கட்டத்திலும் தோன்றும் மொத்த விற்பனைப் பெறுமதியில் குறித்தவொரு வீதத்தை வரியாக விதித்தல் B. T. T ஆகும்.

காலாண்டு மொத்த விற்பனை பெறுமதி 25000 க்கு உயர்வாக அல்லது வருட விற்பனை பெறுமதி 100 000 மேலாக அமையின் அதற்கெதிராக B. T. T அறவிடப்பட்டது.

1998 ஏப்பிரல் மாதத்திலிருந்து இவ்வரிக்குப் பதிலாக G. S. T அறிமுகம் செய்யப்பட்டது. எனினும் மாகாண சபைகளால் மொத்த சில்லறை வியாபாரத்துக்கு B. T. T அறவீடு மேற்கொள்ளப்படும்.

## மொத்த விற்பனை வரியின் குறைபாடுகள்

1. ஒவ்வொரு விற்பனை கட்டத்திலும் மொத்த விற்பனைப்பெறுமதி மீது B. T. T விதிக்கப்படுவதும் ஒரு விற்பனை பெறுமதி மீது பல தடவை வரி விதிப்பு இடம் பெறும்

2. இறக்குமதிப் பண்டங்களின் பெறுமதி மீது இறக்குமதி தீர்வையுடன் B. T. T யும் விதிக்கப்பட இரட்டை வரி விதிப்பு இடம் பெறும்.

3. மேற்கூறிய காரணங்களால் அரச வருவாய் அதிகரித்தாலும்

a. பெருமளவில் பொது விலைமட்டம் அதிகரித்து பணவீக்க நிலமை ஏற்படும்

b. பெருமளவு வரிச் சுமை நுகர்வோரைத் தாக்குவதால் வாழ்க்கைச் செலவு கூடி முதலீடு குறையும்.

c. வறுமை மட்ட வர்க்கத்தினரின் கொள்வனவு ஆற்றல் பெரிதும் பாதிக்கப்பட்ட வறுமை மோசமடையும் வர்க்க முரண்பாடு அதிகரிக்கும்.

4. இவற்றால் பொருளாதார உறுதி பாதிக்கப்பட வளர்ச்சி அபிவிருத்தி நிறை தொழில் நியாயத்துவம் போன்ற பேரண்ட பொருளாதார இலக்குகள் பாதிக்கப்படும்.

இந் நிலமைகளை தவிர்க்கவே B. T.T க்குப் பதிலாக G. S. T அறிமுகம் இடம் பெற்றது. G. S. T ஒவ்வொரு விற்பனைக்கட்டத்திலும் சேர்ந்த பெறுமதி மீது அறவிடப் படுவதால் இக் குறைபாடுகள் நீங்கும்.

## பண்டங்கள் சேவைகள் மீதான வரி (G.S.T)

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள்

சேவைகளின் உள்ளூர் நுகர்வு மீது விதிக்கப்படும் வரி இதுவாகும்.

உற்பத்தி பகிர்வு எனும் தொடரில் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் சட்டத்திலும் சேர்க்கப்பட்ட அல்லது கூட்டப்பட்ட பெறுமதி மீது இவ்வரி விதிக்கப்படும்

காலாண்டு சேர்ந்த பெறுமதி ஐந்து லட்சமாக அமைந்தால் அல்லது வருடாந்த சேர்ந்த பெறுமதி பதினெட்டு லட்சமாக அமைந்தால் அவற்றின் மீது G. S. T அறவிடப்படும்

G. S. T வீதங்கள் இரு வகைப்படுத்தப்படும்

1. நியம வீதம் (12.5 வீதம்)
2. பூச்சிய வீதம் (0 வீதம்)

G. S. T யின் கீழ் தன்மை பதிவு செய்த விற்பனையாளர் மட்டுமே G. S. T அறவிடலாம்.

**நியம வீதமான 12.5 வீதம் G. S. T அறவிடப்படும் பண்டம் சேவை பகுதிகள்**

1. புதிய பயன்படுத்திய இறக்குமதி செய்த பொருட்களை விற்றல்
2. ஆடை உற்பத்தியாக்கல்
3. பொருட்களை வாடகைக்கு விடுதல்
4. கட்டிட நிர்மானம்
5. ஏனைய வரி விலக்கு அளிக்கப்படாத உள்ளூர் உற்பத்திகள்

**பூச்சிய வீத G. S. Tயில் அடங்குவன.**

1. பண்டங்களின் ஏற்றுமதி
2. ஏதேனும் வெளிநாட்டுக்கப்பல் அல்லது விமானத்தை திருத்துதல் தொடர்பான நேரடிச் சேவைகள் இவற்றின் மீது எத்தகைய வரியும் அறவிடப்பட மாட்டாது.

**G. S. Tயில் வரி விலக்கு பெறும் வாழ்க்கை**

நியம வரி வீத அல்லது பூச்சிய வரி வீத G. S. Tயில் அடங்காத வரி விலக்குப் பெற்ற வழங்கல்கள் எனப்படும். அவையாவன

1. அரிசி, மா, சீனி, பாண்
2. தேயிலை, தெங்கு
3. எரிபொருள்
4. புத்தக விற்பனை
5. மருத்துவ பொருட்கள்
6. பால்மா
7. ஆயுட் காப்புறுதி கல்விசார் சேவை
8. கருவாடு, வெங்காயம், மிளகாய்

பண்டம் சேவை மீதான வரி அறவிடப்படுவதை பின்வருமாறு உதாரணம் மூலம் காட்டலாம்.

A என்னும் G. S. Tயில் பதிவு செய்யப்பட்ட விற்பனையாளன் தான் உற்பத்தி செய்த பொருளை 100 க்கு விற்பனை செய்கின்றான். அவரது விற்பனையின் G. S. T= 12.50 ரூபா. B என்னும் G. S. Tயில் பதிவு செய்த வியாபாரி அப்பண்டத்தை A யிடம் கொள்வனவு செய்து 40 ரூபா பெறுமதியை சேர்த்து விற்பனை செய்கின்றார். அவரது விற்பனைக்காக = 5ரூபா

இதனை காசேட்டில் பதிவு செய்யும் முறை

**A விற்பனையாளர் ஏடு**

| No | விபரம் | வரவு | செலவு |
|---|---|---|---|
| 1 | காசுக்கணக்கு | 112.50 | |
| | விற்பனைக்கணக்கு | | 112.50 |
| 2 | செலவுக்கணக்கு | 12.50 | |
| | G. S. Tநிலுவைக்கணக்கு | | 12.50 |
| 3 | G. S. Tநிலுவைக்கணக்கு | 12.50 | |
| | காசுக்கணக்கு | | 12.50 |

**B விற்பனையாளர் ஏடு**

| No | விபரம் | | செலவு |
|---|---|---|---|
| 1 | கொள்வனவுக்கணக்கு | 100.00 | |
| | G. S. Tகணக்கு | 12.50 | |
| | காசு கணக்கு | | 112.50 |
| 2 | காசுக்கணக்கு | 157.50 | |
| | விற்பனைக்கணக்கு | | 157.50 |
| 3 | செலவுக்கணக்கு | | |
| | G.S.Tநிலுவைக்கணக்கு | 17.50 | |
| | G.S.Tநிலுவைக்கணக்கு | | 17.50 |
| 4 | G.S.Tநிலுவைக்கணக்கு | 5.00 | |
| | காசுக்கணக்கு | | 5.00 |

இறுதியில் பண்ட விலை 157.50 ஆக அமைய வரிச்சுமை முழுவதும் நுகர்வோரைச் சென்றடையும்

**G. S. Tஅறிமுகம் செய்வதன் நோக்கம் அல்லது G. S. Tயின் சிறப்பியல்பு**

1. சேர்ந்த பெறுமதி மீதே வரி விதிப்பு இடம் பெறுவதால் ஒரு பெறுமதி பல தடவை வரி விதிப்புக்குள்ளாவது தவிர்க்கப்படும்

2. இறக்குமதி பண்டமாயின் இறக்குமதி பெறுமதி மீது இறக்குமதி தீர்வை மட்டுமே அறவிடப்படும் உள்ளூரில் சேர்த்த மட்டுமே G. S. Tஅறவிடப்படும் இதனால் இரட்டை வரி நீக்கப்படும்

3. இவற்றினால் பண்டங்கள் மீதான வரிச்சுமை குறைவதால்

a. பொது விலைமட்ட அதிகரிப்பு குறைவாக அமைய பண வீக்க நிலமையை கட்டுப்படுத்தலாம்.

b. நுகர்வோர் வரிச்சுமை குறைவதால் வாழ்க்கைச் செலவு குறைந்து சேமிப்பு முதலீடு பெருகும்

c. அத்தியாவசியப் பொருட்களுக்கு வரி விலக்கு அளிப்பதாலும் வரிச்சுமை குறைவதாலும் வறுமை மட்டத்தின் கீழ் உள்ளோர் பயனடைவர் வர்க்க முரண்பாடு குறைந்து நியாயத்துவம் பேணப்படும்.

இத்தகைய தன்மைகளால் B.T.T யை விட G. S. T யின் பொருளாதார சமூக தாக்கங்கள் குறைவாக உள்ளதால் பொருளாதார உறுதி வளர்ச்சி அபிவிருத்தி நிறைதொழில் நியாயத்துவம் போன்ற பேரண்ட பொருளாதார இலக்குகளை நோக்கி நகரலாம்

**வரிப் பெயர்ச்சி, வரித்தாக்கம், வரியின் விளைவுகள்வரிப்பெயர்ச்சி**

அரசாங்கத்திற்கு வரியினை செலுத்தும் நபர் ஒருவர் அவ்வரியின் சுமையை பிறிதொருவர் மீது சாட்டுதல் செய்வதே வரிப்பெயர்சி எனப்படும்.

உதாரணமாக – இலங்கையில் நேரில் வரி விதிக்கப்படும் போது வரி விற்பனையாளர் விலையினூடாக அதனை நுகர்வோர் மீது சுமத்துவது வரிப் பெயர்ச்சியாகும்.

**வரித்தாக்கம் அல்லது வரிப்படுகை என்பது**

அரச வரி விதிப்பை மேற் கொள்ளும் போது வரிச்சுமை இறுதியில் யாரால் தாங்கப்படுகிறது என்பதாக அமையும். இதனை வரியின் இறுதி விளைவு என்பர்.

உதாரணமாக – இலங்கையில் நேரில் வரி விதிப்பின் தாக்கத்தை நுகர்வோனும் நேர் வரியின் தாக்கத்தை செலுத்துவோரும் பெறுகின்றார்கள்.

## வரியின் விளைவு என்பது

அரசாங்க வரி விதிப்பை மேற்கொள்ளும் போது சந்தை சக்திகளான கேள்வி நிரம்பலினூடாக சந்தை விலையிலும் அதனூடாக உற்பத்தி நுகர்வு, முதலீட்டு தொழிற்பாடுகளிலும் நாட்டின் தேசிய உற்பத்தி, சென்மதி நிலுவையிலும் ஏற்படும் மாற்றங்களும் அவை சார் பொருளாதார நடத்தைகளும் வரி விளைவு எனப்படும்.

## வரி விதிப்பு முறைகள்

1. விருத்தி முறை விதிப்பு

வருமானங்கள், சொத்துக்களின் அளவு அதிகரிக்க வரி வீதமும் உயர்வடைந்து செல்லுதல்.

2. சம வீத வரிவிதிப்பு முறை

வருமானங்கள் சொத்துக்களின் அளவு அத்கரிப்பினும் வரி வீதம் மாறாதிருத்தல்.

3. தேய்வு முறை வரி விதிப்பு

வருமானங்கள், சொத்துக்களின் அளவு வரி வீதம் குறைந்து செல்வதைக்குறிக்கும்.

## வரி வீதம்

முறையே A B C ஆகிய வளையிகள் குறிக்கும் வரி வகை அளவு

## வரி விதிப்பின் நோக்கங்கள்

- அரச பாதீட்டு செலவுக்கான வருவாயை பெறுவதற்கு.
- சாதன ஒதுக்கீட்டை ஒழுங்கு படுத்த
- வருமான வரி, சொத்து வரி போன்றவற்றின் ஊடாக பொருளாதார சமத்துவம் பேண.
- சர்வதேச வர்க்கத்தை ஒழுங்குபடுத்தி சென்மதி நிலுவையிலும் உறுதி பேண.
- இறக்குமதிகளை கட்டுப்படுத்தி உள்நாட்டு வளரும் கைத்தொழிலை பாதுகாக்க.
- அவசியமற்ற நுகர்வு மீதான வரிகளால் சேமிப்பு முதலீடுகளை பெருக்கலாம்.
- வரி விதிப்பின் ஊடாக தீய வெளிவாரிகளை கட்டுப்படுத்தலாம்.

## வரி விதிப்பின் விளைவுகள்

(A) வருமான வரி, சொத்து வரி போன்ற நேர் வரிகளினூடாக மக்களின் செலவிடக்கூடிய வருமானம் குறைவதால் பண்டங்களின் சந்தை கேள்வி குறைய விலை மட்டம் குறைந்து பணவீக்க நிலமை குறையும்.

அத்துடன் வர்க்க முரண்பாடுகள் குறைய பங்கீட்டில் நிதித்தன்மையும் சமத்துவமும் ஏற்படும். எனவே நேர் வரியின் விளைவுகள் சிறச்ததாகும்.

(B) பண்ட சேவை மீதான வரிகள், இறக்குமதி தீர்வை போன்ற நேரில் வரிகள் விதிக்கப்படும் போது

பொது விலை மட்டம் உயர்வதால் சந்தை சக்திகளில் குழப்ப நிலமை ஏற்பட்டு உற்பத்தி,முதலீடு, நுகர்வு தீர்மானங்கள் பாதிக்கப்படுவதாலும்

பண வீக்க நிலமைகளால் மக்களின் வாழ்க்கைச் செலவு கூடி வாழ்க்கைத்தரம் குறைவதுடன் சேமிப்பு முதலீடுகள் குறைவதாலும்.

வறுமை மக்களின் வாழ்க்கைத்தர பாதிப்பு உயர்வாக அமைவதாலும்,உயர்வான நேரில் வரிகள் பொருளாதார உறுதி, வளர்ச்சி, அபிவிருத்தி நிறை தொழில், சமத்துவ நிலமைகளை பாதிக்கும் தேய்வான விளைவு உடையன.

## பெறுமதி சேர்க்கப்பட்ட வரி VAT

இலங்கையின் மறைமுக வரியினுள் பிரதான வரிகளில் ஒன்றே VAT வரியாகும். இது 2003ம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. இதற்கு முன்னர் பொருட்கள் சேவைகள் மீதான வரியே G. S. T நடைமுறையில் இருந்தது.

## G. S. Tவரி (பொருட்கள் சேவைகள் மீதான வரி)

ஒரு நிறுவனத்தின் காலாண்டு விற்பனை 500 000 ரூபாவாக அல்லது வருடாந்த விற்பனை 180 0000 ரூபாவாக அண்மித்ததால் அல்லது மேற்பட்டதால் அந்த நிறுவனத்தின் கூட்டிய பெறுமதிக்கு 12.5 வீதம் என்ற நியம வீதத்தில் விதிக்கப்பட்டு வந்த வரியே G. S. Tவரியாகும். இவ்வரி 1998 ல் அறிமுகப்படுத்தப்பட்டு 2003ம் ஆண்டு நடுப்பகுத்யில் நீக்கப்பட்டு விட்டது.

## VAT வரி Value Add Tax

ஒரு நிறுவனத்தின் காலாண்டு விற்பனை 750000 ரூபாவாக அல்லது வருடாந்த விற்பனை 3000000 ரூபாவாக காணப்பட்டால் அந்த நிறுவனத்தின் கூட்டிய பெறுமதிக்கு 15 வீதம் என்ற நியம வீதத்தில் வரிப்பெறுமதி நடைமுறையில் இருக்கும் வரியே VAT ஆகும்.

அண்மைய ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் VAT வரி 5.5 வீதம் ஆகும். அரசிறையில் இது 20 வீதம் ஆகும்.

**காலால் வரி**

அரசாங்கம் சில பொருட்களை தெரிவு செய்வது அவற்றின் மீது விதிகக்கப்படுகின்ற வரியே காலால் வரி ஆகும்.

இலங்கையில் பின்வருவன வற்றின் மீது காலால் வரி விதிக்கப்படுகின்றன.

1. சிகரெட் அல்லது புகையிலை
2. மதுபானம்
3. தீப்பெட்டி
4. பெற்றோலியம்

அணமை ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் காலால் வரி 2.2 வீதம் ஆகும். அரசிறையில் 16வீதம் ஆகும்.



ஆக்கம்
சி . கல்கிராஜ்
ஆண்டு -13

இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு உதவும்
வெளிநாட்டு நிறுவனங்கள்
சீடா (S.O.A)
U.N.F.P.A
யுனிசெப் - யுனெஸ்கோ
N.O.R.A.D
U.N.D.P
நாடுகள் - யப்பான், பிரித்தானியா, பிரான்ஸ், நோர்வே

# பொருளியல் துளிகள்

## இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயத்தாள்களும் குத்திகளும்

| நாணயத்தாள்கள் – தொடர் | வழங்கப்பட்ட ஆண்டு |
|---|---|
| ஜோர்ச் மன்னர் – vi | 1951 |
| எலிசபெத் அரசி – ii | 1952 |
| இலங்கை படைக்கல சின்னம் | 1956 |
| எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்காவின் உருவம் | 1962 |
| மாகாபராக்கிரமபாகுவின் உருவம் | 1965 |
| எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்காவின் உருவம் | 1970 |
| இலங்கை படைக்கலச்சின்னம் | 1975 |
| செடிகொடிகள் | 1979 |
| வரலாற்று மற்றும் தொல்பொருளியல் கருப்பொருட்கள் | 1981 |
| வரலாற்று மற்றும் அபிவிருத்தி கருப்பொருட்கள் | 1987 |
| மரபுத்தொடர் இலங்கை கருப்பொருட்கள் | 1991 |
| ஞாபகார்த்த நாள் – இலங்கை சுகந்திரமடைந்த 50 ஆவது ஆண்டு நிறைவு (பொலிமத்தாள்) | 1998 |

| ஞாபகார்த்த குத்தி நாணயங்கள் – நோக்கம் | |
|---|---|
| பௌத்த ஜயந்தி பௌத்தயுகம் – 2500 | 1957 |
| இரண்டாவது உலக உணவு மகாநாடு | 1968 |
| அணிசாரா நாடுகளின் 5வது கூட்டம் – கொழும்பு | 1976 |
| இலங்கையின் முதலாவது நிறைவேற்று சனாதிபதி | 1978 |
| இலங்கையின் சர்வசன வாக்குரிமையின் 50வது ஆண்டு நிறைவு | 1981 |
| விரைவுபடுத்தப்பட்ட மகாவலிதிட்டம் | 1981 |
| வீடற்றோருக்கான புகலிடம் அளித்ததற்கான பன்னாட்டு ஆண்டு | 1987 |
| இலங்கை மத்திய வங்கியின் 40வது ஆண்டு நிறைவு | 1990 |
| 1991 டிசம்பரில் கொழும்பில் நடாத்தப்பட்ட 5வது தென்னாசிய விளையாட்டுக்கள் | 1991 |
| சனாதிபதி ஆர். பிறேமதாசா பதியேற்று 3வது ஆண்டு நிறைவு | 1992 |
| 2300 அநுபுது மிகிந்து ஜயந்தி | 1993 |
| ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் 50வது ஆண்டு நிறைவு | 1995 |

| | |
|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் 50வது ஆண்டு நிறைவு | 1995 |
| ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் 50வது ஆண்டு நிறைவு | 1996 |
| இலங்கையின் சுதந்திரதின 50வது ஆண்டு நிறைவு | 1998 |
| 1996 உலக கிரிக்கட் கிண்ணம் | 1999 |
| இலங்கை இராணுவத்தின் 50வது ஆண்டு நிறைவு | 1999 |
| இலங்கை மத்திய வங்கியின் 50வது ஆண்டு நிறைவு | 2000 |
| இலங்கை கடற்படையின் 50வது ஆண்டு நிறைவு | 2000 |
| இலங்கை வான் படையின் 50வது ஆண்டு நிறைவு | 2001 |
| கொழும்பு திட்டத்தின் 50வது ஆண்டு நிறைவு | 2001 |

**குத்தி நாணயங்கள்**

| | |
|---|---|
| இலங்கையின் படைக்கல சின்னம் | 1963 |
| இலங்கையின் படைக்கல சின்னம் | 1972 |

✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣

புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்திக் குறிக்கோள்கள் : இலக்குகளும் இலங்கையின் நிலமையும்

குறிக்கோள் :- மோசமான வறுமையையும் பட்டினியையும் இல்லாது ஒழித்தல்

## இலக்கு : 1

1990 - 2015 காலகட்டத்தில் நாளொன்றிற்கு ஒரு ஐ. அ டொலருக்கும் குறைவான வருமானத்தைப் பெறும் மக்களின் வீதத்தை பாதியாக குறைத்தல்

## இலங்கைச் சுட்டி

இலங்கையில் நாளொன்றுக்கு 1 ஐ.அ டொலருக்கும் குறைந்தளவு வருமானத்துடன் வாழும் மக்களின் தொகை 1990 இல் 4சதவீதமாகவும் 1995 இல் 6.6 சதவீதமாகவும் இருந்தது.

## இலக்கு : 2

1990 - 2015 இற்கிடையில் பட்டினியால் வாடும் மக்களின் வீதத்தை பாதியாக குறைத்தல்

## இலங்கை சுட்டி

2002 - குடும்ப வருமான, செலவின அளவீட்டின் படி உட்கொள்ளும் சக்தியின் போதுமை நியதிகளில், இலங்கையின் வறிய மக்கள் தொகை 2002இல் 28.1 சதவீதமாக இருந்தது. எடைகுறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை 1993 இன் 38 சதவீதத்தில் இருந்து 2000 இல் 29 சதவீதமாக குறைந்துள்ள போதிலும் இவர்கள் விடயம் கரிசனைக்குரியதொன்றாக விளங்குகின்றது.

குறிக்கோள் 2 உலகளாவிய ஆரம்பக் கல்வியைஅடையப்பெறல்

## இலக்கு : 3

2015 ஆம் ஆண்டளவில் சகல இடங்களிலுமுள்ள ஆண், பெண் குழந்தைகள் அனைவருக்கும் ஆரம்ப பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்யக்கூடியதாக இருப்பதை உறுதிப்படுத்தல்.

## இலங்கைச் சுட்டி

2000 - 2001 இல் ஆரம்பக் கல்வி தொடர்பான தேறி வரவுப்பதிவு 97 சதவீதமாக இருந்தது. 15 - 24 வயதுக்கு இடைப்பட்டோர் இடையேயான எழுத்தறிவு பெற்றோர் தொகை 2001 இல் 96.9 சதவீதமாக இருந்தது. வலுவாக நிறைவேற்றப்படாத போதும் 14 வயதுவரை கட்டாயக் கல்வி எனும் சட்ட கட்டுப்பாடு காணப்பட்டது.

## குறிக்கோள் 3 பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்தலும் பெண்களை வலுப்படுத்தலும்

## இலக்கு : 4

2005 ஆம் ஆண்டுக்கு முன்னா ஆரம்ப, இரண்டாம் நிலைக்கல்வி மட்டத்திலும், 2015 இற்கு முன்னர் சகல மட்டக்கல்வியிலும் பால்நிலை வேறுபாட்டை இல்லாதொழித்தல்

## இலங்கைச் சுட்டி

2000 - 2001 காலகட்டத்தில் ஆரம்பக்கல்வியில் சிறுமியர் சிறுவர் விகிதாசாரம் 0.94 ஆகவும் இரண்டாம் நிலைக்கல்வியில் 1.03 என்றும் இருந்தன. 2001 இல் 15 - 24 வயதிற்கு இடைப்பட்ட எழுத்தறிவு உள்ள பெண்கள் - ஆண்கள் விகிதாசாரம் 1.00 என இருந்தது.

## குறிக்கோள் 4 குழந்தை இறப்பு விகிதத்தை குறைத்தல்

## இலக்கு : 5

1990 - 2015 கால கட்டத்தில் 5 வயதிற்குட்பட்ட குழந்தை இறப்பு மூன்றில் இரண்டு பங்குகளால் குறைத்தல்.

## இலங்கை சுட்டி

1990 இல் 5 வயதிற்குட்பட்ட குழந்தை இறப்பு வீதம் (1000 உயிருடனான பிறப்புகளுக்கு) 23 ஆக இருந்தது. 2001 இல் இது 1990 - 2001 இற்கு இடையில் சிசு இறப்பு வீதம் (1000 உயிருடனான பிறப்புகளுக்கு) 19 இல் இருந்து 17 ஆக குறைந்தது.

## குறிக்கோள் 5 மகப்பேற்று சுகாதாரத்தை முன்னேற்றுதல்

## இலக்கு : 6

மகப்பேற்று இறப்பு வீத்தை 1990 - 2015 இற்கிடையே நான்கில் மூன்றாக குறைத்தல்.

## இலங்கை சுட்டி

மகப்பேற்று இறப்பு வீதம் 1996 இல் 100000 இற்கு 2.3 ஆக இருந்தது. 1995 - 2001 காலப்பகுதியில் பயிற்றப்பட்ட சுகாதார ஊழியர்களால் கவனிக்கப்பட்டோர் தொகை 97 சதவீதமாக இருந்தது.

## குறிக்கோள் 6 எச். ஐ. வி:. எயிட்ஸ், மலேரியா மற்றும் ஏனைய நோய்களுக்கு எதிராக போராடல்.

## இலக்கு : 7

எச். ஐ. வி / எயிட்ஸ் பரம்பலை பின்னடையச் செய்து 2015 அளவில் நிறுத்தல்.

## இலங்கை சுட்டி

இலங்கையில் எச். ஐ. வி/ எயிட்ஸ் இனது உத்தியோக பூர்வ வீதம் ஒப்பீட்டளவில் மிகக் குறைவாகவே உள்ளது. இருப்பினும் உண்மையான தொற்று வீதம் அதிகமாக இருப்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

## இலக்கு : 8

### மலேரியா மற்றும் முக்கிய நோய்களின் பம்பலை பின்னடையசெய்து 2015 ஆம் ஆண்டளவில் நிறுத்துதல்.

## இலங்கை சுட்டி

2000 இல் மலேரியாவுடன் தொடர்புடைய மரணங்களின் எண்ணிக்கை 9 ஆகும். 2000 இல் மலேரியாவால் பீடிக்கப்பட்டோர் தொகை 100000 இல் 1110 பேராகும். புதிய காசநோயாளிகளின் எண்ணிக்கை 1991 இல் இந்த 6,174 இல் இருந்து 2001 இல் 8,639 ஆக அதிகரித்தது. ஆனால் 1990 பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட சிகிச்சை முறை இப்போக்கினை பின்னடையச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## குறிக்கோள் 7 சுற்றாடல் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்தல்

## இலக்கு : 9

நாட்டின் கொள்கைகளிலும் கோட்பாடுகளிலும் அடையத்தக்கு அபிவிருத்திக் கோட்பாடுகளை ஒருங்கிணைத்தலும் சுற்றாடல் வள இழப்பை மாற்றியமைத்தலும்

## இலங்கைச் சுட்டி


1990 களில் காட்டுநிலப்பகுதி 5 சதவீதத்திற்கும் குறைவாக சுருங்கியுள்ளமை விரைவான காடழிதலை குறிக்கின்றது. காபனீரொட்சைட்டின் வெளியேற்றம் 1990 இல் 0.2 M. T இலிருந்து 1990 இல் 0.5 M. T ஆக அதிகரித்தது. இருப்பினும் சக்தி பன்னாட்டுகூறு ஒன்றிற்கான பொருளாதாரத்தில் மொத்த உற்பத்தி 1990 களில் அதிகரித்துள்ளமை சிறப்பான மூலவளம் பயன்பாட்டை உணர்த்துகின்றது. ஓசோன் படலத்தை சிதைக்கும் குளோரோ புளோரோ காபனின் மொத்த நுகர்வு வீழ்ச்சியடைந்துள்ளது.

## இலக்கு : 10

பாதுகாப்பான குடிநீரைப் பெறமுடியாத மக்கள் விகிதாசாரத்தை 2015 ஆம் ஆண்டளவில் அரைவாசியாக குறைத்தல்.

## இலங்கை சுட்டி

பாதுகாப்பான நீரைப்பெற கூடிய குடும்ப அலகுகளின் விகிதாசாரம் 1990 இல் 62 சதவீதத்தில் இருந்து 2000 இல் 70 சதவீதமாக அதிகரித்தது.



ஆக்கம்:
ஹீ. ரமேஸ்
A/L2005 com

# வெளிவாரிவிளைவுகளும் சந்தை தோல்விகளும்
# Externalities and Market Failure

## வெளிவாரி விளைவுகள்

சந்தை செயற்பாட்டிற்கு அல்லது விலைப் பொறிமுறையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஒரு நடவடிக்கையே வெயிவாரிஆகும். குறிப்பிட்ட ஒரு உற்பத்தி அல்லது நுகர்வு நடவடிக்கையின் போது இவற்றோடு தொடர்பு இல்லாத மூன்றாம் நபர் ஒருவர் விலைஎதனையும் செலுத்ததாது பெற்றுக்கொள்ளும் நன்மைகளும், நன்மைகள் எதனையும் பெற்றுக்கொள்ளும் செலவுகளுமே வெளிவாரி விளைவுகள் எனப்படும்.

இவ்வெளிவாரி விளைவுகளானது சந்தைவிலை பொறிமுறையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாக காணப்படும். அதாவது வெளிவாரி விளைவுகள் சந்தை தொழிற்பாடுகளிலும் விலைகளிலும் பிரதி பலிக்காததினால் சந்தைதோல்விகள் ஏற்படுகின்றன. இவ்வெளிவாரி விளைவுகள் அயல்விளைவுகள், அயல்விளைவுகள், மூன்றாம் தரப்பு விளைவுகள் எனவும் அழைக்கப்படுகின்றது.

## வெளிவாரி விளைவானது அதன் தன்மையைப் பொறுத்து இருவகைப்படுத்தப் படுகின்றது.

✧நேர்கணிய வெளிவாரி விளைவுகள் அல்லது வெளிவாரி நன்மைகள்

✧எதிர்கணிய வெளிவாரி விளைவுகள் அல்லது வெளிவாரிச் செலவுகள்

பொருளாதார நடவடிக்கையின் அடிப்படையிலும் இது இரண்டுவகைப் படுத்தப் படுகின்றது.

✧உற்பத்தி தொடாபான வெளிவாரி விளைவுகள்

✧நுகர்வு தொடர்பான வெளிவாரி விளைவுகள்

## நேர்கணிய வெளிவாரி விளைவுகள் அல்லது வெளிவாரி நன்மைகள்

குறிப்பிட்ட ஒரு உற்பத்தி அல்லது நுகர்வு நடவடிக்கையின்போது மூன்றாம் நபர் ஒருவர் விலை செலுத்தாமல் பெற்றுக் கொள்ளும் நன்மைகளே நேர்கணிய வெளிவாரி விளைவுகள் ஆகும்.இது

✧உற்பத்தி தொடர்பான நேர்கணிய வெளிவாரி விளைவு

✧நுகர்வு தொடர்பான நேர்கணிய வெளிவாரி விளைவுகள்

ஒருவரது உற்பத்தி நடவடிக்கையின் காரணமாக வேறொருவருக்கு ஏதாவது நன்மை அல்லது அனுகூலம் ஏற்படும் அதே வேளை அதன் பொருட்டு எந்த விதக் கொடுப்பனவும் மேற்பட வில்லையாயின் அவ் முதலாவது நபரின் உற்பத்தி மூன்றாம் நபர் மீது உற்பத்தி தொடர்பான வெளிவாரி நன்மையை ஏற்படுத்தும்.

Eg: ஒரு நிறுவனத்தினால் பயிற்றப்பட்ட ஊழியர் வேறொரு நிறுவனத்திற்கு பயன்படுதல்

ஒருவரது நுகர்வு நடவடிக்கையின் காரணமாக வேறொருவருக்கு அனுகூலம் அல்லது நன்மை ஏற்படும் அதேவேளை அதன் பொருட்டு

கொடுப்பனவு ஏதும் வழங்கப்பட வில்லையாயின் முதலாம் நபரின் நுகர்வு மூன்றாம் நபர் மீது ஏற்படுத்தும் நன்மையினைக்குறிக்கும்.

Eg: சுகாதார சேவையை நுகர்வதால் நோயற்ற சமூகம் உருவாகும்
மக்கள் கல்வியை நுகர்வதால் கல்வி அறிவுள்ள சமூகம் உருவாகும்

## எதிர்கணிய வெளிவாரி விளைவுகள் அல்லது வெளிவாரி தீமைகள்.

குறிப்பிட்ட ஓர் உற்பத்தி அல்லது நுகர்வு நடவடிக்கையின் போது மூன்றாம் நபர் ஒருவர் நன்மை எதனையும் பெற்றுக்கொள்ளாமல் தாங்கிக்கொள்ளும் செலவுகளே எதிர்கணிய வெளிவாரி விளைவுகள் எனப்படும்.

✧உற்பத்தி தொடர்பான எதிர்கணிய வெளிவாரி விளைவு

✧நுகர்வு தொடர்பான எதிர்கணிய வெளிவாரி விளைவு

ஒருவரது உற்பத்தி நடவடிக்கையின் காரணமாக வேறோரு நபருக்கு ஏதாவது பிரதிகூலம் ஏற்பட்டு அதற்காக அவர் செலவினை மேற்கொள்வராயின் நுகர்வு தொடர்பான வெளிவாரி தீமையாகும்.

Eg: ஒரு தொழிற்சாலையின் உற்பத்தி கழிவுகளால் ஏற்படும் சூழல் மாசடைதலும் அதன் விளைவுகளும்.

ஒருவரது நுகர்வு நடவடிக்கையொன்றின் காரணமாக வேரேரு நபருக்கு ஏதாவது பிரதிகூலம் ஏற்பட்டு அதற்காக அவர் செயலினை மேற்கொள்வராயின் அது நகர்வு தொடாபான வெளிவாரி தீமையாகும்.

Eg: ஒருவர் புகைபிடிக்கும் போது அருகில் உள்ள இன்னொரு நபருக்கு அப்புகை காரணமாக ஏற்படும் மாரடைப்பு.

## தனியார் செலவும் சமூக செலவும்

பொருட்கள் சேவைகளின் உற்பத்தி அல்லது நுகர்வு தொடர்பாக ஒரு நிறுவனத்திற்கு அல்லது ஒரு தனிநபருக்கு ஏற்படும் செலவே தனியார் செலவாகும். அதாவுது உற்பத்தியாளரின் உள்ளீட்டிற்காக மேற்கொண்ட செலவாகவும் நுகர்வோர் நுகர்வு தொடர்பாக மேற்கொண்ட செலவாகவும் காணப்படும். இது விலை பொறிமுறையின் செயற்பாட்டில் உள்ளடங்கும் செலவாக காணப்படும்.

சமூகச் செலவு என்பது தனியார் செலவுடன் குற்ப்பிட்ட பண்ட உற்பத்தியாளர் அல்லது நுகர்வோர் தவிர்ந்த சமூகத்திலுள்ள ஏனையோர் தாங்கிக்கொள்ளும் செலவையும் குறிக்கும்

சமூகச்செலவு=தனியார்செலவ+வெளிவாரிச்செல[illegible]

இங்கு வெளிவாரிச்செல[illegible] எதிர்கனிய வெளிவாரி! விளைவுகளைக்[illegible] இது தனியார் செலவைவிட அ[illegible]கவே காணப்படும்.

## தனியார் நலனும் சமூக நலனும்

பொருட்கள் சேவைகளின் உற்பத்திநுகர்வு தொடர்பாக ஒரு நிறுவனத்திற்கு அல்லது தனிநபருக்கு ஏற்படும் நன்மையே தனியார் நலன் ஆகும். ஒரு பொருளின் உற்பத்தியினால் ஏற்படும் நன்மையையும் குறிக்கின்றது. இவை சந்தை கேள்வி நிரம்பலில்பிரதிபலிப்பதாக காணப்படும்.

பொருட்கள் சேவைகளை உற்பத்தி அல்லது நுகர்வினால் ஏற்படும் வெளிவாரி நலனுடன் தனியார்

நலனையும் உள்ளடக்குவதனை குறிக்கும்.

சமூகச்நலன்= தனியார் நலன்+ வெளிவாரிநலன்

வெளிவாரி நலன் என்பது ரேகணிய வெளிவாரி விளைவினைக்குறிக்கின்றது. சமூக நலனானது தனியார் நலனிலும்பார்க்க கூடுதலாக காணப்படும்.

## சந்தை தோல்வி

சந்தை நடவடிக்கையில் அதாவது விலை பொறிமுறையில் ஏற்படும் தோல்வியே சந்தை தோல்வி ஆகும். சந்தை நடவடிக்கைகளின் திறமையீனம், நீதித்தனைமை என்பவற்றால் சந்தைத் தோல்வி ஏற்படுகின்றது.

- ✧ வெளிவாரி விளைவுகள்
- ✧ சந்தையில் போட்டித்தன்மை மறைந்து தனியுரிமைத்தன்மை தோன்றும் போது
- ✧ சந்தையில் நீதித்தன்மையற்ற பங்கீடு காணப்படும் போது
- ✧ பொதுப்பண்டங்கள் போன்றவற்றின் காரணத்தாலும் சந்தை தோல்வி ஏற்படுகின்றது.

## வெளிவாரி விளைவுகளால் சந்தைதோல்வி ஏற்படல்

வெளிவாரிவிளைவுகளினால் விலை பொறிமுறை தோல்வி அடைந்ததை இது குறிக்கும் அதாவது நடைமுறையில் மக்கள் எதிர்கொள்ளும் சில நடவடிக்கைகள் சந்தையின் கேள்வி , நிரம்பல் ஆகியவற்றில் பிரதிபலிக்காது இருப்பதை இது குறிக்கும். இவ்வாறு வெளிவாரிவிளைவுகளால் சந்தைதோல்வி ஏற்படுவதற்கான காரணங்கள் வருமாறு

1.உற்பத்தி தொடர்பான தீமானங்களை மேற்கொள்ளும்போது சமூகத்திற்கு ஏற்படும் வெளிவாரிவிளைவுகளை கருத்தில் கொள்ளாமை

2.செலவுகளை அல்லது இலாபங்களை கணிக்கும்பொது வெளிவாரிவிளைவுகளை கருத்தில் கொள்ளாமை

3.நுகர்வு பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளும் போது வெளிவாரிவிளைவுகளை கருத்தில் கொள்ளாமை.

## சந்தை தோல்வி ஏற்படுவதை தடுத்தல்

வெளிவாரிவிளைவுகள் காரணமாக சந்தை முறைமை தோல்வி அடைவதை தடைசெய்வதற்கு அரசாங்கம் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

1. நேர்கணிய வெளிவாரிவிளைவுகளால் சந்தை தோல்வி ஏற்படுவதை தடுக்க உதவி வழங்குதல் இதன் மூலம் கேள்வி நிரம்பல் மட்டத்திலிருந்து சமூக கேள்வி, நிரம்பல் மட்டத்திற்கு மாற்றியமைந்து சமூக திறன் வாய்ந்த சமூக நிலையை ஏற்படுத்துதல்

2. எதிர்கணிய வெளிவாரிவிளைவுகளை தரும் நடவடிக்கைகளுக்கு கூடிய வரிகளையும் மேலதீக செலவுகளையும் ஏற்படுதத்தி உற்பத்தி நுகர்வுகளைக் குறைத்தல்.

3. சட்டம் ஒழுங்கு ஆகியவற்றைப் பேணுதல்.



ஆக்கம்:
S.Sivaranjan
2005 Com

# சர்வதேச வர்த்தகம் தொடர்பான முழுநய, ஒப்பீட்டு நயக் கோட்பாடுகளும் நடைமுறைகளும்

## 1.0 அறிமுகம்

சர்வதேச வர்த்தகம் என்பது எந்தவொரு பொருளாதாரமும் தனது அரசியல் எல்லைக்கு வெளியே உள்ள பிற பொருளாதாரங்களுடன் சட்ட ரீதியாக மேற்கொள்ளப் படுகின்ற பொருட்கள் சேவைகள் தொடர்பான பரிமாற்றம் என்பதனைச் சுட்டி நிற்கின்ற ஒரு பதம் எனலாம்.

### சர்வதேச வர்த்தகம் இரண்டு பிரதான வகைப்படும்.

1. ஏற்றுமதி வியாபாரம்
2. இறக்குமதி வியாபாரம்

### ஏற்றுமதி வியாபாரம்

இந்த வகையில் குறிப்பிட்ட பொருளாதாரம் ஒன்றில் இருந்து பிற பொருளாதாரங்களுக்குப் பொருட்கள் சேவைகளை சட்ட ரீதியாக விற்பனை செய்கின்ற நடவடிக்கை ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

### இறக்குமதி வியாபாரம்

இந்த வகையில் குறிப்பிட்ட பொருளாதாரம் ஒன்றிலிருந்து பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்கின்ற நடவடிக்கை இறக்குமதி வியாபாரம் ஆகும்.

## 2.0 சர்வதேச வர்த்தகம் தோன்றுவதற்கான பிரதான காரணிகள்

நாடுகளிடையே கிடைக்கின்ற வளங்களின் அளவு, அவற்றின் விலைகள், அவற்றின் தன்மை, வினைத்திறன் என்பன வேறுபடுகின்றமை.

எல்லா நாடுகளாலும் தமக்கு தேவையான எல்லாவற்றையும் தாமே உற்பத்தி செய்து பெறமுடியாத நிலை உள்ளமை. ஒவ்வொரு நாடும் தம் நாட்டில் கிடைக்கின்ற வளங்களைக் கொண்டு ஒரு சில பொருட்கள் சேவைகளின் உற்பத்திகளில் சிறப்புத் தேர்ச்சி பெறக்கூடிய நிலை உள்ளமை.

மேற்படி ஒரு சில பொருட்கள் சேவைகளில் மட்டும் உற்பத்தி தொடர்பான சிறப்புத் தேர்ச்சி பெறுவதால் அத்தகைய உற்பத்திகள் காணப்படும் மிகையினை ஏற்றுமதி செய்ய வேண்டியிருத்தல்.

சர்வதேச ரீதியாகத் தொழிற்பிரிப்பு சிறப்புத் தேர்ச்சி என்பனவற்றின் மூலம் நாடுகள் பெறக்கூடிய அநுகூலங்களைப் பெறும் நோக்கம் உள்ளமை.

ஒவ்வொரு நாட்டினதும் பொருட்கள் சேவைகள் தொடர்பான ⟵ தெரிவு ⟵ வேறுபட்டு காணப்படுகின்றமை.

நாடுகளிடையே உற்பத்தி தொடர்பான முழுநயம் ஒப்பீட்டுநயம் வேறுபட்டுக் காணப்படுகின்றமை.

போன்ற பலவற்றை குறிப்பிடலாம்.

## 3.0 சர்வதேசவர்த்தகத்தின் துரித வளர்ச்சிக்கு துணை போகும் முக்கிய காரணிகள்

### 1) நவீன போக்குவரத்து வளர்ச்சி

ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு பொருட்களையும் ஆட்களையும் நகர்த்துகின்ற செயற்பாடு போக்குவரத்தாகும். போக்குவரத்தானது சர்வதேச வர்த்தக வளர்ச்சிக்கு பாரிய பங்கு ஆற்றுகின்றது.

நிறுவன ஊழியர்களை உரிய நேரத்தில் களைப்படையாது கொண்டு சேர்ப்பதற்கு வழிவகுத்தல்.

உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களை வலுப்பொருட்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ள வழிவகுத்தல்.

உற்பத்திப் பொருட்களை தேசிய சர்வதேச சந்தைகளுக்கு எடுத்து செல்வதற்கு போக்கவரத்தானது வழிவகுக்கின்றது.

### 2) செய்தித் தொடர்பாடலின் வளர்ச்சி

இரண்டு தரப்பினர்களுக்கிடையில் செய்திகள், எண்ணங்கள், கருத்துக்கள், தகவல்கள் பரிமாற்றப்படுகின்ற செயற்பாடே தொடர்பாடலாகும். சர்வதேச வர்த்தகத்திற்கு தொடர்பாடலின் பங்குநுகர்வோரது தேவைகள் விருப்பங்களை அறிந்து கொள்ள உதவுதல்.

பொருட்கள், சேவைகள் பற்றிய தகவல்களை நுகர்வோருக்கு வழங்குவதற்கு தொடர்பாடல் அவசியமாகின்றது.

ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், விற்பனை யாளர்கள் ஏனைய நிறுவனங்கள் போன்றவற்றுடன் தொடர்பு கொள்ள உதவுதல்.

### 3) வங்கித் தொழிலின் வளர்ச்சி

மக்களிடமிருந்து பண வைப்புக்களை திரட்டி அவற்றை பாதுகாத்து தேவையான போது கடன் வழங்குவதில் ஈடுபடுகின்ற நிதி நிறுவனங்களே வங்கியாகும்

சர்வதேச வர்த்தக வளர்ச்சிக்கு வங்கித் துறையின் பங்கு

- காசோலை பயன்பாட்டிற்கு வழிவகுத்தல்
- வங்கி கடன் வங்கி மேலதிக பற்று வசதிகளை வழங்குதல்
- ஆலோசனை வழங்குதல்
- வெளிநாட்டு வியாபாரம் தொடர்பான தகவல்கள் வழங்குதல்.
- நாணய மாற்று வசதியை செயற்படுத்துதல்

### 4) களஞ்சியப்படுத்தலின் வளர்ச்சி

உற்பத்திக்கு அவசியமான மூலப்பொருட்களையும், முடிவுப் பொருட் களையும் உரிய காலப்பகுதி வரையும் பாதுகாக்கின்ற நடவடிக்கையினை களஞ்சியப்படுத்தல் என்பர்.சர்வதேச வர்த்தக வளர்ச்சிக்கு களஞ்சியப்படுத்தலின் பங்கு

வியாபாரத்திற்கு தேவையான முடிவுப் பொருட்களை முன்கூட்டியே பெற்று பாதுகாக்க முடிதல்.

பருவகால உற்பத்தி பொருட்களை எல்லா காலங்களிலும் சீராகப் பெற்றுக்கொள்ள முடிதல்.

விலைத்தளம்பலை கட்டுப்படுத்த வழிவகுத்தல்

### 5) காப்புறுதி தொழிலின் வளர்ச்சி

எதிர்காலத்தில் ஆயுளுக்கோ அல்லது சொத்துக்கோ ஏற்படக் கூடிய பண ரீதியான இழப்புக்களை ஈடுசெய்வதற்கு மேற்கொள்ளப் படுகின்ற முன் ஏற்பாட்டு நடவடிக்கையே காப்புறுதி ஆகும்.

சர்வதேச வர்த்தகத்தினை பாதுகாத்தலும் எதிர்காலத்தில் ஏற்படும் நட்டங்களை ஈடுசெய்வதன் ஊடாக சர்வதேச வர்த்தகத்தை ஊக்குவிக்கின்றது.

## 4.0 சர்வதேச வர்த்தகத்தின் மூலம் கிடைக்கக் கூடிய முக்கியமான அநுகூலங்கள்

நாடுகளுக்கிடையே காணப்படும் தொழில் பிரிப்பு சிறப்புத் தேர்ச்சி மூலம் உற்பத்தி மட்டம் நுகர்வு மட்டம் அதிகரிக்கும்.
தொழிற்பிரிப்பு சிறப்புத் தேர்ச்சி காரணமாக பேரளவு உற்பத்தி ஏற்பட்டு அளவுத்திட்ட சிக்கனங்கள் அனுபவிப்பதால் உற்பத்திச் செலவு குறைந்து இலாபம் அதிகரிக்கும்.
சர்வதேச ரீதியில் தொழிற்பிரிப்பு சிறப்புத் தேர்ச்சி காரணமாக சிறந்த அநுபவமும் தொழில்நுட்ப திறனும் பெறப்படுவதாலும் போட்டியை எதிர்நோக்குவதாலும் தரம் கூடிய பொருட்கள் சேவைகளை குறைந்த விலையில் பெறமுடிதல்.

மொத்தமாக வளங்கள் வீணடிப்பு தடுக்கப்பட்டு திறமையாக பயன்படுத்தி உற்பத்தி செய்து வர்த்தகம் செய்தல் மூலம் உயர்ந்த வாழ்க்கை தரத்தை பேண முடிதல்.
பிற நாடுகளுடன் பொருளாதார, அரசியல் ரீதியாக தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அனுபவங்களையும் பெற முடியும்.

## 5.0 சர்வதேச வர்த்தகத்தின் மூலம் ஏற்படக் கூடிய முக்கியமான பிரதி கூலங்கள்

பிறநாடுகளில் பொருளாதார அரசியல் ரீதியில் தங்கியிருக்கும் சூழ்நிலை உருவாகும். இதனால் பல பாதிப்புக்கள் ஏற்படும் .
உதாரணம் : ஈராக் மீதான பொருளாதார தடையால் ஈராக் பாதிப்புற்றமை.
உள்நாட்டு உற்பத்தி நடவடிக்கைகளில் குழந்தை நிலைக்கைத்தொழில்கள் பாதிக்கப்படும்.
காரணம் : சர்வதேச ரீதியில் போட்டி காரணமாக வளர்ச்சி குன்றிய நாடுகளின் உற்பத்தி பாதிக்கப்படல்.
வர்த்தகத்தின் மூலம் அத்தியாவசியமில்லாத பொருட்கள், சேவைகளும் இறக்குமதி செய்யப்படுவதால் வாழ்க்கை செலவு கூடி அவர்களின் முதலீட்டு ஆற்றல் குறையும். அத்துடன் கலாச்சார சீரழிவுகள் ஏற்பட வழிகோலும்.
வர்த்தகம் மூலம் நாட்டின் உள்வரும் தொழில்நுட்பம் காரணமாக உள்நாட்டில் மிகையாக உள்ள ஊழியத்திற்கு வேலை வாய்ப்பு கிடைக்காது. மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும். சிறிய நாடானது பெரிய நாட்டின் சுரண்டலுக்குட்படவும் வர்த்தகம் துணை போகும்.
ஏற்றுமதி இறக்குமதி விலைகளில் பாதகமான தளம்பல் ஏற்படும் போது பேரினப் பொருளாதார நடவடிக்கைகள் (விலைமட்டம், உற்பத்தி மட்டம், நுகர்வு மட்டம், வேலை மட்டம், சேமிப்பு மட்டம், சென்மதி நிலுவை போன்றன) பாதிக்கப்படலாம்.

வர்த்தகத்தினால் கிடைக்கும் நன்மை தீமைகளைப் பற்றிய ஆய்வை மேற்கொண்டு அவற்றை விளக்கிய கோட்பாடுகளில்
முழுநயக் கோட்பாடு பற்றியும்
ஒப்பீட்டு நயக்கோட்பாடு பற்றியும் நோக்குவோம்.

## 6.0 முழுநயக் கோட்பாடு (Thery of Absolute Adbantage)

1776 ஆம் ஆண்டு அடம்சிமித் (Adamsmith) என்ற பொருளியல் அறிஞர் நாடுகளின் செல்வம் (Wealth of Nation) என்ற நூலை வெளியிட்டார். இவர் எந்தவொரு நாடும் நன்மை பெறுகின்ற போது தான் வர்த்தகத்தில் ஈடுபடும் என்றார். முழுநய அடிப்படையில் எந்த நாடு எந்த பொருள் உற்பத்தியில் செயற்றிறன் கொண்டுள்ளதோ,

அந்த நாடு அப்பொருளிலும், மற்றைய நாடு மற்றப் பொருளிலும் செயற்றிறன் கொண்டுள்ள போது அந்த நாடு அப்பொருளிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்று வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் நன்மை பெறக் கூடிய வகையில் பற்றாக்குறையானதும், மாற்றுப் பயன்பாடு கொண்டதுமான வளங்களை திறமையாகப் பயன்படுத்தி உற்பத்தி செய்து வர்த்தகம் செய்வதன் ஊடாக உற்பத்தி ஆற்றல், நுகர்வு நலன் என்பவற்றை அதிகரிக்க வாய்ப்பு உண்டு என்று விளக்கினார். இவ்வகையில் இவர் முன்வைத்த கோட்பாடே முழுநய அல்லது முழுநன்மைக் கோட்பாடாகும்.

உதாரணம் : USA கோதுமை உற்பத்திக்கு சாதகமான காலநிலையையும் செயற்றிறனையும் கொண்டுள்ளதோடு, துணி உற்பத்திக்கு சாதகமற்ற காலநிலையையும் செயற்றிறன் இன்மையையும் கொண்டுள்ளது. மறுபுறமாக UK துணி உற்பத்திக்கு சாதகமான காலநிலையையும், செயற்றிறனையும் கொண்டுள்ள துடன் கோதுமை உற்பத்திக்கு சாதகமற்ற காலநிலையையும் செயற்றிறன் இன்மையையும் கொண்டுள்ளது. இந்த வகையில் USA கோதுமையிலும் UK துணியிலும் முழு நயம் பெற்று காணப்படுவதால் அவ் உற்பத்திகளை மேற்கொண்டு வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் நன்மை பெற முடியும் என்பதனையே முழுநய கோட்பாடு காட்டி நிற்கிறது.

| பொருள் | USA | UK |
|---|---|---|
| கோதுமை(ய)புசல் | 6 | 1 |
| துணி(c) யார் | 1 | 2 |

## ஆகாரம்

இவ்வட்டவணையின் படி உள்நாட்டு வர்த்தக மாற்று வீதம் USA இன் 6w=1c எனவும் UK இல் 1w=2c எனவும் கொள்வோம். எனவே கோதுமையின் உலக உற்பத்தி 6w+1w=7w ஆகும். துணியின் உலக உற்பத்தி 1c+2c=3c இவ்விரு நாடுகளும் முழுநயத்தின் அடிப்படையில் உற்பத்தியை மேற்கொண்டு வர்த்தகத்தில் ஈடுபடுமாயின் இவ்விரு நாடுகளும் தம்மிடமுள்ள 6 உழைப்பு காரணிகளையும் முழுநயம் உடைய ஒரு உற்பத்தி மீது பயன்படுத்துமாயின் USA கோதுமை உற்பத்தியிலும் UK துணி உற்பத்தியிலும் மட்டும் மேற்கொள்ளும். இதனால் அட்டவணை பின்வருமாறு அமையும்.

| பொருள் | USA | UK | உலகஉற்பத்தி |
|---|---|---|---|
| கோதுமை(ய) | 36 | 00 | 36 |
| துணி(c) | 00 | 12 | 12 |

## ஆகாரம்

இங்கு சர்வதேச மாற்று வீதமாக 6w=6c எனக்கொண்டு இவ்விரு நாடும் வர்த்தகத்தில் ஈடுபடுமாயின் உலக உற்பத்தி மட்டம் முன்னரைவிட கூடுதலாகவும் காணப்படுகின்றது. எனவே முன்புள்ள அதே வளங்களை கொண்டு இவ்விரு நாடும் கூடியளவு உற்பத்திகளை மேற்கொள்ள கூடியதாக உள்ளது. அதே போல இவ்விரு நாட்டினதும் நுகர்வு மட்டங்களும் அதிகரித்துள்ளது. USA இல் கோதுமை நுகர்வு தற்போது 30 அலகுகளாகவும் துணி நுகர்வு 6அலகுகளாகவும் காணப்படுகின்ற அதே நேரம் UK இல் கோதுமை நுகர்வு 6 அலகாகவும் துணி நுகர்வு 6 அலகாகவும் காணப்படுகிறது. எனவே UK இல் மேலதிகமாக கோதுமை 5 அலகுகளாகவும் துணி 4 அலகுகளாகவும் நுகர்வு அதிகரித்துள்ளது.

எனவே அடம்சிமித் உடைய முழுநய கோட்பாட்டின் படி வர்த்தகம் மூலம் இரு நாடுகளும் நன்மை பெறமுடிவதுடன் உலக உற்பத்தி ஆற்றலும் கூடும். அத்துடன் நுகர்வு

மட்டமும் கூடி வர்த்தகத்தையும் தூண்டும் என்றார்.

எனினும் இவரின் இக்கருத்து வர்த்தகம் சுதந்திரமாகவும், கட்டுப்பாடு அற்றும் உள்ள போதுதான் சாத்தியமானது. ஆனால் இது நடைமுறையில் இல்லை. பெரிய நாடுகள் சிறிய நாடுகளைச் சுரண்டுகின்ற தன்மை உள்ளது. அத்துடன் இன்று ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு பொருளில் முழுநயம் பெறும் என்றும் கூறமுடியாது. வளர்ந்த நாடுகள் சில பல்பொருட்களில் முழுநயம் பெற, வளர்முக நாடுகள் ஒரு பொருளிலும் முழுநயம் பெறாத நிலையும் உள்ளது. எனவே இக்கோட்பாடு குறைபாடுடையதாகவும் நடைமுறைக்கு பொருத்தமற்றதாகவும் விமர்சிக்கப்பட்டதால் தொடர்ந்து டேவிட் றிக்காடோவால் ஒப்பீட்டு நயக்கோட்பாடு முன்வைக்கப்பட்டது.

## 7.0 ஒப்பீட்டு நயக்கோட்பாடு

1817 இல் டேவிட் றிக்காடோ (David Ricardo) என்பவர் முன்வைத்த கோட்பாடே ஒப்பீட்டு நன்மை கோட்பாடாகும். இவர் எழுதிய Principle of political economy (அரசியல் பொருளாதார தத்துவங்கள்) என்ற நூலில் இது பற்றி விளக்கியுள்ளார்.

இவரின் கருத்துப்படி ஒரு நாடு எப்பொருளில் ஒப்பீட்டு நயத்தினை கூடுதலாக அனுபவிக்கின்றதோ அப்பொருளில் சிறப்புத்தேர்ச்சி பெற்று வர்த்தகத்தில் ஈடுபடு மற்றைய நாடு எப்பொருளில் ஒப்பீட்டு நயமின்மையை குறைவாக அனுபவிக்கின்றதோ அந்நாடு அப்பொருளின் சிறப்புத்தேர்ச்சி பெற்று வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலமும் இரு நாடுகளும் உற்பத்தியிலும் நுகர்விலும் நன்மையை அடையலாம் என்று விளக்கியுள்ளர் அதாவது மற்றைய நாட்டை விட குறித்த நாடு குறைந்த அமையச்செலவு கொண்ட பொருளை உற்பத்தி செய்யும் ஆற்றலே ஒப்பீட்டு நன்மை ஆகும். இந்த அடிப்படையில் விளக்கியுள்ள தால் ஒப்பீட்டு நன்மைக்கோட்பாடு என்ற பெயரைப்பெற்றது இவ்வகையில் நாடுகளுக் கிடையில் உள்ள காரணிகளின் அளவு, திறன் , விலைகள், வினைத்திறன், அளவுத்திட்ட விளைவுகள், தேவைகள் தெரிவுகள் போன்றன வேறுபடுகின்றமையே ஒப்பீட்டு நன்மையை தீர்மானிக்கின்றன எனலாம்.

| பொருள் | USA | UK |
|---|---|---|
| கோதுமை(W) புசல் | 6 | 1 |
| துணி (C) யார் | 4 | 2 |

குறைந்த அமையச்செலவு கொண்ட பொருளில் செயற்றிறன் அதாவது ஒப்பீட்டு நயம் காணப்படும். .தன்படி

| பொருள் | USA | UK |
|---|---|---|
| ஒரு அலகு கோதுமைக்கான அமையச் செலவு | 1w:2/3c | 1w:2c |
| ஒரு அலகு துணிக்கான அமையச் செலவு | 1c:3/2w | 1c:1/2w |

இங்கே USA கோதுமை உற்பத்தியில் குறைந்த அமையச் செலவினையும் UK துணியில் குறைந்த அமையச்செலவினையும் கொண்டுள்ளது இதனால் முறையே USA கோதுமையிலும் UK துணியிலும் ஒப்பீட்டு நயம் கொண்டுள்ளது. இதன்படி USA, wஐயும்UK,c ஐயும் உற்பத்தி செய்து சிறப்புத் தேர்ச்சி பெற்று வர்த்தகத்தில் ஈடு படுவதன் மூலம் இரு நாடுகளும் நன்மை பெறுவதுடன் உற்பத்தி, நுகர்வு ஆற்றலும் கூடும். இதனை பின்வருமாறு விளக்கலாம். USA, UK ஆகிய இரு நாடுகளிலும் தலா 6 உழைப்புக்காரணிகள் உள்ளது எனக் கொண்டு வர்த்தகம் நமைபெற முன்

USA SL ஐw இலும் 1Lஐ c யிலும் உற்பத்தி செய்ய 30w உம் 4c யும் UK

3Lஐw இலும்3L ஐC யிலும் உற்பத்தி செய்ய3w உம் 6cயும் உற்பத்தி நடைபெறும் வர்த்தகத்தின் பின் USA 6L ஐw இலும்UK 6L ஐC யிலும் பயன் படுத்தி உற்பத்தி செய்யும்போது 6w= 6c ஆக உலக வர்த்தக மாற்று வீதம் இருப்பின் (6 w= 4c க்கும் 1w:2c க்கும் இடையில் உலக வர்த்தக மாற்றுவீதம் அமையாது விடின் வர்த்தகம் நடைபெற நாடுகள் விரும்ப மாட்டாது) உலக உற்பத்தி , நுகர்வு பின்வருமாறு அமையும்

| | வர்த்தகத்தின் முன் | வர்த்தகத்தின் பின் | நன்மை |
|---|---|---|---|
| உலகஉற்பத்திw | 30w+3w | 36w | 3w |
| உலகஉற்பத்திc | 4c+6c | 12c | 2c |
| USAநுகர்வுw | 30w | 30w | - |
| USAசார்ந்தc | 4c | 6c | 2c |
| UKநுகர்வுw | 3w | w | 3w |
| UKநுகர்வுc | 6c | 6c | - |

எனவே USA 1/2 மனித மணித்தியாளமும் UK 1 மனித மணித்தியாளமும் சேமிக்க முடியும் அத்துடன் எந்த நாட்டின் உள்நாட்டு வர்த்தக மாற்று விகிதத்தை சர்வதேச வர்த்தக மாற்று வீதம் அண்மித்துள்ளதோ அதைவிட மற்றைய நாடு கூடிய நன்மை பெறும் உ+ம் 1w =2c ஐ அண்மித்து இருப்பின் USA கூடிய நன்மையையும் 6w= 4c ஐ அண்மித்து இருப்பின் UK கூடிய நன்மையையும் பெற்றுக்கொள்ளும் 6w=6c ஆக USA இன் 6w=4c இடையில் இருப்பதால் UK, USA ஐ விடக் கூடிய நன்மை பற்றுக் கொள்ளுவதைக் காணலாம்.

ஆயினும் நடைமுறையில் மாறாத செலவு காணப்படாது அதிகரித்துச் செலலும் செலவு காணப்படுகின்றமையும் ஊழியம் மட்டுமின்றி வேறு பல காரணிகளும் உற்பத்தியை தீர்மானிப்பதாலும் ஊழியப்பொறுமதிப்படி விளக்கப்பட்ட ஒப்பீட்டு நயக்கொட்பாடு கண்டணத்திற்கு உள்ளானது எனினும் 1936 ல் வந்த காபலர் என்பவர் தனிய உழைப்பை (Lஐ)மட்டும் காரணியாகக் கொண்டமை (4 காரணி உள்ள போது ) தொழில்களில் வேறுபட்டளவு ஊதியம் பயன்படுத்தல் (உ+ம் - புடவை, இரும்பு போன்ற உற்பத்தி) சகல ஊழியரும் ஒரே தன்மையைக் கொண்டிருக்காமை போன்ற வற்றை எடுத்துக்காட்டி சந்தர்ப்பச் செலவு அடிப்படையில் ஒப்பீட்டு நயக் கோட்பாட்டை விளக்கியமையால் ஒப்பீட்டுசெலவுக் கோட்பாடு என்றும் அழைக்கப்படுகின்றது.

## முடிவுரை

முழு நயக் கோட்பாட்டின் அடிப்படையில் நாடுகள் வர்த்தகத்தில் ஈடுபட வேண்டுமாயின் இன்றைய நிலையில் பெரும் பாலன வளர்முக நாடுகள் எந்த ஒரு பொருளையும் ஏற்றுமதி செய்ய முடியாத நிலை இருக்கும் ஏனெனில் வளர்ச்சியடைந்த நாடுகளே பொரும்பாலான பொருட்களில் முழு நயத்தினை அனுபவிக்கின்றன. பொரும்பாலான வளர்முக நாடுகள் எந்த ஒரு பொருளிலும் முழு நயத்தினை அனுபவிப்பதில்லை. முழுநயத்தை அனுபவிக்காவிடினும் இன்று எல்லா நாடுகளம் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றன. இந்நடைமுறை உண்மையை அடிப்படையாகக் கொண்டு இரு நாடுகளுக்கிடையில் சாதகமான முறையில் வர்த்தகம் அமைவதற்கு முழு நயம் அவசியமான ஒரு நிபந்நனையன்று ஒப்பீட்டு நன்மையே போதுமானது. எனவே இன்றைய சர்வதேச வர்த்தகம் ஒப்பீட்டுத்தன்மை அடிப்படையில் நடைபெற்று வருகின்றது.

## உசாத்துணைநூல்:

அபிவிருத்தி பொருளியல் இதழ் 1
சமூக ஒளி இதழ் 8



ஆக்கம்:
த. நிர்மலதாஸ்
A/L 2005 Com

# எல்லைக்கிரயவியலும், குறுங்காலத் தீர்மானமொடுத்தலும்

# (Marginal Costing and Short - term decisiton making)

எல்லைக்கிரயவியல் என்பது குறுங்காலத் தீர்மானமெடுத்தல் கருமத்திற்கு உதவுகின்ற ஒரு நுட்பமாகும். குறிப்பாக ஒரு பொருளை உற்பத்தி செய்வதா அல்லது கொள்வனவு செய்வதா என்பதைத் தீர்மானிப்பதற்கும், உற்பத்தியை மேற் கொள்ளும் போது கட்டுப்படுத்தும் காரணிகள் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் எல்லைக்கிரயவியல் தத்துவங்கள் பின்பற்றப்படுகின்றன. எல்லைக்கிரயவியலில் விற்பனை விலையிலிருந்து மாறும் கிரயம் கழிக்கப்பட்டு பெறப்படும் பங்களிப்பினடிப் படையிலேயே தீர்மானங்கள் மேற்கொள்ளப் படுகின்றன.

## 2. நிலையான கிரயமும், மாறும் கிரயமும் (Fixed Cost and variable cost)

வெளியீட்டு அலகுகளின் அதிகரிப் பால் அல்லது குறைவால் பாதிக்கப்படாத ஒரு கிரயமே நிலையான கிரயமாகும். நிலையான கிரயம் காலத்துடன் தொடர்புடையது. எனவே இது காலக்கிரயம் எனவும் அழைக்கப்படுகின்றது. மாறும் கிரயம் வெளியீட்டு அளவுடன் நேரடியாக மாறும். ஆனால் அலகிற்கான மாறும் கிரயம் நிலையானதாக இருக்கும்.

## 3. அலகிற்கான பங்களிப்பு அலகிற்கான உதவுதொகை (Cotribution per unit)

விற்பனைக்கும், எல்லைக் கிரயத்திற்கும் இடையிலான வேறுபாடு பங்களிப்பாகும். அதாவது அலகொன்றிற்கு விற்பனை விலையிலிருந்து அலகொன்றுக்கான எல்லைக்கிரயத்தைக் கழிக்கவருவதே அலகொன்றுக்கான பங்களிப்பு அல்லது அலகொன்றுக்கான உதவுதொகையாகும். எல்லைக்கிரயம் எனப்படுவது நேர்கூலி, நேர்மூலப்பொருள், நேர் பிறசெலவுகள், மாறும் மேந்தலை என்பவற்றைக் கொண்ட மாறும் கிரயமாகும். மொத்தப் பங்களிப்பானது நிலையான கிரயத்தை ஈடுசெய்ய போதுமானதாக இருக்கும். மொத்தப் பங்களிப்பு எனப்படுவது அலகொன்றிற்கான பங்களிப்பை மொத்த அலகுகளால் பெருக்க வருவதாகும். மொத்தப் பங்களிப்பில் நிலையான கிரயத்தை ஈடுசெய்த பின்னர் மீதியாக இருப்பது இலாபமாகும்.

எல்லைக் கிரயவியல் நுட்பமானது கிரயக்கணக்கியல் முறைமைக்கு அல்லது முகாமையின் தீர்மானமெடுத்தலுக்கு அடிப்படையாக அமைகிறது. இது குறுங்கால தீர்மானமெடுத்தலுக்கு மிக இன்றியமையாதது ஆகும். சில தீர்மான முறைகள் பின்வருமாறு நோக்கலாம்.

இலக்கியத்தில் நீந்தும் வணிக சுரபியே
நீ வாழ்க வழமுடன்!

# UNION ASSURANCE


# LIMITED


pel / fax 021- 2223753
mobile 0777238057


Branch office .
No 139 stanley road
Jaffna
C.N. Mathivathanan
Manager - Jaffna Region

Greetings on your book release!

# THAVANSON







For vaniha surabi

tlectrical goods PVT pipess/ fittingsete

**No 119,Kandy Road,.**
**Chavakacheri.**

வணிக சுரபியே வாழ்க

# அன்பு




## ஜுவலேர்ஸ்

தங்கப் பவுண் வியாபாரம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து
கொடுக்கப்படும்



உரிமையாளர்
க. பஞ்சலிங்கம்

*பிரதான வீதி,*
*மானிப்பாய்.*

---

வணிக சுரபிக்கு எமது
நல்வாழ்த்துக்கள்!

# SAYE DIGITAL COM

## VAN FOR HIRE




**PHOTO COPY,**
**INTERNET**
**IDD, LOCAL CALLS**

T.P - 021 222 3600
021 222 7131


Alady Junction,
Manipay.

---

வணிக சுரபியே நீ
பல்லாண்டு காலம் வாழ்க

# IYNKARAN MOTORS

*Market lane, Manipay.*



துவிச்சக்கரவண்டி உபகரணங்களையும்
